# முன்னோடி சுவிசேஷ ஊழியம்

புதிய ஏற்பாட்டு வழிமுறைகளில் சுய உதவியுடன் சபைகளை வளரச் செய்வதும்,
புதிய சபைகளை உருவாக்குவதும்

Thomas Wade and Barbara Akins

© Copyright
Junta de Missões Nacionais
Convenção Batista Brasileira
Rua Gonzaga Gastos, 300
Rio de Janeiro, R.J. 20-541-000. Brazil
All rights reserved.
Partial or entire copying of this book is permitted as long as its content is not modified.

Previous editions in Portuguese:

| | |
|---|---|
| 1991 | 1.200 copies |
| 1992 | 2.800 copies |
| 1993 | 2.000 copies |
| 1994 | 10.000 copies |
| 1995 | 10.000 copies |
| 1997 | 10.000 copies |
| 1999 | 10.000 copies |
| 2006 | 15,000 copies |

TOTAL: 61,000 copies

Previous editions in English:

| | |
|---|---|
| 1995 | 1.000 copies |
| 1999 | 5.000 copies |
| 2000 | 4.000 copies |

Previous editions in Spanish:

| | |
|---|---|
| 1999 | 3.000 copies |
| 1999 | 10.000 copies |
| 2006 | 10,000 copies |

2011 1,000 copies First Edition in Tamil

Published originally in Portuguese under the title *Evangelismo Pioneiro*.

Preliminary translation: Christy Akins Brawner
Final version: Juan Alberto Galvis
Electronic edition: Reynaldo Amaral

This book has been specifically updated and modified by approval of its author, Wade Akins in conjunction with the ministry of Training Pastors International.
Updated February 2011. Student's English (SE.11.5)

மின்னஞ்சல்: wade.akins@pobox.com
இணையதளம்: http://www.pioneerevangelism.org

# முன்னோடி சுவிசேஷ ஊழியம்

## உள்ளடக்கம்


முன்னோடி சுவிசேஷ ஊழியம் கையேட்டைப் பயன்படுத்துவது எப்படி? ... 8

முன்னோடி சுவிசேஷ ஊழியம் என்றால் என்ன? ... 10

யார் முன்னோடி சுவிசேஷகராக இருக்க முடியும்? ... 12

முன்னோடி சுவிசேஷத் தலைவரின் பொறுப்பு ... 15

சபைகளை வெற்றிகரமாகத் துவங்குவதற்கு 9 அடிப்படையான காரியங்கள் ... 19

சபைகள் துவங்கப்பட்ட பிறகு அவைகளை வளரச் செய்வதற்கு 6 திறவுகோல்கள் ... 22

புதிய ஏற்பாட்டுச் சபையின் 3 பண்புகள் ... 26

உங்கள் அணிக்கு நீங்கள் போதிக்கும் முதல் காரியம்:

புதிய குழுக்களை / புதிய சபைகளைத் துவங்குவது எப்படி? ... 33

- படி 1: சமாதானத்தை நாடுபவரைக் கண்டுபிடிப்பது எப்படி? ... 33
- படி 2: செயல்பூர்வமான வழியில் தேவ அன்பைக் காட்டுவது எப்படி? ... 35
- படி 3: வேதாகம ஆய்வுகளை வழிநடத்துவது எப்படி? ... 37
- படி 4: அயிக்கோஸ் கொள்கையைப் பின்பற்றுவது எப்படி? ... 40

உங்கள் அணிக்கு நீங்கள் போதிக்கும் இரண்டாவது காரியம்: பரிசுத்த ஆவியானவர் ... 40

உங்கள் அணிக்கு நீங்கள் போதிக்கும் மூன்றாவது காரியம்: ஜெபம் ... 44

உங்கள் அணிக்கு நீங்கள் போதிக்கும் நான்காவது காரியம்: இரட்சிப்பு ... 49

உங்கள் அணிக்கு நீங்கள் போதிக்கும் ஐந்தாவது காரியம்: தனிப்பட்ட சாட்சி ... 52

உங்கள் அணிக்கு நீங்கள் போதிக்கும் ஆறாவது காரியம்: சுவிசேஷத்தை விளக்கிக் கூறும் ஆறு வசனங்கள் ... 54

திட்டம்: புதிய குழுக்களையும், புதிய சபைகளையும் பெருக்கமடையச் செய்வதற்கான செயல்தந்திரம் ... 58

பிற்சேர்க்கைகள் ... 72

# அறிமுகம்

*"ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு. சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும். நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று" 2 தீமோத்தேயு 4:3-5*

கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக இருந்ததுபோலவே இன்றைய உலகம் புதுமையான காரியங்களைச் செய்வதில் ஆழ்ந்திருக்கிறது. சுவிசேஷ ஊழியத்தைக் குறித்து - இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக ஒவ்வொரு நபரின் உண்மையான பொறுப்பைக் குறித்து - எடுத்துச் சொல்லுவது கடினமான காரியமாகும்.

முன்னோடி சுவிசேஷ ஊழியத்தைப் பற்றி எழுதுவது இன்னும் கடினமான காரியமாகும். அதிசயிக்க வைக்கும் ஆதாரங்களோ அல்லது வியக்கவைக்கும் கொள்கைகளோ இல்லை, விவரக் கட்டுரைகளை நாம் கேள்விப்படவும் இல்லை. ஒவ்வொரு நபரும் தனது வாழ்க்கையில் இயேசுகிறிஸ்துவை அறிவதையே முன்னுரிமையாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதே முன்னோடி சுவிசேஷ ஊழியத்தின் நோக்கமாகும்.

**இந்த முயற்சியில் டாக்டர் அகின்சுக்கு நல்ல விளைபயன்கள் கிடைத்திருக்கின்றன. அவர் தனது தனிச்சிறப்பான நடையின் மூலம் இதைச் சாதித்திருக்கிறார். அவர் அனுபவ அறிவின் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறபடியால் இதைச் செய்ய முடிந்தது.**

தீமோத்தேயுவுக்குக் கொடுக்கப்பட்ட அதே தீவிரத்தோடுகூட நமக்கு இந்த வேதாகமக் கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது: "சுவிசேஷகனுடைய வேலையைச் செய்."

இது எளிமையானதும், நேரடியானதுமாகும், சுவிசேஷத்தைப் போலவே!

பாஸ்டர் இவோ அகஸ்டோ டியட்ஸ், பொதுச் செயலாளர்,

**பிரசீலிய பாப்டிஸ்ட் தேசிய அருட்பணி நிர்வாகக் குழு**

# நினைவுகூருகிறோம்...

**ஷெர்ரி டிகின்ஸ் அகின்ஸ்** பிரெசில் நாட்டில் முன்னோடி சுவிசேஷ ஊழியச் செயல்திட்டத்தைத் துவங்கி, வளர்ச்சிபெறச் செய்வதில் தாமஸ் வேட் அகின்ஸ் என்பவரை ஊக்குவிப்பதற்காகத் தேவன் பயன்படுத்திய முக்கியமான நபராவார். எழுதுவதிலும், செயல்திட்டத்தை வளர்ச்சிபெறச் செய்வதிலும், துவங்குவதிலும் அதிகமான மணி நேரங்களைக் குடும்பத்தைவிட்டுத் தனிமையில் செலவிட வேண்டியிருக்கும் என்பதை உணர்ந்தபோது, அந்தச் செயல்திட்டத்தைத் தொடர வேண்டுமா என்ற போராட்டத்துக்கு தாமஸ் ஆளாகினார். ஒருநாள் மாலையில் அவர் தனது சந்தேகங்களைத் தன் மனைவி ஷெர்ரியோடு பகிர்ந்துகொண்டார். ஷெர்ரி அவரிடம் "தாமஸ் வேட் நீங்கள் அதைச் செய்ய வேண்டும்; இது பரிசுத்த ஆவியானவரின் ஊழியமாகும்" என்று கூறினார். முன்னோடி சுவிசேஷ ஊழியச் செயல்திட்டம் மெதுவாக வளர்ந்து, அவர் பிரேசிலில் தங்கியிருந்த மினாஸ் ஜெரையாஸ் மாநிலத்தில் மட்டுமில்லாமல், 1989ஆம் ஆண்டில் துவங்கி பிரேசில் நாட்டின் எல்லாப் பிராந்தியங்களிலும் பரவியது. ஷெர்ரி இந்த ஊழியத்துக்காகத் தனது வாழ்க்கையையே தியாகம்செய்தார்.

ஷெர்ரி ஸ்க்லோடெர்மா என்ற மரணத்துக்குள்ளாக்கும் நோயினால் பாதிக்கப்பட்டார். இது அவருடைய நுரையீரல், குடல்கள் மற்றும் முக்கிய உடல் உறுப்புக்களில் பாதிப்பை உண்டாக்கியது. இது 1992ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

பிரேசில் நாட்டை நிரந்தரமாக விட்டுவிட்டு, அமெரிக்காவுக்குத் திரும்பிச் சென்று அவருடைய பெற்றோருடன் இருக்க விரும்புகிறாரா என்று அவரிடம் கேட்டபோது அவர், "**எனது வாழ்க்கையிலும் எனது மரணத்திலும் இயேசுகிறிஸ்துவை மகிமைப்படுத்துவதே என் வாழ்க்கையின் நோக்கமாகும். தேவன் எங்களை பிரேசிலுக்கு அழைத்திருக்கிறார். இங்கே இருப்பதையே நான் விரும்புகிறேன்**" என்று பதிலளித்தார்.

1993ஆம் ஆண்டு டிசம்பர் 4ஆம் நாள் ஷெர்ரி சட்டென்று மயக்கமடைந்து, பிரேசிலில் மினாஸ் கெரையாசில் பேலோ ஹாரிஜான்டோ என்ற இடத்திலுள்ள அவர்களுடைய வீட்டில் மரித்துப்போனார். **ஷெர்ரி மெய்யாகவே தேவனுடைய சித்தத்துக்கேற்றபடி வாழ்ந்து, மரித்த ஒருவராக இருந்தார்!**

நீங்கள் எப்படி?

## *சமர்ப்பணம்*

*நான் இந்தக் கையேட்டின் இந்தப் பதிப்பை எனது அருமையான அன்பு மனைவி* ***பார்பரா ஆன் ஹாதோர்னுக்குச்*** *சமர்ப்பிக்கிறேன். அவள் எனக்குத் தேவ கிருபையின் ஈவாக இருக்கிறாள். இந்தக் கையேட்டின் விவரங்கள் பார்பராவுக்கு வெறும் கொள்கைகளாக மட்டும் இருக்கவில்லை. தேவன் அவளை ஆத்தும ஆதாயத்திலும், சபை ஸ்தாபிப்பதிலும் பயன்படுத்தியிருக்கிறார், பயன்படுத்தி வருகிறார். பிரேசில் முழுவதிலும் மற்றும் பிற நாடுகளிலும் முன்னோடி சுவிசேஷ ஊழியக் கருத்தரங்குகளின் மூலமாக மற்றவர்களுக்குப் பயிற்சியளிப்பதில் நாங்கள் ஒன்றாக ஊழியம் செய்யும்படி தேவன் எங்களை ஆசீர்வதித்து, அனுமதியளித்திருக்கிறார்.*

தாமஸ் வேட் அகின்ஸ்

# உதவிக்கு நன்றி

எனது அருட்பணிப் பேராசிரியராகிய **டாக்டர் கால் கை**யின் வாழ்க்கையும், தாக்கமும் இல்லாமல் என்னால் இந்தப் பயிற்சிக் கையேட்டை உருவாக்கியிருக்க முடியாது. டாக்டர் கை அவருடைய போதனைகளின் மூலமாக எனது வாழ்க்கையில் அற்புதமான தாக்கத்தை உண்டாக்கியிருக்கிறார். சவுத்வெஸ்டர்ன் இறையியல் கல்லூரியில் மூன்றாண்டுகள் அவருக்குக் கீழாகக் கற்றபிறகு, தேசத்தின் தலைநகரத்தில் மிகவும் வெற்றிகரமான ஊழியத்தை நடத்தி, விட்டுவிட்டு, பிரேசில் நாட்டில் அருட்பணித் தளத்துக்குச் சென்றேன். அவருடைய தொடர்ந்த கடிதங்களும் ஜெபங்களும் எனக்குப் பெரிய ஆசீர்வாதங்களாக இருந்தன. கடினமான வேளைகளில் எனக்கு ஊக்கமளிக்க தேவன் அவைகளைப் பயன்படுத்தினார். அவருடைய கருத்துக்களும் கருத்துப் படிவங்களும் மறுபடியும் மறுபடியுமாக இந்தக் கையேட்டில் பிரதிபலிக்கின்றன. லூசியானா கல்லூரி, நியூ ஆர்லியன்ஸ் இறையியல் கல்லூரி மற்றும் சவுத்வெஸ்டர்ன் இறையியல் கல்லூரியில் எனக்குப் போதித்த எல்லாப் பேராசிரியர்களுக்கும் நான் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிறுவனங்களில் நான் பெற்ற பயிற்சியின் மூலமாக எப்படி ஆய்வுசெய்வது, எப்படிச் செயல்படும் செயல்திட்டங்களை உருவாக்கி எழுதுவது என்பவைகளைக் கற்றுக்கொண்டேன்.

இந்தப் புத்தகத்தில் காணப்படும் பல கருத்துக்களை உருவாக்குவதில் எனக்கு உதவிய டாக்டர் டென்னிஸ் பிளேக்மோனுக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். சபை ஸ்தாபித்தல் குறித்த அவருடைய குறிப்புகள் எனக்கு அதிக உதவியாக இருந்தன. துவக்கத்திலிருந்தே இந்தச் செயல்திட்டத்தை எழுதிச் செயல்படுத்துமாறு டாக்டர் பிளேக்மோன் என்னை அடிக்கடி அழைத்து, ஊக்குவித்திருக்கிறார். அவருடைய ஆலோசனைகளும், கருத்துக்களும் அதிக உதவியாகவும், மதிப்புள்ளவைகளாகவும் இருந்தன. டாக்டர் பிளேக்மோனின் குறிப்புக்களை மட்டுமின்றி, நான் மெல்வின் ஹோட்ஜஸ் எழுதிய *The Indegenous Church*, சார்ல்ஸ் புரோக் எழுதிய *Indegenous Church Planting* மற்றும் பிற நூல்களையும் பயன்படுத்தியிருக்கிறேன்.

**டாக்டர் சார்ல்ஸ் புரோக்** முன்பு பிலிப்பைன்ஸ் நாட்டில் அருட்பணியாளராக ஊழியம் செய்தவர். Broadman Press பதிப்பகத்தார் வெளியிட்ட *Indegenous Church Planting* என்ற நூல் என்னுடைய வாழ்க்கையில் அதிகமான தாக்கத்தை உண்டாக்கியிருக்கிறது. அவருடைய கருத்துக்கள் இந்தச் செயல்திட்டத்துக்கு அஸ்திபாரமாக இருக்கின்றன. **டாக்டர் வேய்லான் மூர்** யோவான் சுவிசேஷத்தின் அடிப்படையில் "தேவனிடமிருந்து நற்செய்தி" என்ற தலைப்பில் முன்னோடி சுவிசேஷ ஊழியத்துக்குரிய வேதாகம ஆய்வுகளை எழுதியிருக்கிறார். என்னைச் சீஷராக்குவதற்குத் தேவன் டாக்டர் மூரைப் பயன்படுத்தியிருக்கிறார். அவரை அறிந்த எல்லோருக்கும் அவர் இயேசுவின் வாழ்க்கை மற்றும் ஊழியத்துக்கு முன்மாதிரியாக இருக்கிறார்.

கிறிஸ்துவுக்குள் எனது சகோதரனாகிய **மரியோ இகெடா**வை நான் குறிப்பிட விரும்புகிறேன். அவர் பிரேசில் தேசிய கன்வென்ஷனின் சுவிசேஷ ஊழியப் பிரிவில் முன்னாள் இயக்குநராக இருந்தவர். இந்தக் கையேட்டை எழுதி செயல்திட்டத்தைத் துவங்குவதில் அவர் எனக்கு அதிக உதவி புரிந்திருக்கிறார். மினாஸ் கெரையாஸ் மாநிலத்தில் நான் இந்தச் செயல்திட்டத்தைத் துவங்கியபோது, மரியோ பாலா மாநிலத்தில் அதைத் துவங்கினார். மரியோவின் உதவி இல்லாமல் முன்னோடி சுவிசேஷ ஊழியம் ஒருபோதும் பிரேசில் நாட்டில் தேசிய மட்டத்தை எட்டியிருக்க முடியாது.

மினாஸ் கிரெயாஸ் மாநில கன்வென்ஷனின் நிர்வாகச் செயலாளராக இருக்கும் **பாஸ்டர் அலோஷியோ பெனிடோ பெர்தோ** அவர்களுக்கு நான் நன்றி கூற விரும்புகிறேன். பிரேசில் நாடு முழுவதிலும் பயிற்சி மையங்களில் பாஸ்டர் அலோஷியோ எனக்குப் போதித்திருக்கிறார். மினாஸ் கெரையாஸ் மாநிலத்தில் இந்த முன்னோடி சுவிசேஷ ஊழியத்தை நடத்த அவர் எனக்கு முழு ஆதரவையும் கொடுத்திருக்கிறார். குறிப்பாக, துவக்கத்தில் சில போதகர்களும், தலைவர்களும் வேதாகமரீதியல்லாத பாரம்பரியங்களின் காரணமாகச் சில கருத்துக்களை விரும்பாதபோது இவர் எனக்கு உதவியாக இருந்திருக்கிறார். எடுத்துக்காட்டாக, ஒரு அபிஷேகம்பெற்ற போதகரோ, சொத்தோ அல்லது கட்டிடமோ இல்லாமல் ஒரு சபையை அமைக்க முடியாது என்று வேதாகமத்தில் எங்கேயாவது சொல்லப்பட்டிருக்கிறதா?

இந்தச் செயல்திட்டத்தின் பரிசோதனை மட்டத்தில் மினாஸ் கெரையாஸ் மாநிலம் முழுவதிலும் என்னோடுகூட ஊழியம் செய்த **நாற்பது ஆதி முன்னோடி சுவிசேஷர்களை** நான் பாராட்டியாக வேண்டும். ஒவ்வொருவரும் இரண்டாண்டுகள் கடுமையாக உழைத்த பிறகு அறுபத்து மூன்று புதிய அருட்பணி ஊழியங்கள் துவங்கப்பட்டன. செயல் திட்டத்தைச் சரிப்படுத்தி, மேம்படுத்துவதற்கு உதவியாக இந்தச் சுவிசேஷகர்கள் நல்ல மாதாந்திரப் பதிவேடுகளை உருவாக்கி, செயல்திட்டத்தின் ஒவ்வொரு கட்டத்தையும் சீர்தூக்கிப் பார்த்தார்கள். அவர்களுடைய ஊழியத்தின் விளைவாகத் துவக்கச் செயல்திட்டத்தில் பல மாற்றங்கள் உண்டாக்கப்பட்டன.

இதோடுகூட, இந்தச் செயல்திட்டம் முதலில் பிரேசில் நாட்டில் செயல்படுத்தப்பட்டபோது, பிரேசில் நாட்டின் பிராந்திய இயக்குநராக இருந்த **டாக்டர் பில் ரிச்சார்ட்சனுக்கு** நன்றி கூறுகிறேன். அவர் இந்தச் செயல்திட்டத்துக்கு ஒப்புதலளித்து, முதல் இரண்டு ஆண்டுகளில் முதல் குழுவினரை உருவாக்க உதவினார்.

சிங்கப்பூரில் அருட்பணியாளராக இருக்கும் **கர்ட்டிஸ் சார்ஜன்டுக்கு** நன்றி கூற வார்த்தைகள் போதாது. பிரேசில் நாட்டில் சாவோ பாலோவில் நடத்தப்பட்ட செயல்தந்திர ஒருங்கிணைப்பாளர்கள் பயிற்சிக் கருத்தரங்குகளில் நாங்கள் நண்பர்களானோம். கர்ட்டிஸ் ஆசியாவில் ஊழியம் செய்கிறார். அவருடைய பங்களிப்புக்களும், கருத்துக்களும் மதிப்புள்ளவையாகும். கதைசொல்லுதல் பகுதியில் பங்களித்த ஜே. ஓ. டெர்ரி, ஜேக்சன் டே இருவருக்கும் நான் நன்றி கூறுகிறேன்.

இறுதியாக, என்னுடைய ஊழியத்தில் பல வழிகளிலும் உதவி செய்து, எனது தனிப்பட்ட வாழ்க்கையில் கடினங்களை எதிர்நோக்கியபோது உடனிருந்து ஆதரவளித்த சில அன்பான, விசேஷித்த நண்பர்களுக்கு நன்றி கூற விரும்புகிறேன்: நான் இளவயதாக இருந்தபோது என்னைச் சீஷராக்கிய எனது போதகர் **டாக்டர் ரே. பி. ரஸ்ட்**; டெக்சாஸ், சான் அன்டோனியோவைச் சேர்ந்த சர்வதேசச் **சுவிசேஷகர் சாம்மி டிப்பிட்**; டென்னசி, ஜேக்சனிலுள்ள எஞ்சல்வுட் பேப்டிஸ்ட் சபையின் போதகராகிய **டாக்டர் பில். ஜெட்**; டென்னசி, ஜேக்சனைச் சேர்ந்த **திரு. மற்றும் திருமதி. கேரி ஏ. டேய்லர்**; தென் கரோலினா, ஹெல்த் ஸ்பிரிங்கைச் சேர்ந்த **திரு. மற்றும் திருமதி ரோன்னி மெக்கே**; ஆரிகான்,போர்ட்லாந்தைச் சேர்ந்த தொழிலதிபர் **திரு. கை ஓல்காட்**; சர்வ தேச திறந்தவெளி ஊழியர்கள் இயக்கத்தின் தலைவர் மற்றும் இயக்குநராகிய **டேவிட் வில்சன்**. இவர்கள் எல்லோரையும் தேவன் விசேஷித்த வகையில் எனது தனிப்பட்ட வாழ்க்கையிலும், ஊழியத்திலும் வல்லமையாகப் பயன்படுத்தியிருக்கிறார்.

என் இரண்டு மகன்களாகிய **டிம்** மற்றும் **ஜேசனை** நான் அதிகமாக நேசிக்கிறேன். இந்தக் கையேட்டைத் தயாரித்து, படங்களை வரைந்து உதவிய என் மருமகன் **ஜெஃப் பிராவ்னருக்கு** நன்றி கூறுகிறேன். இறுதியாக இந்த நூலைப் போர்ச்சுகீசிய மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த என் மகள் கிறிஸ்டிக்கு நன்றி கூறுகிறேன். அவள் “இயேசுவின் நற்செய்தி” மற்றும் “கிறிஸ்துவில் புதிய வாழ்க்கையைத் துவங்குதல்‘ ஆகிய கதைகளையும் எழுதியிருக்கிறாள்.

**கிறிஸ்டி, டிம், ஜேசன், நான் உங்களை நேசிக்கிறேன்.**

தாமஸ் வேட் அகின்ஸ்

## வரையறைகள்

**முன்னோடி -** புதிய ஊழியங்களைத் துவங்கி, புதிய சபைகளை ஸ்தாபிக்கும் நபர் அல்லது நபர்களை நாம் இப்படி அழைக்கிறோம்.

**சுவிசேஷ ஊழியம் -** “இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்தல்” என்பதே இதற்கு அர்த்தமாகும். 1 கொரிந்தியர் 15:3 வசனம் சுவிசேஷச் செய்தியைக் கூறுகிறது: “கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங் களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்தார்.” இதுவே சுவிசேஷத்தின் நற்செய்தியாகும். உலகத்தின் இழந்துபோன மக்களுக்கு இந்த நற்செய்தியை அறிவிப்பதே சுவிசேஷ ஊழியமாகும்.

# இந்த முன்னோடி சுவிசேஷ ஊழியக் கையேட்டைப் பயன்படுத்துவது எப்படி?

**இந்தப் புத்தகத்தில் மூன்று பகுதிகள் இருக்கின்றன:**

1. **கொள்கைகள்**
2. **செயல்படுத்துதல்**
3. **திட்டம்**

**கொள்கைகள்** வேதாகமரீதியான அடிப்படையில் சுவிசேஷ ஊழியம், சீஷத்துவம், சபை ஸ்தாபித்தல் ஆகியவற்றை வளரச்செய்ய உதவுகின்றன. வேதாகமம் தேவனுடைய பரிசுத்த வார்த்தையாக இருக்கிறபடியால், அது நாம் எப்படி வாழ வேண்டும், எப்படி அவருடைய ஊழியத்தை நடத்த வேண்டும் ஆகிய சத்தியத்தை நமக்குப் போதிக்கும் தேவனுடைய அதிகாரபூர்வமான புத்தகமாக இருக்கிறது. யார் ஊழியம் செய்ய வேண்டும், இயேசுவின் ஊழியம் மற்றும் அவருடைய ஊழியத்தின் மாதிரியின்படி நாம் ஊழியம் செய்வது எப்படி, சபையின் நோக்கம் இவை குறித்த அஸ்திபாரமான அறிவைக் கொடுப்பதற்காக இந்த வேதாகமக் கொள்கைகளைப் போதியுங்கள்.

**செயல்படுத்துதல்** பகுதி இரண்டு அம்சங்களில் “எப்படிச் செய்வது“ என்பது குறித்த படிப்படியான போதனையைக் கொடுக்கிறது:

சுவிசேஷ ஊழியம்: உங்களுடைய சபையை வளரச் செய்வதற்காகவோ அல்லது புதிய சபைகளைத் துவங்குவதற்காகவோ புதிய வேதாகம ஆய்வுக் குழுக்களைத் துவங்குவது எப்படி? இது இப்படிச் செய்யப்படுகிறது:

- தேவ சமாதானத்தைத் தேடும் மக்களைக் கண்டுபிடித்தல்.
- கிறிஸ்துவிடம் அவர்களைக் கொண்டுவரும்படி பரிசுத்த ஆவியானவர் யாரில் கிரியை செய்கிறாரோ அவர்களைக் கண்டுபிடித்து, தேவனுடைய அன்பை அவர்களோடு பகிர்ந்துகொள்ளுதல்.
- ஒரு தொடர்ந்த, சுவிசேஷரீதியான வேதாகம ஆய்வுகளின் மூலமாக அவர்களோடு சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ளுதல்.
- வேதாகம ஆய்வுகளின் மூலமாகப் புதிய விசுவாசிகளைச் சீஷராக்குதல்

சீஷத்துவம்: உங்கள் அணியினரை ஆவிக்குரிய ஒழுக்கங்களில் சீஷராக்குவது எப்படி?

**திட்டம்** பகுதி பெருக்கத்தின்மூலமாக வளருவது எப்படி என்பது குறித்த செயல்தந்திரத்தைக் கொடுக்கிறது. 2 தீமோத்தேயு 2:2 வசனத்தில் பவுல் செய்ததைச் செய்வதே இந்தக் கொள்கையாகும் - மற்றவர்களுக்குப் பயிற்சியளிக்கும் மற்றவர்களுக்குப் பயிற்சியளிக்கும்படி மற்றவர்களுக்குப் போதித்தல்.

வேதாகமக் கொள்கைகள்

# சுவிசேஷ ஊழியம், சீஷத்துவம் மற்றும் சபை ஸ்தாபித்தல்

## சுவிசேஷ ஊழியம், சீஷத்துவம், சபை ஸ்தாபித்தல் குறித்த வேதாகமக் கொள்கைகள்

*முன்னோடி சுவிசேஷ ஊழியம் என்றால் என்ன?*

இந்த ஊழியமானது, பிரேசில் நாட்டில் உள்ளூர் சபை ஸ்தாபிக்கும் சூழ்நிலையை ஆய்வுசெய்த பிறகு 1989ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. சதர்ன் பேப்டிஸ்ட் கன்வென்ஷனின் சர்வ தேச அருட்பணி நிர்வாகக் குழுவின் ஒரு அருட்பணியாளராக தாமஸ் வேட் அகின்ஸ் முதன்முறையாகப் பொறுப்பெடுத்துக்கொண்டார். ஓராண்டு மொழிக் கல்வியைக் கற்ற அவர் பணித்தளத்துக்கு வந்தபோது சபை ஸ்தாபிக்கும் திட்டமொன்றை உருவாக்கினார். இந்தக் காலகட்டத்தில் அவர் பிரேசில் நாட்டின் மினாஸ் ஜெரையாஸ் மாநிலத்தில் பன்னிரண்டு பேப்டிஸ்ட் சபைகளைத் துவக்கினார்.

விடுமுறைக்கு வந்துவிட்டுத் திரும்பிய பிறகு தாமஸ் வேட் ஊழியம் மிகவும் மெதுவாகச் செயல்படுவது போன்று உணர்ந்தார். சுவிசேஷ ஊழியத்தின் மற்றச் செயல்முறைகளைக் குறித்து அவர் படித்து ஆராயத் துவங்கினார். டாக்டர் சார்ல்ஸ் புரோக் எழுதிய *Indegenous Church Planting* என்ற நூல் அவருடைய ஆய்வுக்கு அதிக உதவியாக இருந்தது. வேதாகமம், டாக்டர் புரோக்கின் புத்தகம், இந்தக் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வேறு பல ஆதாரங்கள், அவர் பிரேசில் நாட்டில் முதன்முறையாக ஊழியம் செய்தபோது உருவாக்கிய சபை ஸ்தாபிக்கும் செயல்முறை இவைகளின் அடிப்படையில் தாமஸ் வேட் ஒரு பயிற்சி ஊழியத்தை வடிவமைத்தார்.

இந்தச் செயல்திட்டம் எழுத்து வடிவில் உருவாக்கப்பட்ட பிறகு, நாற்பது ஆண்களுக்கும் பெண்களுக்கும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும்படி பயிற்சி கொடுக்கப்பட்டது. அவர்கள் மினாஸ் ஜெரையாஸ் மாநிலத்தில் அறுபத்து மூன்று வெவ்வேறான பட்டணங்களுக்குச் சென்று, இரண்டு ஆண்டு காலகட்டத்தில் அந்தப் பட்டணங்கள் எல்லாவற்றிலும் புதிய சபைகளை ஸ்தாபித்தார்கள். இரண்டு ஆண்டுகளாக ஒவ்வொரு மாதமும் இந்த முன்னோடி சுவிசேஷகர்கள் மினாஸ் ஜெரையாஸ் பாப்டிஸ்ட் கன்வென்ஷனின் சுவிசேஷ ஊழியம் மற்றும் அருட்பணித் துறைக்கு அறிக்கை சமர்ப்பித்தார்கள். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு முழு ஊழியத்தையும் மறுஆய்வு செய்யும்படி ஒரு மதிப்பீட்டு அணி அமைக்கப்பட்டது. அடுத்த மூன்று ஆண்டுகளில் பிரேசில் நாட்டின் பிற பகுதிகளில் வேறு பல அணிகளும் உருவாக்கப்பட்டன. போதகர்களும், சாமானியர்களும், சுவிசேஷகர்களும், கன்வென்ஷன் தலைவர்களும் ஊழியத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் சீர்தூக்கிப் பார்த்தார்கள். **பன்னிரண்டு ஆண்டுகளில், 200 சபைகள் அமைக்கப்பட்டன; 179 சபைகள் துவங்கப்பட்டன; பிரேசில் நாட்டின் மினாஸ் ஷெரையாஸ் மாநிலத்தில் மட்டும் 383 போதனை மையங்கள் துவங்கப்பட்டன.** கிட்டத்தட்ட இந்த எல்லா ஊழியங்களும் முன்னோடி சுவிசேஷ ஊழியத்தில் ஈடுபட்டன. ஆய்வு மற்றும் கன்வென்ஷன் அறிக்கைகளில் இந்தப் புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 2000ஆவது ஆண்டுக்குள்ளாக நாடு முழுவதிலும் 20,000 பிரேசில் நாட்டவருக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டது. நாடு முழுவதிலும் 1000க்கும் மேற்பட்ட புதிய ஊழியங்கள் துவங்கப்பட்டிருந்தன. இன்று உலகெங்கிலும் புதிய ஊழியங்களைத் துவங்கும்படி ஒவ்வொரு ஆண்டும் நூற்றுக்கணக்கான முன்னோடி சுவிசேஷ ஊழிய அணிகள் உருவாக்கப்படுகின்றன.

இந்தச் செயல்திட்டத்தைச் செயலாக்கிய நூற்றுக்கணக்கான ஆண்கள் மற்றும் பெண்களின் ஊழியத்தின் விளைவாக இந்தப் பயிற்சிக் கையேடும் செயல்முறையும் உருவாக்கப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான எட்டப்படாத மக்களை எட்டவும், புதிய சபைகளைத் துவங்கும்படி ஆயிரக்கணக்கான போதகர்களுக்கும், அருட்பணியாளர்களுக்கும், சாமானியர்களுக்கும் பயிற்சியளிக்கும்படியும் தேவன் இவர்களைப் பயன்படுத்தியிருக்கிறார். இவர்கள் எல்லோரும் இந்தக் கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ள அடிப்படைக் கொள்கைகளைக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் கொள்கைகள் உலகளாவியவை, உலகத்தின் எந்தக் கலாச்சாரத்திலும், நாட்டிலும் இதைச் செயல்படுத்த முடியும். சபைகள் இல்லாத இடங்களுக்குச் (முன்னோடிப் பகுதிகள்) சென்று, **கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தி, புதிய ஊழியங்களைத் துவங்கும்படி அவர்களுக்குப் பயிற்சியளிப்பதே முன்னோடி சுவிசேஷ ஊழியச் செயல்முறையாகும்.**

இன்று "நாம் எப்படிச் சுவிசேஷத்தைத் துரிதமாக அறிவித்து, சபைகளை உருவாக்குவது?" என்பதே முக்கியமான கேள்வியாகும். புதிய ஊழியங்களை எப்படித் துவங்கி, வளர்ச்சிபெறச் செய்வது எப்படி என்று முழு உலகத்திலுமுள்ள சாமானிய சுவிசேஷகர்களுக்குப் பயிற்சியளிப்பதே இதற்குரிய பதில் என்பது எனது கருத்தாகும்.

இன்றைய நவீன சமுதாயத்தில் தலைவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளைப் பார்ப்போம்:

1. தரிசனமில்லாமை
2. பயிற்சிபெறாத சாமானியர்கள்
3. ஆர்வக் குறைவு
4. சபை உறுப்பினர்களை இழந்துபோகுதல்
5. சபைகளுக்கு நடுவே ஒத்துழைப்பு இல்லாமை
6. பெரிய பட்டணங்களில் அடுக்குமாடி வீடுகளுக்குள் நுழைவதிலுள்ள கடினம்
7. நிலம் மற்றும் கட்டுமானத்துக்கு அதிகமாகச் செலவழிக்க வேண்டியிருப்பது.

இந்தப் பிரச்சினைகளை நம்மால் மேற்கொள்ள முடியுமா? நிச்சயமாக! உண்மையில், கிறிஸ்து ஏற்கெனவே இவைகளை நமக்காக ஜெயங்கொண்டிருக்கிறார். என்றாலும், நாம் வேதாகமத்தின் அடிப்படைச் செயல்முறைகளை மறுபடியுமாகக் கற்க வேண்டும். குறிப்பாக, நமக்கு முன்மாதிரி மிஷனரியாக இருக்கும் பவுல் அப்போஸ்தலனின் செயல்முறைகளைக் கற்க வேண்டும்.

பிரேசில் நாட்டில் மிஷனரியாக ஊழியம் செய்துவரும் டாக்டர் டென்னிஸ் பிளேக்மேன் புதிய சபைகளைத் துவங்குவதற்கு நான்கு அடிப்படைச் செயல்முறைகளை இனம்கண்டிருக்கிறார்.

**1. பாரம்பரியச் செயல்முறையைப் பின்பற்றும் சில விசுவாசிகளின் கூட்டம்**

a. எந்தப் பகுதியில் ஊழியம் செய்ய வேண்டும் என்பதைச் சபை தீர்மானிக்கிறது.

b. பிறகு சபை புதிய ஊழியத்தைத் துவங்கும்படி ஒரு ஊழியரை அழைக்கிறது.

c. ஊழியர் ஒரு புதிய குழு கூடிவரக்கூடிய இடத்தைக் கண்டுபிடிக்கிறார். வேதாகம ஆய்வுக்கும் ஆராதனைக்கும் வரும்படி மக்களை அழைக்கிறார்.

d. சபையானது அந்தப் பகுதியில் வசிக்கும் ஐந்து அல்லது அதற்கும் மேற்பட்ட கிறிஸ்தவர்களின் ஆதரவைப் பெறுகிறது.

e. சபையின் பொருளாதார உதவியோடு இந்த ஊழியரும், சில விசுவாசிகளும் ஒரு புதிய சபையைத் துவங்குகிறார்கள்.

f. இயல்பாகச் சபையே எல்லாத் தீர்மானங்களையும் எடுக்கிறது; புதிய சபையின் எல்லாச் செலவுகளையும் ஏற்றுக்கொள்ளுகிறது: சொத்து, கட்டிடம், சம்பளங்கள்.

**2. பாரம்பரியச் செயல்முறை இல்லாத விசுவாசிகளின் கூட்டம்**

புதிய ஊழியமானது அமைப்புரீதியாக ஒரு புதிய சபையாக உருவாகும் வரையில், முந்தைய செயல்முறையைப் போலவே சபையே எல்லாவற்றிலும் மேலாதிக்கம் செய்கிறது. ஆனால் உள்ளூர் விசுவாசிகளைக் கொண்ட ஆதி ஆதரவுக் குழு இருப்பதில்லை.

**3. சிறப்புச் செயல்திட்டச் செயல்முறை**

சபையானது ஊழியம் செய்யும் பகுதியையும், அதிகமான தாக்கத்தை விளைவிக்கக் கூடிய செயல்திட்டத்தையும் தீர்மானிக்கிறது. வேதாகம ஆய்வுகள் அல்லது எட்டப்படாத சமுதாயத்துக்கு ஊழியங்கள் போன்றவை சிறப்புச் செயல்திட்டங்களுக்கு எடுத்துக்காட்டுகளாக இருக்கின்றன. நிறுவனத்தின் சொந்தப் பொருளாதார மற்றும் ஆள்வசதி ஆதாரங்களுக்கேற்ப இந்தச் செயல்திட்டங்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, 1992ஆம் ஆண்டு ஒரு

பெரிய வெள்ளம் பிரேசில் நாட்டில் மினாஸ் ஜெரையாஸ் மாநிலத்தில் பாதிப்பை ஏற்படுத்தியது. நூற்றுக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை இழந்தார்கள். மக்கள் மறுபடியுமாகத் தங்கள் வீடுகளைக் கட்டுவதற்குத் தேவையான பணத்தை பார்பரா அகின்ஸ் தனது அருட்பணி அமைப்பிலிருந்து பெற்றுத் தந்தார். பட்டணத்தின் மேயர் நிலத்தைத் தானமாகக் கொடுத்தார். அவர்கள் ஒரு புதிய புறநகரப் பகுதியை உருவாக்கி, அதற்கு **பெத்தேல் - தேவனுடைய பட்டணம்** என்று பெயரிட்டார்கள். ஓராண்டில் அவர்கள் 70 வீடுகளைக் கட்டினார்கள். வீட்டு வேதாகம ஆய்வைத் துவங்கினார்கள். மக்கள் இரட்சிக்கப்பட்டார்கள், ஒரு புதிய சபை துவங்கப்பட்டது.

பெரும்பாலும், சிறப்புச் செயல்திட்டச் செயல்முறையைப் பயன்படுத்தி, ஒரு ஊழியர் ஒரு செயல்திட்டத்தை நிறைவேற்றும்படி அழைக்கப்படுகிறார். நிறுவனமோ அல்லது சபையோ கூடிவருவதற்கான ஒரு அரங்கத்தைக் கொடுத்து, அதிகாரபூர்வமாக ஒரு அருட்பணி மையத்தைத் துவக்கிவைக்கிறது.

சிறப்புச் செயல்திட்டச் செயல்முறையைப் பின்பற்றும்போது, முன்னோடிச் சுவிசேஷ ஊழியச் செயல்முறையில் பயன்படுத்தப்படும் அதே கொள்கைகளையோ அல்லது பண்புகளையோ அமுல்படுத்தலாம்: புதிய சபையைத் துவங்கும்படியாக, சிறப்புச் செயல்திட்டத்தினால் உதவி பெறுபவர்களின் வீடுகளில் வேதாகம ஆய்வுகளைத் துவங்கும்படி முன்னோடிகளுக்கும், சபை உறுப்பினர்களுக்கும் பயிற்சியளித்தல்.

4. **முன்னோடி சுவிசேஷ ஊழிய மாதிரி**

a. எந்தப் பகுதியில் ஊழியம் செய்ய வேண்டும் என்பதைச் சபை தீர்மானிக்கிறது.

b. இந்தப் பணியைச் செய்து முடிக்கும்படி போதகர் அல்லது தலைவர் ``முதிர்ச்சியடைந்த சாமானியர்களைத்" தெரிந்தெடுக்கிறார்.

c. போதகரோ அல்லது தலைவரோ சாமானியர்களுக்குப் பயிற்சியளித்து, அவர்களை ஆயத்தப்படுத்துகிறார். அவர்களுக்கு எப்படிப் பயிற்சியளிக்க வேண்டும் என்பதைக் காட்டுவதே இந்தக் கையேட்டின் நோக்கமாகும்.

d. கிறிஸ்தவர்களல்லாதவர்களின் வீடுகளில் வேதாகம ஆய்வுகளைத் துவங்குவதின் மூலம் சாமானிய ஊழியர்கள் புதிய ஊழியத்தைத் துவங்குகிறார்கள்.

e. வேதாகம ஆய்வின் மூலம் வரும் புதிய விசுவாசிகள் ஒரு ஒப்புக்கொள்ளப்பட்ட இடத்தில் கூடிவருகிறார்கள். தேவனுடைய தலைமைத்துவத்தின் கீழாகச் சுய ஆளுகை கொண்ட, சுய ஆதாரம் கொண்ட, சுயமாகப் பிரச்சாரம் செய்யும் புதிய சபை துவங்கப்படுகிறது.

f. ஆதரவளிக்கும் சபை காட்டிய இடத்தில் துவக்கத்திலிருந்தே புதிய குழுவினர் தங்கள் சொந்தத் தீர்மானங்களை எடுக்கும்படியும், சொந்தச் செலவுகளைக் கவனித்துக்கொள்ளும்படியும் முன்னோடி சுவிசேஷகர் அவர்களை வழிநடத்துகிறார். விசுவாசிகளின் புதிய குழுவினர் ஒரு கட்டிடத்தை வாடகைக்கு எடுக்க விரும்பினாலோ அல்லது கட்ட விரும்பினாலோ அதற்கான தொகையை அவர்களே செலுத்த வேண்டும். ஒரு ஊழியருக்கு அவர்கள் சம்பளம் கொடுக்க விரும்பினாலும், அதையும் அவர்களே கொடுக்க வேண்டும்.

## *யார் ஒரு முன்னோடி சுவிசேஷகராக இருக்க முடியும்?*

பவுல் அப்போஸ்தலன் சபைகளை ஸ்தாபிப்பதில் கீழ்க்கண்ட செய்முறையைப் பின்பற்றினார்:

1. அவர் ஒரு பட்டணத்துக்குள் நுழைந்தார். அப்போஸ்தலர் 13:5,6,14; 14:1,6,24,25- முதல் பயணம். அப்போஸ்தலர் 16:12; 17:1,10,15; 18:1,19 - இரண்டாவது பயணம். அப்போஸ்தலர் 19:1; 20:2 - மூன்றாவது பயணம்.

2. அவர் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்: அப்போஸ்தலர் 14:3,7,21,25

3. அவர் இழந்துபோன ஆத்துமாக்களைக் கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தினார்: அப்போஸ் தலர் 14:1,21, 19:8,

4. அவர் புதிய விசுவாசிகளுக்குப் போதித்தார்: அப்போஸ்தலர் 14:22, 18:23; 19:9,10

5. அவர் உள்ளூர் தலைவர்களுக்குப் பயிற்சியளித்து, அவர்களை ஆயத்தப்படுத்தினார்: அப்போஸ்தலர் 14:27, 15:36, 16:5, 20:20

6. அவர் சபைகளை நிறுவினார், உள்ளூர் சபையின் தலைமைப் பொறுப்பை எடுத்துக் கொள்ளும்படி மூப்பர்களை (உள்ளூர் தலைவர்களை) தெரிந்தெடுத்தார்: அப்போஸ்தலர் 14: 23, 20:17, 28

7. அவர் அந்தப் பட்டணத்தைவிட்டு, மற்றொரு பட்டணத்துக்குச் சென்றார்: அப்போஸ்தலர் 20: 36-38.

முன்னோடி சுவிசேஷகர்கள் சுவிசேஷத்தை அறிவித்து, புதிய சபைகளைத் துவங்கும்போது, இதுவே அவர்களுடைய செயல்முறையாக இருக்க வேண்டும்.

இப்போது "யார் ஒரு முன்னோடி சுவிசேஷகராக இருக்க முடியும்?" என்பது இப்போதுள்ள கேள்வியாகும். இந்தக் கேள்விக்குப் பதிலளிக்க வேண்டுமானால், நாம் எபேசியர் 4:12-13 வசனங்களை ஆய்வுசெய்ய வேண்டும். இந்தப் பகுதியில் சபையின் பல செயல்பாடுகள் பட்டியலிடப்பட்டுள்ளன.

இவைகளில் முதலாவது "**அப்போஸ்தலர்**" என்பதாகும். இரண்டு வகைப்பட்ட அப்போஸ்தலர்கள் இருக்கிறார்கள். இயேசுவின் முதல் சீஷர்களும் அப்போஸ்தலர்களேயாவர். பவுல் ஒரு அப்போஸ்தலன். "*அப்போஸ்தலர்*" என்ற சொல்லுக்கு "***அனுப்பப்பட்ட ஒருவர்***" என்று அர்த்தமாகும்.

இரண்டாவது குழுவினர் "**தீர்க்கதரிசிகள்**" என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் பிரசங்கம் செய்பவர்களாவர். "தீர்க்கதரிசி" என்ற சொல் வேதாகமத்தில் 242 முறை வருகிறது. அவர்களின் முக்கிய செயல்பாட்டை உபாகமம் 18:18 வசனம் இப்படி விவரிக்கிறது: "***உன்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன்; நான் அவருக்குக் கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார்.***"

ஆரோன் (யாத். 7:1), மோசே, எலிசா, ஏசாயா, எரேமியா, தானியேல் இவர்கள் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளில் சிலராவர். ஏசாயாவின் மனைவியும் தீர்க்கதரிசியானவளாக இருந்தாள் (ஏசாயா 8:3). புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்து, அகபு (அப். 21:10), பிலிப்புவின் கன்னிகைகளாகிய நான்கு குமாரத்திகள் (அப். 21:9) ஆகியோார் தீர்க்கதரிசிகளுக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறார்கள்.

மூன்றாவது குழுவினர் "**சுவிசேஷகர்**" என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் இழந்துபோன ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தும் நோக்கத்தோடு இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்கிறார்கள். (**முன்னோடி சுவிசேஷ ஊழியத்தில் இவர்களையே நாம் "முன்னோடிகள்" என்று அழைக்கிறோம்**). புதிய ஏற்பாட்டில் பிலிப்பு ஒரு சாமானியராகவும், உதவிக்காரராகவும் சுவிசேஷகராகவும் இருந்தார். "***மறுநாளிலே பவுலைச் சேர்ந்தவர்களாகிய நாங்கள் புறப்பட்டுச் செசரியாபட்டணத்துக்கு வந்து, ஏழுபேரில் ஒருவனாகிய பிலிப்பென்னும் சுவிசேஷகனுடைய வீட்டிலே பிரவேசித்து, அவனிடத்தில் தங்கினோம்***" என்று அப்போஸ்தலர் 21:8 வசனம் கூறுகிறது. அவர் இழந்துபோன மக்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்த சாமானியராக இருந்தார். அப்போஸ்தலர் 8:12 வசனம் "***தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக்குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்***" என்று கூறுகிறது. இன்று உலகெங்கிலும் ஆண்களும் பெண்களும் புதிய சபைகளைத் துவங்குவதில் அருட்பணியாளர்களின் பொறுப்பை நிறைவேற்றுகிறார்கள்.

நான்காவது ஊழியம் "**மேய்ப்பர்-போதகர்**" என்று அழைக்கப்படுகிறது. மேய்ப்பர்கள் அடிப்படையில் பயிற்சிகொடுப்பவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் மக்களைத் தேவனுடைய வழியில் வழிநடத்தும்

ஆவிக்குரிய தலைவர்களாகவும், சேவகர்களாகவும் இருக்கிறார்கள். இவர் போதகரின் வரத்தைப் பெற்றவராகவும் "ஆயத்தப்படுத்துகிறவராகவும்" இருக்க வேண்டும்.

ஒவ்வொரு கிறிஸ்தவரும் கிறிஸ்துவுக்குள் மனமாற்றம் பெறும் வேளையில் பரிசுத்த ஆவியானவர் அவருடைய இருதயத்துக்குள் வருகிறார், பரிசுத்த ஆவியானவரின் வரம் அவருக்கு அருளப்படுகிறது. "***அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள்***" என்று 1 பேதுரு 4:10 வசனம் கூறுகிறது. எபேசியர் 4:12-13 வசனங்களின்படி சபையின் உறுப்பினர்களாக இருக்கும் சிலர் சுவிசேஷராகச் செயல்படும்படியான வரத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

யார் ஒரு முன்னோடியாக இருக்க முடியும்? யார் சுவிசேஷத்தை அறிவித்து, சீஷராக்கி, புதிய சபைகளைத் துவக்க முடியும்? ஒரு போதகர் முன்னோடியாக இருக்க முடியுமா? ஒரு சமானியர் முன்னோடியாக இருக்க முடியுமா? ஒரு உள்ளூர் தலைவர் முன்னோடியாக இருக்க முடியுமா? ஒரு வழக்கறிஞர் முன்னோடியாக இருக்க முடியுமா? ஒரு ஆசிரியர் முன்னோடியாக இருக்க முடியுமா? ஒரு அருட்பணியாளர் முன்னோடியாக இருக்க முடியுமா?

ஒரு சுவிசேஷகருக்கான அழைப்பைப் பெற்று, வேதாகமரீதியான தகுதிகளைக் கொண்டிருக்கும் எல்லோரும் ஒரு முன்னோடியாக இருக்க முடியும். ஒருவர் போதகராக இருந்தாலும், சாமானியராக இருந்தாலும் அவர் முன்னோடியாக இருப்பதற்கான தகுதிகள் யாவை?

1. அவர் இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டும் (அப். 9).
2. அழைப்பைப் பெற்றிருக்க வேண்டும் (கலாத்தியர் 1:15-16)
3. பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும் (கலாத்தியர் 5:16; எபேசியர் 5:18; அப்போஸ்தலர் 13:9).
4. தேவனுடைய வார்த்தையை எப்படிப் பயன்படுத்துவது என்று அறிந்திருக்க வேண்டும் (2 தீமோத்தேயு 2:15).
5. தேவனைப் பிரியப்படுத்தி, அவருக்குக் கீழ்ப்படிய வாஞ்சை கொண்டிருக்க வேண்டும் (1 தெசலோனிக்கேயர் 2:4).
6. புதிதாக மனம் மாறியவர்களிடம் அன்பு காட்டி, அவர்கள் மேல் அக்கறை கொள்ள வேண்டும் (1 தெசலோனிக்கேயர் 2:7-12; தீத்து 1:9).
7. எப்படி ஜெபிப்பது என்பதை அறிந்திருக்க வேண்டும் (1 தெசலோனிக்கேயர் 1:2; கொலோசெயர் 4:2-6).
8. ஒரு பரிசுத்தமான வாழ்க்கை வாழ வேண்டும் (1 தீமோத்தேயு 5:22; தீத்து 1:7-8).
9. வார்த்தைக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் (தீத்து 1:9).

***ஒரு சுவிசேஷகனுக்குரிய வரத்தையும், செயல்பாட்டையும் பெற்ற முதிர்ச்சியடைந்த சாமானிய மக்கள் அந்த வரத்தைச் செயல்படுத்தும்படி அவர்களுக்குப் பயிற்சியளித்து, ஒவ்வொரு நகரத்திலும், பட்டணத்திலும், கிராமத்திலும் ஒரு புதிய சபையைத் துவங்காவிட்டால், நாட்டை எப்படிக் கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்த முடியும்? முழு உலகத்தையும் கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தக் கூடிய அளவுக்குப் போதுமான போதகர்கள் இல்லை. தேவனுடைய மக்களுக்கு இந்தப் பணிக்கான பயிற்சி கொடுக்கப்பட வேண்டும்!***

பிரசங்கியார்-ஆசிரியர்கள் வேதாகமரீதியான தகுதிகளைப் பெற்ற அதிகமான சாமானியர்களைக் கொண்ட பெரிய சேனைக்குப் பயிற்சி கொடுப்பார்களானால், முழு உலகத்திலுள்ள எல்லாப் பட்டணங்களிலும், அண்டைப் பகுதிகளிலும், கிராமங்களிலும் சபைகளைத் துவங்கும் இலக்கை எட்ட முடியும்!

*முன்னோடி சுவிசேஷத் தலைவரின் பொறுப்பு*

**போதகர், சுவிசேஷகர் அல்லது முன்னோடி சாமானியத் தலைவரின் அடிப்படைப் பங்கு என்ன? அவரே எல்லாவற்றையும் செய்ய வேண்டுமா? இல்லை!!! அவர் தனது மக்களுக்காக ஊழியம் செய்யும் ஆவிக்குரிய தலைவராக இருக்கிறார்.**

ஒரு போதகரின் அடிப்படைப் பங்கு என்ன என்பதைக் குறித்து எபேசியர் 4:12, 13 வசனங்கள் தெளிவாக விளக்கியிருக்கின்றன. "பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும்" தேவன் சபைக்கு மேய்ப்பர்-போதகர்களைக் கொடுத்திருக்கிறார். இவர்கள் வெறுமனே கோட்பாடுகளைக் கற்றுக்கொள்ளும்படி அல்ல, "செயல்பூர்வமான" ஊழியத்தைச் செய்யும்படி அவர்களை ஆயத்தப்படுத்த வேண்டும். **அதாவது, சாமானியர்கள் தேவன் அவர்களுக்குக் கொடுத்திருக்கும் ஊழியங்களை நிறைவேற்றும்படியாக, அவர்களுக்குப் பயிற்சியளித்து, ஆயத்தப்படுத்துவதே ஒரு போதகர் அல்லது தலைவரின் அடிப்பைப் பொறுப்பாகும்**.

ஒரு போதகரின் செயல்பாட்டைக் குறித்த சிறப்பான எடுத்துக்காட்டைப் பெற வேண்டுமானால் ஒரு கால்பந்து அணியை நினைத்துப் பாருங்கள். இந்த அணியில் விளையாட்டுவீரர்களும் பயிற்சியாளரும் இருக்கிறார்கள். பயிற்சியாளர் ஆடுகளத்தில் இறங்கி விளையாடுகிறாரா அல்லது அவர் விளையாடும்படி வீரர்களுக்குப் போதிக்கிறாரா? எப்படி விளையாட வேண்டுமென்று அவர் வீரர்களுக்குப் போதிக்கிறார் என்பதே சரியான பதிலாகும்.

ஒரு சபையின் போதகரோ அல்லது ஒரு சபை அல்லது ஊழியத்தின் சாமானியத் தலைவரோ உறுப்பினர்களுக்காக ஊழியத்தைச் செய்யக் **கூடாது**. "எப்படி" ஊழியம் செய்ய வேண்டுமென்று அவர்களுக்குப் போதிக்க வேண்டும். தான் செய்யும் எல்லாவற்றையும் "எப்படி" செய்வது என்று தனது உறுப்பினர்களுக்குப் போதிக்க வேண்டும். அதாவது, சாட்சி கூறுவது, பிரசங்கம் செய்வது, ஞானஸ்நானம் கொடுப்பது, கர்த்தருடைய இராப்போஜனத்தைப் பகிர்ந்துகொடுப்பது இவைகளை எப்படிச் செய்வது என்று அவர்களுக்குப் போதிக்க வேண்டும்.

ஒருமுறை தாமஸ் வேட் ஒரு தொழிற்சாலையில் தச்சனுக்கு உதவியாளராகப் பணி செய்தார். அந்தத் தச்சர் ஒரு தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர். ஒருநாள் அந்தத் தச்சரும் தாமசும் ஒரு பெரிய ஏணியில் ஏறி வேலைசெய்துகொண்டிருந்தார்கள். அந்தத் தச்சர் பெரிய உருவம் கொண்டவர். ஏணியில் உயரத்தில் இருந்தபடியே அவரால் பலகையை வெட்ட முடியவில்லை. யாராவது பார்க்கிறார்களா என்று சுற்றிப்பார்த்த அவர் பிறகு தாமசிடம் "தாமஸ், நீ பலகையை வெட்டு" என்று கூறினார். "அதில் ஒன்றும் பிரச்சினை இல்லை. ஆனால் ஏன் அப்படிச் சுற்றுமுற்றும் பார்த்தீர்கள்?" என்று தாமஸ் கேட்டார். தாமஸ் தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவராக இராதபடியால் அவர் பலகையை வெட்டவோ அல்லது ஆணியடிக்கவோ அனுமதிக்கக் கூடாது என்று தச்சர் விளக்கினார்.

இன்றைய நாட்களின் ஊழியத்தில் இன்று பல நாடுகளில் சாராம்சத்தில் ஒரு "போதகர்களின் தொழிற்சங்கம்" இருப்பதுபோலவே தோன்றுகிறது. போதகர்களால் ஞானஸ்நானம் கொடுக்க முடியும், திருவிருந்தைப் பரிமாற முடியும், ஆனால் சாமானியர்களால் அப்படிச் செய்ய முடியாது. நாம் எல்லோருமே ஊழியர்கள் என்று தேவனுடைய வார்த்தை போதிக்கிறது. "ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும் ... பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்" என்று 1 பேதுரு 2:5 வசனம் சொல்லுகிறது. 1 பேதுரு 2:9 வசனம் "நீங்களோ ... தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" என்று சொல்லுகிறது.

கிறிஸ்துவுக்குள் ஒவ்வொரு விசுவாசியும் ஒரு ஆசாரியனாகவும், ஒரு ஊழியராகவும் இருக்கிறார். தேவனுடைய ராஜ்யத்தில் தொழிற்சங்கங்கள் கிடையாது. போதகர்கள் தங்களைச் சேவகர்களாகவும், ஆவிக்குரிய தலைவர்களாகவும் காண வேண்டும். இவர்கள் ஊழியத்தின் எல்லா அம்சங்களிலும் சமானியர்களை ஈடுபடுத்த வேண்டும்.

**இயேசு பன்னிரு சீஷர்களுக்குப் பயிற்சியளிக்க மூன்றாண்டுகளைச் செலவழித்தார். உலகத்தில் தாக்கத்தை விளைவிப்பது எப்படி என்பதற்கு அவர் மிகச் சரியான மாதிரியாக இருக்கிறார். அவர் ஒரு அடிப்படைக் கொள்கையைப் பயன்படுத்தினார் - பெருக்கமடையச் செய்தல். அவர் செய்ததை நாமும் செய்ய வேண்டும். அவர் என்ன செய்தார்?**

இயேசு இரண்டு வகைப்பட்ட ஊழியங்களைச் செய்தார்:

1. அவர் பொது ஊழியத்தைச் செய்தார். அவர் திரளான மக்களுக்குப் பிரசங்கித்தார்.
2. அவர் தனிப்பட்ட ஊழியத்தைச் செய்தார். அவருடைய தனிப்பட்ட ஊழியமே உலகத்தில் அதிகமான தாக்கத்தை விளைவித்தது.

**அவர் தன்னுடைய தனிப்பட்ட ஊழியத்தில் மூன்று காரியங்களைச் செய்தார்:**

1. **அவர் ஒரு சீஷர்களின் அணியை உருவாக்கினார்.** அவருடைய அணியில் எத்தனை பேர் இருந்தார்கள்? 12 நபர்கள். நீங்கள் 12 பேரோடு துவங்க வேண்டுமென்று அவசியமில்லை. ஒருவரோடு துவங்குங்கள். உங்களிடம் ஒருவரும் இல்லாவிட்டால் ஒருவரை ஆதாயப்படுத்துங்கள்.
2. **அவர் தமது அணிக்குப் பயிற்சியளித்தார்.** இந்தக் கையேட்டின் செயல்பாட்டுப் பகுதியில் உங்கள் அணியினருக்குப் பயிற்சியளிப்பது "எப்படி" என்று போதிக்கப்படும்.
3. **அவர் அந்த அணியினரை வெளியே அனுப்பினார்.** உங்கள் சபையை வளரச்செய்யும் படியாகவும், புதிய சபைகளை ஸ்தாபிக்கும்படியாகவும் உங்கள் அணி உறுப்பினர்களை வெளியே அனுப்புவது குறித்துப் பல செயல்தந்திரங்கள் உள்ளன. 12 பேரைக் கொண்ட ஒரு அணியை எப்படிப் பயன்படுத்துவது என்பது குறித்த எளிய கருத்துக்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

   - உங்களுடைய பட்டணத்தை அல்லது சமுதாயத்தைப் பன்னிரண்டு பகுதிகளாகப் பிரியுங்கள். உங்கள் அணி உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் அந்தப் பகுதிக்குத் தலைவராக நியமியுங்கள். பட்டணத்தின் அந்தப் பகுதியில் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு அவர்கள் பொறுப்பாக இருப்பார்கள்.
   - அவர்கள் புதிய ஊழியங்களைத் துவங்கும்படி 12 வெவ்வேறான அண்டைப் பகுதிகள், நகரங்கள், பட்டணங்கள் அல்லது கிராமங்களுக்குத் தலைவர்களாக அனுப்புங்கள்.
   - உங்கள் சபையை வளரச் செய்யும்படி சிலரைச் சுவிசேஷம் அறிவிக்கும்படி உங்கள் பகுதிக்கு அனுப்பலாம். புதிய ஊழியங்களைத் துவங்கும்படி மற்றவர்களை மற்ற அண்டைப் பகுதிகளுக்கும், நகரங்களுக்கும், பட்டணங்களுக்கும், கிராமங்களுக்கும் அனுப்பலாம். இது சமநிலையான அணுகுமுறையாகும்.

   (காலம் கடக்கும்போது, ஒவ்வொரு தலைவரும் தனக்கென இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்களைக் கொண்ட அணியை உருவாக்க வேண்டும். தான் கற்றுக்கொண்டவற்றை அந்த அணிக்குப் பயிற்சியளிக்கத் துவங்க வேண்டும். பிறகு தலைவரின் அணி உறுப்பினர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் சுவிசேஷத்தை அறிவிக்கவோ அல்லது புதிய ஊழியத்தைத் துவங்கவோ பொறுப்பைப் பெற்றிருப்பார்கள்).

**முன்னோடி சுவிசேஷகர் தலைவர் - Pioneer Evangelist Leader (PEL) சாமானிய மக்களைக் கொண்ட ஒரு சுவிசேஷ ஊழியம் - சீஷராக்கும் அணியையும் உருவாக்க வேண்டும். சுவிசேஷத்தை அறிவிக்கவும், சீஷராக்குவதிலும், சபை ஸ்தாபிப்பதிலும் இந்த அணிக்குப் பயிற்சியளிக்க வேண்டும். இதை எப்படிச் செய்வது என்று இந்தக் கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் முதலில் உங்கள் அணியை உருவாக்க வேண்டும். பயிற்சி கொடுக்கக்கூடிய விசுவாசிகள் இல்லாவிட்டால் முதலில் அவர்களை ஆதாயப்படுத்த வேண்டும். அவர்களைக் கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்திய பிறகு, அவர்களைச் சீஷராக்கி, சுவிசேஷ ஊழியம்-சீஷராக்குதல் அணியை உருவாக்க**

**வேண்டும். ஒரு சீஷர்களின் அணியை உருவாக்கி, முன்னோடி சுவிசேஷகர்களாக ஆகும்படி அவர்களுக்குப் பயிற்சியளித்து, அவர்களை வெளியே அனுப்புவதே உங்கள் செயல்நோக்கமாக இருக்க வேண்டும். இந்தச் சீஷர்களின் அணியையே நாங்கள் இந்தக் கையேட்டில் முன்னோடிகள் என்று அழைக்கிறோம். ஒவ்வொரு முன்னோடியும் ஒரு முன்னோடி சுவிசேஷத் தலைவராகி, தனக்குச் சொந்தமான சீஷர்கள்/ அல்லது முன்னோடிகளின் அணியை உருவாக்க வேண்டும் என்பதே இலக்காகும். இதுவே பெருக்கமடையும் செயல்முறையாகும்.**

இரண்டு வழிகளில் உங்களுடைய அணியை நீங்கள் உருவாக்குகிறீர்கள்:

1. பிரசங்க பீடத்திலிருந்து நீங்கள் ஒரு சீஷத்துவ ஊழிய அணியை உருவாக்கப் போகிறீர்கள் என்பதைப்பொதுவாக அறிவித்து,எல்லோரும்பங்கெடுக்கும்படிஅழைக்கவேண்டும்.தனிப்பட்ட முறையில் உங்களால் சேர்க்க முடியாதவர்களையும் தேவன் எழுப்புவார். எடுத்துக்காட்டாக, ஒரு வரிவசூலிப்பவனாக இருந்த மத்தேயுவை நீங்கள் சீஷராகத் தெரிந்துகொண்டிருப்பீர்களா?

2. தனியாக தேவனை நோக்கி ஜெபித்து, உங்களுடைய அணியில் யாரெல்லாம் இருப்பதை அவர் விரும்புகிறார் என்று வேண்டிக்கொள்ளுங்கள். பிறகு தனிப்பட்ட முறையில் அவர்களிடம் சென்று, உங்களுடைய சீஷத்துவ ஊழிய அணியில் சேரும்படி அவர்களை அழையுங்கள். வாரம் ஒருமுறை கூடிவருவீர்கள் என்பதை விளக்குங்கள். நீங்கள் அவர்களுக்குப் போதித்து, பயிற்சியளித்து, இயேசு கிறிஸ்துவுக்காக மக்களை ஆதாயப்படுத்தும்படி செயல் ஊழியத்துக்கு அனுப்புவீர்கள்.

முன்னோடி சுவிசேஷ ஊழியத்தில், முன்னோடி சுவிசேஷகர் தலைவருக்கு இரண்டு அடிப்படைப் பொறுப்புக்கள் உண்டு:

1. **சிறு குழுக்களாக ஒவ்வொரு முன்னோடி சுவிசேஷகருக்கும் தனித்தனியே பயிற்சியளிப்பதே அவருடைய முதல் அடிப்படைப் பொறுப்பாகும்**. இந்தப் பயிற்சியைப் பெரிய குழுக்களுக்குக் கொடுக்க முடியாது. சிறு குழுக்களாகவே அவர் அவர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும். எல்லாப் போதகர்கள் மற்றும்/அல்லது தலைவர்கள் ஒரு அணியை உருவாக்க வேண்டும். உங்கள் அணியில் ஒருவர் முதல் பன்னிருவரைச் சேர்த்துக்கொள்ளலாம். இவர்களே நீங்கள் பயிற்சியளிக்கும் உங்களுடைய சீஷர்களாக இருக்கிறார்கள். ஒரு அணியை உருவாக்கும்படியான விசுவாசிகள் உங்களிடம் இல்லாவிட்டால், நீங்கள் பூஜ்யத்திலிருந்து துவங்க வேண்டும். முதலில் அவர்களை ஆதாயப்படுத்தி, பிறகு உங்கள் அணியாக உருவாக்க வேண்டும். முன்னோடிகள் அல்லது சீஷர்களைக் கொண்ட ஒரு அணியை உருவாக்குவதே உங்கள் நோக்கமாக இருக்க வேண்டும். ஜெபித்தல், அறிக்கை சமர்ப்பித்தல், ஆலோசனை மற்றும் பயிற்சிக்காக உங்கள் அணி வாரம் ஒருமுறை கூடிவர வேண்டும்.

*சீஷர்களைப் பெருக்கமடையச் செய்தல்* என்ற தனது புத்தகத்தில் டாக்டர் வேய்லான் மூர் இப்படிச் சொல்லுகிறார்:

A. ஒரு எல்லையில்லாத தனிப்பட்ட ஊழியத்தைப் பெறுவதற்கு, சீஷராக்கும் செயல்தந்திரம் ஒரு செயல்முறையாகும்.

B. சீஷராக்குதலே அதிகமாக வளைந்துகொடுக்கக்கூடிய ஊழியமாகும்.

C. சுவிசேஷ ஊழியத்துக்காகக் கிறிஸ்துவின் சரீரத்தை ஊக்குவிப்பதற்குச் சீஷராக்குதலே விரைவானதும், அதிகப் பாதுகாப்பானதுமான வழியாகும்.

D. மற்ற எந்த ஊழியத்தையும்விடச் சீஷராக்குதலே நீண்ட கால அளவுக்குக் கனிகளை உருவாக்கக்கூடிய செயல்திறனைக் கொண்டிருக்கிறது.

E. சீஷராக்குதல் சபைக்காக முதிர்ச்சியடைந்த சாமானியத் தலைவர்களை உருவாக்குகிறது. இவர்கள் கிறிஸ்துவை மையமாகக் கொண்டவர்களாகவும், தேவனுடைய வார்த்தையை அறிந்தவர்களாகவும் இருக்கிறார்கள்.

2. **முன்னோடி சுவிசேஷகர் தலைவரின் இரண்டாவது பொறுப்பு முன்னோடி சுவிசேஷகர் களிடையே வாராந்திரத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளுவதேயாகும்**. தலைவர்

வாரந்தோறும் தனது முன்னோடி சுவிசேஷகர்களின் அணியோடு குறைந்தபட்சம் ஒரு மணி நேரத்தையாவது செலவிட வேண்டும். அவர்களுடைய வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும்படியாக அவர்களை வாரம் ஒருமுறையாவது சந்திக்க வேண்டும். இந்தக் கூட்டங்களில் செய்ய வேண்டியவை:

A. முன்னோடி சுவிசேஷகர் தலைவர் (Pioneer Evangelist Leader)கூட்டத்தை ஜெபத்தோடு துவங்க வேண்டும். நாம் ஒரு ஆவிக்குரிய யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறோம், ஜெபமே நமது ஒரே தற்காப்பாக இருக்கிறது.

B. கடந்த வாரத்தில் ஒவ்வொரு முன்னோடி சுவிசேஷகரும் பெற்ற வெற்றியைப் பகிர்ந்து கொள்ளுமாறு செய்யுங்கள்.

C. கடந்த வாரத்தில் முன்னோடி சுவிசேஷகர்கள் சந்தித்த பிரச்சினைகளைப் பகிர்ந்துகொள்ளு மாறு செய்து, அவைகளைக் குறித்துக்கொள்ளுங்கள்.

D. ஒவ்வொரு பிரச்சினையைக் குறித்தும் முன்னோடிகளுக்கு ஆலோசனை கூறுங்கள்.

E. **முன்னோடி ஊழியக்** கையேட்டின் செயல்பாட்டுப் பகுதியைப் பயன்படுத்தி அணி யினருக்குப் பயிற்சியளியுங்கள். எடுத்துக்காட்டாக, ஆத்தும ஆதாயம் செய்வது எப்படி என்பதை முன்னோடி ஊழியர் அறிந்திருப்பதை நிச்சயப்படுத்தும்வண்ணமாக "உங்கள் சாட்சியைக் கொடுப்பது எப்படி" அல்லது "சுவிசேஷ ஊழியம்" ஆகிய அத்தியாயங்களை மறுபடியுமாகப் படியுங்கள். அல்லது "ஜெபம்", "மறைமுகமான வழிமுறைகள்" அல்லது "உள்ளூர் தலைவர்களுக்குப் பயிற்சியளிப்பது எப்படி" போன்ற அத்தியாயங்களை மறுஆய்வு செய்வது தேவையாக இருக்கலாம். ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்க இந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

F. ஒரு பிரசங்கத்தை எழுதுவது எப்படி, ஆலோசனை கொடுப்பது எப்படி போன்ற ஊழியத்தின் செயல்பூர்வமான அம்சங்களைக் குறித்து அவர்களுக்குப் போதியுங்கள். இந்த முன்னோடிகளுக்குச் சரியாகப் பயிற்சியளிப்பது முன்னோடி சுவிசேஷகர் தலைவரின் பொறுப்பாகும்.

G. முன்னோடிகளுக்குப் பொதுவான போதனைகளைக் கொடுத்து, ஜெபத்தோடு கூட்டத்தை முடித்துவையுங்கள். ("முன்னோடிகளுக்கான வாராந்திர தொடர் ஊழியம்" என்ற அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டுள்ள மற்ற செயல்பூர்வமான ஆலோசனைகளையும் எடுத்துப் பாருங்கள்).

முன்னோடி ஊழியர் தொலைவான இடத்தில் வசிப்பவராக இருந்தால், தலைவர் மாதம் ஒரு முறையோ அல்லது இரு மாதங்களுக்கு ஒருமுறையோ நீண்ட நேரம் நடக்கும் கூட்டத்தைக் கூட்டலாம். கடிதங்களை எழுதுவதின் மூலமும் அவர் அவர்களோடு தொடர்புவைத்துக்கொள்ளலாம். பவுல் அப்போஸ்தலன் இதைத்தான் செய்தார். முன்னோடி சுவிசேஷகர் தலைவர் இடையிடையே தனது முன்னோடிகளைச் சென்று சந்தித்து, தனது அணிக்கூட்டங்களை நடத்துவது முக்கியமாகும்.

**ஒரு முன்னோடி சுவிசேஷகர் தலைவரின் அடிப்படைப் பொறுப்பு என்ன?**

__________________________________________________

**ஒரு அணியை உருவாக்கி, சீஷராக்கி, பயிற்சியளித்து, அவர்களை வெளியே அனுப்பும்படி உங்களை நீங்களே ஒப்புக்கொடுக்கிறீர்களா?**

__________________________________________________

## *சபைகளை வெற்றிகரமாகத் துவங்குவதற்கு 9 அடிப்படையான காரியங்கள்*

டோனால்ட் ஏ. மெக்கேவ்ரான் *Understanding Church Growth* என்ற தன்னுடைய புத்தகத்திலும், ஹோவார்ட் ஸ்னைடர் *Orientations for Starting Urban Churches* என்ற தன்னுடைய புத்தகத்திலும் வெற்றிகரமாகச் சபை ஸ்தாபித்தலுக்கான அடிப்படைகளை விவரிக்கிறார்கள்.

இந்தக் கொள்கைகள் உலகளாவியவை, உலகத்தின் எந்த நாட்டிலும் இவைகளைச் செயல்படுத்த முடியும். பெரிய பட்டணங்களிலும், சிறிய பட்டணங்களிலும் இவை செயல்படுகின்றன.

1. **புதிய ஊழியங்களைத் துவங்குவதில் உதவியாக ஆவிக்குரிய வரம்பெற்ற மக்களைக் கண்டுபிடியுங்கள்.**

   ஒவ்வொரு சபையிலும் சாமானியர்களும், சுவிசேஷகர்களும் இருக்கிறார்கள். சுவிசேஷத்தை அறிவித்து புதிய ஊழியங்களைத் துவங்குவதற்கான ஆவிக்குரிய வரங்கள் அவர்களிடம் உண்டு. **எபேசியர் 4:12-13 வசனங்களின்படி, முன்னோடி சுவிசேஷகர் தலைவர் ஒரு போதகராகவோ அல்லது சாமானியத் தலைவராகவோ இருந்தாலும், பரிசுத்தவான்கள் (சாமானியர்கள்) அவர்களுடைய ஊழியத்தை நிறைவேற்றும்படி அவர்களை ஆயத்தப்படுத்துவதே இவர்களுடைய பணியாகும்.** ரோமர் 12:6-8; 1 கொரிந்தியர் 12:4-12.

2. **சாமானியர்களிடையே (laymen) தலைவர்களை உருவாக்குங்கள்.**

   சாமானியர்களின் தலைமைத்துவத்தை உருவாக்குவதே சபை இல்லாத இடத்தில் ஒரு புதிய சபையைத்துவங்குவதற்கான முதல் அடிப்படையாகும். சாமானியர்களின் முயற்சி இல்லாமல் இந்த செயல்நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அபிஷேகம் பெற்ற ஊழியர்கள் போதுமான அளவில் இல்லை. தங்கள் ஊழியத்தில் சாமானியர்களை ஆயத்தப்படுத்துவதே முன்னோடி சுவிசேஷகர் தலைவரின் அடிப்படைப் பணியாகும். எபேசியர் 4:12-13 வசனங்கள் "*பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை* ***அப்போஸ்தலராகவும்****, சிலரைத்* ***தீர்க்கதரிசிகளாகவும்****, சிலரைச்* ***சுவிசேஷகராகவும்****, சிலரை* ***மேய்ப்பராகவும் போதகராகவும்*** *ஏற்படுத்தினார்*" என்று சொல்லுகின்றன.

   ஒரு உள்ளூர் சபையின் போதகர் ஒருமுறை "நான் ஞானஸ்நானம் கொடுக்கும்படி சாமானியர்களை அனுமதித்தால், பிறகு நான் என்ன செய்வது?" என்று கேட்டார். ஒரு போதகரின் வேதாகமரீதியான பங்கைக் குறித்து இந்தப் போதகர் அறிந்திருக்கவில்லை. போதகர்களும், அருட்பணியாளர்களும், தலைவர்களும் இரண்டு முக்கியமான பொறுப்புக்களின்மீது பார்வையை ஒருமுகப்படுத்த வேண்டும்.

   - **சுவிசேஷகர்களாகும்படி சாமானியர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும்.** இந்தச் சுவிசேஷகர்கள் முன்னோடிகளாக இருக்கும்படி ஆவிக்குரிய முதிர்ச்சியைப் பெற்றிருப்பார்கள்.
   - கூடியவரை சீக்கிரமே ஊழியத்தின் உள்ளூர் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்படியாக **உள்ளூர் தலைவர்கள் மற்றும்/அல்லது சுவிசேஷகர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும்.** அமைதியான வேளையை ஆசரிப்பது எப்படி, தங்கள் விசுவாசத்தில் வளர்ச்சிபெறுவது எப்படி, சபைத் தலைமைத்துவத்தில் பங்கெடுப்பது எப்படி போன்ற வேதாகமரீதியான கோட்பாடுகளில் உள்ளூர் தலைவர்களுக்குப் பயிற்சியளிப்பது அத்தியாவசியமானதாகும்.

**பவுல் ஒருசில வாரங்கள் மட்டுமே தெசலோனிக்கே பட்டணத்தில் பிரசங்கம் செய்தார். என்றாலும் அவர் அந்தப் பட்டணத்தில் ஒரு சபையை ஸ்தாபித்து, தெசலோனிக்கே பட்டணத்தின் சாமானியத் தலைவர்களின் பொறுப்பில் அதை விட்டுச் சென்றார்.**

அவர் எபேசு பட்டணத்தில் திறன்னு என்பவனின் வித்தியாசாலையில் அவர் இரண்டு ஆண்டுகள் போதித்தார். **இதன் விளைவுகள் என்ன? ஆசியாவில் குடியிருந்த <u>எல்லாரும்</u> தேவனுடைய வார்த்தையைக் கேட்டார்கள்** (அப். 19:10, 20). பவுல் இதைத் தனிமையில் செய்யவில்லை! **<u>அவர் எப்போதும் ஆண்டவருடைய வார்த்தைகளை நிறைவேற்றும்படி சாமானியர்களைச் சீஷராக்கினார்.</u>**

2 தீமோத்தேயு 2:2 வசனம் "**<u>அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி</u>" என்று கூறுகிறது. இந்த வசனம் பவுலின் வெற்றியின் இரகசியத்தைத் தெளிவாக விளக்குகிறது. "சீஷராக்குங்கள்" என்று இயேசு நமக்குக் கொடுத்த கட்டளையை அவர் நிறைவேற்றினார். பவுல் மற்றவர்களுக்குப் பயிற்சியளிக்கும்படி, அவர்கள் மற்றவர்களுக்குப் பயிற்சியளிக்கும்படி மற்றவர்களுக்குப் பயிற்சியளித்தார்.**

3. **சபையின் இயல்பைக் குறித்த உறுதியான வேதாகமரீதியான அறிவைப் பெற்றிருக்க வேண்டும்.**

   நீங்கள் எதைத் துவங்குகிறீர்கள் என்று அறியாதிருந்தால், ஒரு காரியத்தைத் துவங்குவது கடினமான காரியமாகும். **சபையானது ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்களின் ஒரு குழுவாகும். அவர்கள் கீழ்க்கண்ட காரியங்களை நிறைவேற்றும்படி ஐக்கியப்பட்டிருக்கிறார்கள்.** அப்போஸ்தலர் 2:42-47

   1. **ஆராதித்தல்** (இது சமய ஒழுங்குகளை ஆசரிப்பதையும் உள்ளடக்கியிருக்கிறது)
   2. **சுவிசேஷ ஊழியம்**
   3. **சீஷராக்குதல்**
   4. **சேவக ஊழியங்கள்**
   5. **ஐக்கிய உறவு**

   **ஒரு சபையின் இயல்பு என்ன? அதன் பண்புகள் யாவை?**

   A. **தேவனுடைய தலைமைத்துவத்தின்கீழாகச் சுய ஆளுகை கொண்டது.**

   B. **தேவனுடைய தலைமைத்துவத்தின்கீழாகச் சுய ஆதாரம் கொண்டது.**

   C. **தேவனுடைய தலைமைத்துவத்தின்கீழாகச் சுயமாகப் பெருக்கமடைகிறது.**

4. **ஏற்றுக்கொள்ளக் கூடிய பகுதிகளைக் கண்டுபிடியுங்கள்.**

   எங்கே முக்கியமான சமுதாய மாற்றங்கள் நிகழ்கின்றன என்பதைக் கவனிப்பதின் மூலம் எந்தப் பகுதி அதிகமாக ஏற்றுக்கொள்ளக் கூடியது என்பதைத் தீர்மானிக்கலாம். மற்றப் பகுதிகளில் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளக் கூடிய மக்களை முன்னோடி சுவிசேஷகர் கண்டுபிடிக்கலாம்.

   ஒரு பெரிய பிரச்சினையின் காரணமாக யாருக்கு ஆண்டவர் அதிகமாகத் தேவைப்படுகிறார் என்பதைக் கண்டறிவது ஏற்றுக்கொள்ளக்கூடிய மக்களைக் கண்டுபிடிப்பதற்கு மற்றொரு வழியாகும். ஒருவருடைய சமுதாய நிலை எப்படியிருந்தாலும் அவருக்கு இப்படிப்பட்ட நிலை வரலாம். சில வேளைகளில் செல்வந்தர்களே போதை மருந்துகள் மற்றும் சமுதாயப் பிரச்சினைகளின் காரணமாகத் தங்கள் பிள்ளைகளோடு சிக்கல்களில் மாட்டிக்கொள்ளுகிறார்கள். உலகத்தின் எல்லாச் சமுதாய வர்க்கத்தைச் சேர்ந்தவர்களின் தேவைகளுக்கும் சுவிசேஷத்தில் நாம் விடைகாண முடியும். இந்த மக்களைக் கண்டுபிடித்து, அவர்களோடு கிறிஸ்துவைப் பகிர்ந்துகொள்ளுவதே நமது பணியாகும்.

5. **கிறிஸ்துவின்மீதுள்ள உங்கள் விசுவாசத்தைத் தீவிரமாக அறிவியுங்கள்.**

   இதைவிட முக்கியமானது வேறு எதுவும் இல்லை. அப்போஸ்தலர்கள் மனந்திரும்புதல்

மற்றும் இரட்சிப்புக்காகக் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுதலின் செய்தியைப் பிரசங்கித்தார்கள். அவர்கள் முழு உலகத்தையும் எட்டும்படியாக இந்தச் செய்தியைத் தீவிரமாகப் பிரசங்கித்தார்கள். இன்று நாமும் அப்படிச் செய்வது அவசியமாகும்! "***அள்ளித்தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான்; ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு கெம்பீரத்தோடே திரும்பிவருவான்***" என்று சங்கீதம் 126:6 வசனம் சொல்லுகிறது. உங்களுடைய ஊழியத்தில் நீங்கள் அறுவடை செய்யாவிட்டால், நீங்கள் சரியாக விதைக்கவில்லை என்பது காரணமாக இருக்கலாம். கடந்த வாரம் கிறிஸ்துவைக் குறித்த உங்கள் சாட்சியைக் கேட்டு, இரட்சிப்புக்கான அழைப்பை ஏற்றுக்கொண்டார்கள் என்று உங்களுக்கு நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள். **பிரசன்ன சுவிசேஷ ஊழியம்** (பிரசன்னமாக உடன் இருப்பது) போதுமானது அல்ல. **அறிவிக்கும் சுவிசேஷ ஊழியமும்** (நற்செய்தியைப் பகிர்ந்துகொள்ளுவது மட்டும்) போதுமானது அல்ல. **தூண்டக் கூடிய சுவிசேஷ ஊழியத்தைச்** செய்ய வேண்டும். நீங்கள் ஒரு நபருக்குச் செவிசாய்க்கும்படியான வாய்ப்பைக் கொடுத்து, அவர் இயேசு கிறிஸ்துவை ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டு தனது வாழ்க்கையை ஒப்புக் கொடுக்கும்படியான வாய்ப்பைக் கொடுப்பதுதான் **தூண்டக்கூடிய சுவிசேஷ ஊழியமாகும்.**

நீங்கள் கடைசியாக எப்போது ஜெபித்து, இழந்துபோனவர்களின் இரட்சிப்புக்காகக் கண்ணீர் விட்டுக் கதறியிருக்கிறீர்கள்?

6. **வீட்டில் ஒரு சபை துவங்குவதை வலியுறுத்துங்கள்.**

பவுல் யூதர்களுக்கும் புறஜாதியாருக்கும் சுவிசேஷத்தை அறிவித்தார். ஒரு பட்டணத்தில் அவர் சுவிசேஷத்தைப் பிரசங்கித்த பிறகு, புதிதாக மனம் மாறியவர்கள் ஐக்கியத்துக்காக ஒரு வசதியான இடத்தில் கூடினார்கள். சில வேளைகளில் அவர்கள் புதிய கிறிஸ்தவர்களின் வீடுகளில் கூடிவந்தார்கள். மற்ற வேளைகளில் அவர்கள் ஒரு பள்ளி போன்ற பொது இடங்களில் கூடிவந்தார்கள்.

**இவை கூடிவரும் இடங்களாக இருந்தன:**

| | | |
|---|---|---|
| 1. | அப்போஸ்தலர் 16:40 | லீதியாளின் **வீடு** - பிலிப்பி |
| 2. | அப்போஸ்தலர் 17:5, 6 | யாசோனுடைய **வீடு** - தெசலோனிக்கே |
| 3. | அப்போஸ்தலர் 18:7 | யுஸ்துவின் **வீடு** - கொரிந்து |
| 4. | அப்போஸ்தலர் 19:9 | திறன்னுவின் **வித்தியாசாலை** - எபேசு |
| 5. | அப்போஸ்தலர் 20:20 | பவுல் **பொதுவாகப் பிரசங்கித்தது மட்டுமின்றி, வீடுவீடாகவும்** பிரசங்கித்தார் |

நமது நவீன சமுதாயத்தில், குறிப்பாகப் பெரிய பட்டணங்களில், சொத்தின் விலை அதிகமாக இருக்கிறபடியால், வீடுகளில் சபைகளைத் துவங்குவதின் முக்கியத்துவத்தை வலியுறுத்த வேண்டியது அவசியமாகும். எங்குமுள்ள கிறிஸ்தவர்கள் துதிப்பதற்காகவும், ஒருவரோடொருவர் ஐக்கியம் கொள்ளுவதற்காகவும் கூடிவருவதின் தேவையை உணர்ந்திருக்கிறார்கள். இதற்கு, குறிப்பாக துவக்கத்தில், ஒரு கட்டிடமோ அல்லது ஆராதனை மையமோ தேவைப்படுவதில்லை. வீடுகளைப் பயன்படுத்துவதின் மூலம் ஒரு கட்டிடத்தை வாடகைக்கு எடுப்பது அல்லது வாங்குவதின் பாரம் இல்லாமல் சபை வளர்ச்சிபெற முடியும்.

ஒரு கட்டிடத்தை வாடகைக்கு எடுப்பதற்கோ அல்லது வாங்குவதற்கோ அதிகமான பணத்தைக் கொடுக்கவேண்டியிருப்பது ஒரு இயல்பான பிரச்சினையாகும். சிறிய பட்டணங்களில் கூடிவரும் இடத்தை வாடகைக்கு எடுக்க முடியும். என்றாலும், பெரிய பட்டணங்களில் பெரும்பாலும் இது எளிதாக இருப்பதில்லை.

இதன் காரணமாகத் துவக்கத்தில் வீடுகளையோ, பின்முற்றங்களையோ அல்லது இப்படிப்பட்ட இடங்களையோ பயன்படுத்துவது நல்லதாகும்.

சபையானது ஒரு இயல்பான பகுதியில் இருக்கும்போது மனமாற்றம் பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது என்று அனுபவத்தின் மூலமாக அறிகிறோம். ஏனென்றால் வருபவர்கள் அச்சுறுத்தல் இல்லாமல் பங்கெடுக்கும்படியான சூழல் இருக்கிறது. அண்டைப் பகுதிகளிலும், பட்டணங்களிலும் எளிதாக நுழைவதற்கு இந்தச் செயல்முறை எளிதானதாக இருக்கிறது.

அது ஒரு தாற்காலிகமான நடவடிக்கை என்ற எண்ணத்தைக் கொடுத்துவிடும் என்பதுதான் வீடுகளில் சபை கூடிவருதலிலுள்ள மிகப் பெரிய பிரச்சினையாகும். ஆனால் இந்தத் துவக்க காலத்தில் குழுவினர் பணத்தைச் சேகரித்து, ஒரு இடத்தை வாடகைக்கு எடுக்கலாம் அல்லது வாங்கலாம்.

வெளியிலிருந்து வரும் உதவியை எதிர்பார்க்காமல், புதிய ஊழியங்கள் தங்கள் சொந்த ஆதாரங்களைப் பயன்படுத்தும்படி ஊக்குவிக்க வேண்டும் என்பதே நமது நோக்கமாகும்.

7. **விசுவாசிகள் சந்தோஷத்தோடு பங்குகொள்ளக் கூடிய ஆராதனையை நடத்துங்கள்.**

நாம் தேவனுடைய பிரசன்னத்துக்குள்ளாகச் செல்லும்போது, உண்மையோடு அவரை நெருங்கிச் சேருகிறோம். மத்தேயு 6:9-13 வசனங்களில் நாம் அவருடைய சிங்காசனத்தைத் துதிகளோடு அணுக வேண்டுமென்று தேவன் போதிக்கிறார். எனவே துதிப்பது தேவனுடைய மேன்மை மற்றும் நன்மைக்கு நமது பதிலாக இருக்கிறது. தேவனுடைய பண்புகளின்மீதும் அவர் யார் என்பதின்மீதும் நமது கவனத்தை வைக்கிறோம் (நன்றிகூறுதல் தேவன் நமக்காகச் செய்திருக்கும் காரியங்களுக்கான நமது பதிலாகும்). அவர் நித்தியராகவும், சர்வ வல்லவராகவும், சர்வ வியாபகராகவும், சர்வ ஞானியாகவும் இருக்கிறார். அவர் **ஏல்-ஷடாயாக** (**ஏல்** = மேன்மை, **ஷடாய்** = சர்வ வல்லமை) இருக்கிறார். அவர் **யேகோவா யீரே**யாக (தேவன் அருளுகிறார்) இருக்கிறார். அவர் **யேகோவா ராபே**யாக (குணமாக்கும் கர்த்தர்) இருக்கிறார்.

தேவனுக்கு இன்னும் பல பண்புகள் இருக்கின்றன. துதிப்பது என்பது தேவன் யார் என்பதற்காக அவரைப் போற்றுவதாகும். இது ஒருவருடைய இருதயத்திலிருந்து வருவதாகும், இதைப் பல்வேறு வழிகளில் வெளிப்படுத்த முடியும்.

8. **மக்கள்மீது "சொத்தின்" பாரத்தைச் சுமத்தாதிருங்கள்.**

பிரசங்கிப்பவருக்கான சம்பளம், சொத்து, ஆராதனை மையத்தைக் கட்டும் திட்டம் போன்ற காரியங்களைக் கவனிப்பதற்கு முன்பாக, கிறிஸ்தவர்களின் வலுவான மையம் உருவாக்கப்படுவது அவசியமாகும்.

9. **ஊழியத்தின் துவக்கத்திலிருந்தே புதிய ஊழியம் கூடுமானவரையில் விரைவாக இந்த இரண்டு கொள்கைகளோடு பெருக்கமடைய வேண்டும் என்பதற்கு முன்னுரிமை கொடுங்கள்.**
    1. இதே வேளையில் சாமானியர்களுக்குப் பயிற்சியளிப்பதின்மூலம் பல புதிய ஊழியங்களைத் துவங்குங்கள்.
    2. ஒரே வேளையில் பல ஊழியங்களைத் துவங்க வேண்டும் என்ற தரிசனத்தோடுகூடப் புது விசுவாசிகளுக்குப் புதிய ஊழியத்தில் பயிற்சி கொடுங்கள்.

## *சபைகள் துவங்கப்பட்ட பிறகு அவைகளை வளரச் செய்வதற்கு 6 முக்கியமான காரியங்கள்*

ஒரு சபை துவங்கப்பட்ட பிறகு நீங்கள் அதை எப்படி வளரச் செய்ய முடியும்? இதைக் குறித்துப் பல புத்தகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன, பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. என்றாலும், ஒரு சபை வளர்ச்சிபெறுவதற்கு ஆறு அடிப்படையான காரியங்கள் அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றன. அவையாவன:

1. **ஜெப ஊழியம்**

ஒரு சபைக்கு ஜெபத்தின் அஸ்திபாரம் தேவையாகும். போதகர்களும், தலைவர்களும் தங்கள்

சபையாருக்கு ஜெபிக்க வேண்டுமென்று போதிப்பது மட்டுமின்றி, எப்படி ஜெபிக்க வேண்டும் என்றும் போதிக்க வேண்டும். தேவனோடுகூட எப்படித் தனிமையான நேரத்தைச் செலவழிப்பது என்பதைப் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் அறியாதிருக்கிறார்கள். சில ஆலோசனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

a. இந்தக் கையேட்டின் செயல்படுத்துதல் பகுதியிலுள்ள "முன்னோடியும் ஜெபமும்" என்ற பகுதியிலுள்ள ஆலோசனைகளை உங்கள் வாழ்க்கையில் செயல்படுத்துங்கள்.

b. "கர்த்தருடைய வார்த்தையைக் கேட்பது எப்படி" என்பதைக் கற்றுக்கொள்ளுங்கள். வாரத்தின் ஒவ்வொரு நாளும் ஜெபிப்பதற்காக ஒரு பரிந்துரை ஜெபப் பட்டியலைத் தயார் செய்யுங்கள். துதிகளின் பட்டியலைத் தயாரிப்பதும் முக்கியமாகும். இந்தக் கையேட்டின் செயல்படுத்துதல் பகுதியில் இதைக் காணலாம்.

c. மக்களுக்கு ஜெபிக்கவும், ஜெபத்தை வாழ்க்கையில் செயல்படுத்தவும் கற்றுக்கொடுங்கள். கிறிஸ்தவர்கள் ஜெபத்தின் தேவையைக் குறித்த பிரசங்கங்களைக் கேட்டாலும் அதிகமான நேரத்தை ஜெபிப்பதில் கழிப்பதில்லை. தேவனோடுகூடத் தனிமையில் நேரத்தைச் செலவழிப்பது எப்படி என்பதை அவர்கள் அறிந்திருப்பதில்லை.

d. வீடுகளில் ஜெபக் குழுக்களை உருவாக்குங்கள். ஒரு ஆராதனைப் பின்னணியில் மட்டுமே ஜெபிக்கும்படி கட்டுப்படுத்தக் கூடாது.

e. சில வேளைகளில் ஆராதனை முடிவில் சிறு குழுவிலுள்ள எல்லோரும் முழங்காற்படியிட்டு ஜெபிக்குமாறு செய்யுங்கள். ஜெப வாஞ்சையுள்ள ஒரு சபையை உருவாக்குவதற்கு இது அத்தியாவசியமானதாகும்.

2. **ஆராதனை ஊழியம்**

ஹோவார்ட் ஸ்னைடர் தனது *Guidelines for Urban Church Planting* என்ற நூலில், ஒரு சபை வளர்ச்சிபெற வேண்டுமானால் மக்கள் மகிழ்ச்சியோடு கலந்துகொள்ளக்கூடிய சந்தோஷமான ஆராதனையை நடத்த வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார். இது ஒரு உலகளாவிய உண்மையாகும்.

ஒரு அடக்க ஆராதனையை நினைவுபடுத்தும் ஆராதனையில் பங்குகொள்ள எவருமே விரும்புவதில்லை. மகிழ்ச்சியும், சந்தோஷமும் இல்லாத விசுவாசம் மெய்யான விசுவாசம் அல்ல. நல்ல இசையோடுகூடிய சந்தோஷமான ஆராதனை தொற்றிப் படருவதாகும். இதற்காக ஆராதனையை ஒழுங்கில்லாமல் நடத்த வேண்டும் என்று அர்த்தமில்லை. உலகமெங்கும் நடத்தப்பட்ட ஆய்விலிருந்து, ஒவ்வொரு நாட்டிலும் வளர்ந்துவரும் சபைகள் சந்தோஷமான ஆராதனைகளைக் கொண்ட சபைகளே என்பது கண்டறியப்பட்டிருக்கிறது.

இசையானது துதிப்பதற்கு ஒரு வகை என்பதை நினைவில் வைத்திருங்கள். நமது இசை அல்ல, நாம் தேவனைத் துதிக்கிறோம். இசையென்பது துதிப்பதற்கு ஒரு கலாச்சார வழிவகையாகும். சுவிசேஷத்தை அறிமுகம் செய்வதற்காகக் கலாச்சாரத்தை அழித்துப்போடுவது தேவையில்லாத காரியமாகும்.

தேவன் யார் என்பதற்காக அவரைப் போற்றுவதே மெய்யான துதித்தலாகும். துதியானது ஒருவருடைய இருதயத்தில் தோன்றி, பல்வேறு வழிகளில் வெளிப்படுகிறது. சில சபைகளில் பாரம்பரியமான பாமாலைப் பாடல்கள் பாடப்படுகின்றன. மற்றச் சபைகளில் துதி கோரஸ்கள் பயன்படுத்தப்படுகின்றன. கலாச்சாரங்களையும், உள்ளூர் மக்களின் துணைக் கலாச்சாரத்தையும் மதிக்க வேண்டும் என்று நாம் நம்புகிறோம். இதே வேளையில் ஒவ்வொரு சபையின் தனி ஆளுகையையும் நாம் மதிக்க வேண்டும். ஆனால் ஒரு சபை இசையின் எந்த வடிவத்தைப் பயன்படுத்தும்படி தெரிந்துகொண்டாலும், அவர்களுடைய ஆராதனை சந்தோஷமாகவும், துடிப்போடும் இருப்பது அவசியமாகும். இது நமது ஆண்டவரைக் கொண்டாடும் ஆராதனையாகும்.

சில ஆப்பிரிக்க சபைகளில் ஆராதனையின் துதித்தல் வேளைகளில் கைத்தாளங்களைப் பயன்படுத்தி, முன்னால் வந்து நடனமாடுகிறார்கள். "அமெரிக்காவிலோ, பிரேசில் நாட்டிலோ, இந்தியாவிலோ அல்லது வேறு நாடுகளிலோ நாங்கள் இதைச் செய்வதில்லை. எனவே நீங்களும் இதைச் செய்யக் கூடாது" என்று சொல்லக் கூடாது.

சபையின் ஆராதனை வேளையின் ஒழுங்கான ஒரு பகுதியாக ஞானஸ்நானம் கொடுக்கப்பட வேண்டும், திருவிருந்தைப் பரிமாற வேண்டும். டாக்டர் சார்ல்ஸ் புரோக் தனது *Indigenous Church Planting* என்ற புத்தகத்தில் இந்த இரண்டு ஒழுங்குகளையும் குறித்து இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்:

**ஞானஸ்நானம் கொடுப்பதற்கு உங்களுக்கு இவை தேவைப்படுகின்றன:**

- **ஒரு பொருத்தமான நபர்** - அவர் தனது பாவங்களைக் குறித்து மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவின்மீது தனது ஒரே ஆண்டவராகவும், இரட்சகராகவும், மத்தியஸ்தராகவும் விசுவாசம் வைத்திருக்க வேண்டும். ஒரு சிறு குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட வேண்டுமென்று வேதாகமத்தில் எந்த வசனத்திலும் சொல்லப்பட்டிருக்கவில்லை. மனமாற்றம் பெற்றவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டுமென்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. கிறிஸ்துவைத் தனது ஒரே ஆண்டவராகவும், இரட்சகராகவும், மத்தியஸ்தராகவும் ஏற்றுக்கொள்ளும் திறன் ஒரு சிறு குழந்தைக்குக் கிடையாது.

- **ஒரு பொருத்தமான அதிகாரம்** (proper authority)- சுய ஆளுகை பெற்ற ஒரு உள்ளூர் சபையால் யாருக்கு ஞானஸ்நானம் கொடுப்பது, கொடுக்காமலிருப்பது இவைகளைத் தீர்மானிக்க முடியும்.

- **ஒரு பொருத்தமான கொடுப்பவர்** - ஒவ்வொரு சபையும் சுய ஆளுகை பெற்றிருக்கிற படியால் யார் ஞானஸ்நானம் கொடுப்பது என்பதை அவர்களால் தீர்மானிக்க முடியும்.

- **ஒரு பொருத்தமான வழிமுறை** - பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே முழுக்கு ஞானஸ்நானம்

- **ஒரு பொருத்தமான நோக்கம்** - கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பப்பட்டார் என்பதற்கு இது அடையாளமாக இருக்கிறது. நாம் நமது பாவங்களுக்கு மரித்து, இயேசு கிறிஸ்துவுக்குள்ளாகப் புது வாழ்வைப் பெற்றிருக்கிறோம் என்பதற்கும் இது அடையாளமாக இருக்கிறது.

**திருவிருந்து கொடுப்பதற்கு உங்களுக்கு இவை தேவைப்படுகின்றன:**

- **ஒரு பொருத்தமான பங்கெடுப்பவர்கள்** - கிறிஸ்துவின் சீஷர்கள்.
- **ஒரு பொருத்தமான அதிகாரம்** - இயேசு கிறிஸ்து. விசுவாசிகள் தமது மரணத்தை நினைவுகூரும்படி திருவிருந்தை ஆசரிக்க வேண்டுமென்று கட்டளை கொடுத்திருக்கிறார்.
- **ஒரு பொருத்தமான கொடுப்பவர்** - ஒவ்வொரு சபையும் சுய ஆளுகை பெற்றிருக்கிற படியால் யார் திருவிருந்து கொடுப்பது என்பதை அவர்களால் தீர்மானிக்க முடியும். முன்னோடியோ அல்லது உள்ளூர் தலைவரோ இதைக் கொடுக்கலாம். அல்லது ஆராதனையின் இந்தப் பகுதியில் வழிநடத்தும்படி சபை தனது உறுப்பினர்களில் ஒருவரைத் தெரிந்துகொள்ளலாம்.
- **ஒரு பொருத்தமான நோக்கம்** - கிறிஸ்து திரும்பி வரும்வரையில் அவருடைய மரணத்தை நினைவுகூர்ந்து, அதை அறிவித்தல்.

**எல்லாவற்றுக்கும் மேலாக, நமது சபையில் தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் தேவனுடைய வார்த்தையைப் போதிக்க வேண்டும்.** முன்னோடி ஊழியர் பிரசங்கிப்பதில் அனுபவம்

பெறாதவராக இருப்பாரானால், அவர் வேதாகமத்திலிருந்து ஒரு பகுதியைத் தெரிந்துகொண்டு, அதைக் கொண்டு ஆறு காரியங்களைச் செய்ய வேண்டும்:

1. வசனத்தை வாசிக்க வேண்டும்.
2. அந்த வசனத்தின் ஆவிக்குரிய சத்தியங்களை விளக்க வேண்டும்.
3. கேட்டுக்கொண்டிருப்பவர்கள் ஒவ்வொரு சத்தியத்தையும் எப்படித் தங்கள் வாழ்க்கையில் செயல்படுத்த முடியும் என்று விளக்குங்கள்.
4. ஒவ்வொரு சத்தியத்துக்கும் ஒரு எடுத்துக்காட்டைக் கொடுங்கள்.
5. அந்தப் பகுதியின் ஒவ்வொரு வசனம் அல்லது பத்திக்கும் இப்படிச் செய்யுங்கள்.
6. ஒரு அழைப்போடுகூடச் செய்தியை முடித்துவையுங்கள்.

**முன்னோடி ஊழியர் அதிகமான அனுபவத்தைப் பெற்று, மிகச் சிறந்த பிரசங்கியாராக இராவிட்டால், இதை 20 நிமிடங்களுக்குள்ளாக முடிப்பது நலமாகும்.**

> **எச்சரிக்கை: திரும்பி வர விருப்பமில்லாத மக்களுக்கு அல்லது தங்கள் நண்பர்களுக்குப் பரிந்துரை செய்ய விரும்பாத மக்களுக்கு 30 அல்லது 50 நிமிட நேரம் பிரசங்கிப்பதைவிட, வளர்ந்துவரும் ஒரு குழுவுக்கு ஒவ்வொரு வாரமும் 20 நிமிட நேரம் பிரசங்கிப்பது சிறப்பாகும்.**

**தலைவர் வேதாகம ஆய்வுகளையும், கதை சொல்லுதலையும் பயன்படுத்தலாம். நல்ல செய்திகளைப் பிரசங்கிப்பதற்கும், வேதாகம ஆய்வுகளை வழிநடத்துவதற்கும் உதவியாக, இந்தக் கையேட்டிலுள்ள *வீட்டு வேதாகம ஆய்வுகளை நடத்துவது எப்படி* மற்றும் *கதை சொல்லுதல்* குறித்த அத்தியாயங்களை வாசியுங்கள்.**

### 3. சுவிசேஷத்தை அறிவிக்கும் ஊழியம்

ஒரு சபை வளர்ச்சிபெற வேண்டுமானால், சுவிசேஷத்தை அறிவிக்கும் சிறப்பான வெளி ஊழியத்தைக் கொண்டிருக்க வேண்டும். இந்தக் கையேட்டிலுள்ள திட்டத்தையோ அல்லது வேறு திட்டத்தையோ நீங்கள் பயன்படுத்தலாம். வெளியே உலகத்திலுள்ள சுவிசேஷத்தைப் புரிந்துகொள்ளாத மக்கள் நீங்கள் சபை கூடும் இடத்துக்கோ அல்லது ஞாயிறு ஆராதனைக்கோ வருவார்கள் என்று காத்திருப்பதைவிட, அவர்களைச் சென்று சந்திக்கும் முயற்சியைச் சபை எடுத்துக்கொள்ளுவது முக்கியமாகும். ஒரு முன்னோடி சென்று சந்திக்கும் ஊழியத்தைக் கொண்டிருக்கவேண்டும். சபைகூடிவரும் இடத்துக்கு வெளியேயுள்ள இழந்துபோனவர்களைச் சென்று சந்திக்கும்படி உறுப்பினர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும். சபை கூடிவரும் இடத்தில் மட்டுமல்லாமல் இப்படிப்பட்ட இடங்களிலும் அவர்களைக் கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தும் நோக்கத்தோடு செயல்பட வேண்டும்.

### 4. சீஷராக்கும் ஊழியம்

ஒரு சபை வளர்ச்சிபெற வேண்டுமானால், புதிதாக மனம் மாறியவர்களை ஒருங்கிணைக்கும் செயல்திட்டம் இருக்க வேண்டும். ஒருவருக்கு ஒருவர் என்ற முறையிலோ அல்லது சிறு குழுக்களாகவோ உள்ளூர் தலைவர்களுக்கு இதில் பயிற்சியளிக்க வேண்டும். முன்னோடி ஊழியர் இந்த உள்ளூர் தலைவர்களுக்கு விசுவாசத்தில் பயிற்சியளித்து, ஜெபித்தல், சாட்சி கொடுத்தல், கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துதல், ஒரு வீட்டு வேதாகம ஆய்வை வழிநடத்துதல், வேதாகம ஆய்வுகளைப் போதித்தல் இவைகளில் அவர்களை ஆயத்தப்படுத்த வேண்டும்.

முன்னோடி சுவிசேஷகர் பணித்தளத்துக்குச் செல்லும்போது, எப்போதுமே உள்ளூர் தலைவர்களையோ அல்லது புதிதாக மனமாற்றம் பெற்றவர்களையோ உடன் அழைத்துச் செல்லுவது முக்கியமாகும். எடுத்துக்காட்டாக, முன்னோடி சுவிசேஷ ஊழியர் தான்

கிறிஸ்துவைத் தங்கள் ஆண்டவராக ஏற்றுக்கொண்டிருப்பவர்களின் வீடுகளில் வேதாகம ஆய்வை நடத்தும்போது, தான் சீஷராக்கிக் கொண்டிருப்பவர்களையும் உடன் அழைத்துச் செல்ல வேண்டும். முன்னோடி ஊழியர் தனது சொந்தச் சாட்சியைக் கொடுக்கும்போதும், மக்களை இயேசுவுக்காக ஆதாயப்படுத்தும்போதும், உள்ளூர் தலைவர் அவருடன் சென்று, அவர் செய்பவைகளைக் கவனிக்க வேண்டும். எவருமே ஒரு வகுப்பறையில் ஒருவரைச் சீஷராக்க முடியாது.

நல்ல சீஷத்துவத்துக்கு இரண்டு இரகசியங்கள் இருக்கின்றன: முதலாவது, மக்களுக்கு ஒருவருக்கு ஒருவர் என்ற முறையிலோ அல்லது சிறு குழுக்களிலோ பயிற்சி கொடுங்கள். இரண்டாவதாக, நீங்கள் சுவிசேஷத்தை அறிவிக்கும்போது அவர்களைப் பணித்தளத்துக்கு (field) உடன் அழைத்துச் செல்ல வேண்டும்.

5. **ஐக்கிய உறவு ஊழியம்**

ஒரு சபை வளர்ச்சிபெற வேண்டுமானால், அதில் உறுப்பினர்களிடையே மெய்யான அன்பு காட்டப்படும் ஐக்கிய உறவு காணப்பட வேண்டும். புதியவர்கள் அந்தச் சபைக்குள் வரும்போது, அவர்கள் தேவனுடைய அன்பையும், உறுப்பினர்களிடையேயுள்ள அன்பையும் உணர வேண்டும். கசப்பும், வெறுப்பும், பிரிவினையும் காணப்படுமானால் ஒரு சபையால் வளர்ச்சிபெற முடியாது. சபைக்கு வருபவர்கள் ஒரு சபையின் ஐக்கியத்தையும், அந்தச் சபையால் ஏற்றுக்கொள்ளப்படும் உணர்வையும் பெற வேண்டுமானால் ஒருவருக்கொருவர் பரஸ்பர அன்பு காணப்பட வேண்டும்.

6. **சரியான நிர்வாகம்**

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 4000 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சபையின் போதகரிடம் "40 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சபையின் போதகராக இருப்பதற்கும் 4000 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சபையின் போதகராக இருப்பதற்கும் இடையிலுள்ள வித்தியாசம் என்ன?" என்று கேட்டார்கள். "நிர்வாகமே!" என்று அவர் பதிலளித்தார்.

முன்னோடி ஊழியர் எல்லாவற்றையும் தானே செய்ய வேண்டுமென்று நினைக்காமல், தனது ஊழியர்கள் தேவனுடைய ஊழியத்தைச் செய்யும்படி அவர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும் என்ற மனப்பாங்கைக் கொண்டிருக்க வேண்டும். 30 முதல் 80 உறுப்பினர்கள் உள்ள ஒரு சபையில் போதகரால் எல்லாவற்றையும் கட்டுப்படுத்த முடியும். என்றாலும், அவர் நிர்வாகத்தில் மற்றவர்களுக்குப் பயிற்சியளிக்காவிட்டால் சபையை நடத்த முடியாத ஒரு நிலை வரும். முதிர்ச்சியடைந்த, நன்றாகப் பயிற்சிபெற்ற மக்களுக்கு அவர் பொறுப்புக்களைப் பகிர்ந்துகொடுக்க வேண்டும். பயிற்சியளிப்பவராக இருப்பதே ஒரு முன்னோடி ஊழியரின் அடிப்படைப் பொறுப்பாகும்.

## *ஒரு புதிய ஏற்பாட்டுச் சபையின் மூன்று பண்புகள்*

### # 1 பண்பு: தேவனுடைய தலைமைத்துவத்தின்கீழாகச் சுய ஆளுகை

சபையில் ஜனநாயகம் நிலவ வேண்டுமென்று நம்புகிறவர்களுக்கு சுய ஆளுகைக் கொள்கை மிக முக்கியமானதாகும். சபையின் ஆவிக்குரிய வாழ்வுக்கு இது அத்தியாவசியமானதாகும். இதில் தவறும்போது, ஒரு புதிய, தன்னிறைவுள்ள சபையை ஸ்தாபிக்க வேண்டுமென்ற முழு முயற்சியும் பாதிக்கப்படும்.

சுய ஆளுகையானது சுய ஆதரவு மற்றும் சுய பிரகடனம் ஆகியவைகளில் ஆவிக்குரிய பொறுப்பைக் கொடுக்கிறது. புதிதாக மனம் மாறியவர்களின் கைகளில் சுய ஆளுகைசெய்யும் பொறுப்பைக் கொடுக்கத் தவறினால் அது ஒரு புதிய சபையைத் துவங்குவதற்கான முயற்சிகளை நசுக்கி விடும்.

ஒரு முன்னோடி சுவிசேஷகர் ஒரு புதிய சபையை ஆளுகைசெய்ய முயலும் சோதனையைத் தவிர்ப்பது கிட்டத்தட்ட இயலாத காரியமாகும். பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் மூலமாகவே முன்னோடி ஊழியரால் பிரசங்கித்தல், போதித்தல், நிர்வாகம்செய்தல் ஆகிய பொறுப்புக்களை உள்ளூர் உறுப்பினர்களுக்கு விட்டுக்கொடுக்க முடியும். ஒரு புதிய சபை துவங்கப்படுவதிலிருந்தே அது முன்னோடி சுவிசேஷகரின் தாக்கத்தைப் பெற்றிருக்கும். என்றாலும், சபையானது சுவிசேஷ நிறுவனம் அல்லது அதன் முன்னோடியின் தீர்மானங்களுக்குப் பதிலாகத் தனது சொந்தத் தீர்மானங்களைத் தானே தீர்மானிக்கும். இது எப்படிச் சாத்தியமாகும்? துவக்கத்திலிருந்தே ஒரு சுய ஆளுகைச் சபையை வளரச்செய்யும்படி முன்னோடி புதிய விசுவாசிகளுக்குப் பயிற்சியளித்து அவர்களைச் சீஷராக்குகிறபடியால் இது சாத்தியமாகும்.

சபையானது தனது சொந்தத் தீர்மானங்களை எடுக்கும்படிக்கு இன்னும் முதிர்ச்சியடையவில்லை, போதுமான போதனையைப் பெறவில்லை, போதுமான அனுபவத்தைப் பெறவில்லை என்று சிலர் கூறலாம். என்றாலும், மூன்று வாரமே இயங்கிவரும் ஒரு சபை பத்தாண்டு பழைமையான சபையின் ஆற்றல் இல்லையெனினும் சபையின் ஆவிக்குரிய தலைவரின் வழிநடத்துதலில் கூடுமான வரையில் தீர்மானங்களைத் தானே எடுக்க வேண்டும். ஒரு முன்னோடி சுவிசேஷகரின் பொறுப்பு தீர்மானம் எடுக்கும் ஒருவருடைய பொறுப்பு அல்ல, அது ஒரு ஆலோசகரின் பொறுப்பாகும். அவர் வழிநடத்துதலைக் கொடுப்பார், புதிய சபை பிழைசெய்யாமல் காப்பார். அவர்கள் தவறான பாதையில் செல்லுவார்களானால், அவர்களைச் சரியான பாதையில் திருப்பும்படிக்கு அவர் வலுவான தலைமைத்துவத்தைக் கொடுக்க வேண்டும். என்றாலும், சபையானது தனது அடிப்படைத் தீர்மானங்களைத் தானே எடுக்கும்படி முன்னோடி சுவிசேஷகர் அனுமதிக்க வேண்டும்.

**சில செயல்பூர்வமான படிகளை நாம் பின்பற்ற வேண்டும்:**

1. முன்னோடி சுவிசேஷகர் ஒரு பட்டணத்தில் நுழைந்து, சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ளும் நோக்கத்தோடு ஒரு சமாதான நபரைத் தேட வேண்டும்.
2. வேதாகமப் பாடங்களையும், அடிப்படைக் கோட்பாடுகளையும் போதிப்பதின்மூலம் அவர் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும்.
3. புதிதாக மனம் மாறுகிறவர்களைச் சீஷராக்கி, அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும்.
4. முன்னோடி சுவிசேஷகர் அனுமதிப்பாரானால், பரிசுத்த ஆவியானவர் உள்ளூர் தலைவர்களை எழுப்புவார்.
5. கோட்பாட்டை ஒப்புக்கொள்ளும் மனம் மாறியவர்கள் ஒரு புதிய சபையை அமைக்கும்படி திட்டமிடுவார்கள்.
6. உள்ளூர் குழு தனது தலைவர்களைத் தெரிந்தெடுக்கும்.

**# 2 பண்பு: தேவனுடைய தலைமைத்துவத்தின்கீழாகச் சுய ஆதரவு**

தசமபாகத்தைக் குறித்தும் கொடுப்பதைக் குறித்தும் நாம் விசுவாசிகளுக்குப் போதிப்பது அவசியமாகும். மல்கியா 3:8-10 வசனங்களை வாசித்து, ஆராய்ந்து பாருங்கள். ஒரு புதிய சபை போராடும்போது, அது வளர்ச்சிபெறுகிறது. ஒருவர் ஒரு கூட்டுப்புழுவிலிருந்து ஒரு வண்ணத்துப் பூச்சி வெளிவர உதவியபோது நிலைமை எப்படியிருந்தது என்று அருட்பணியாளர் சார்ல்ஸ் புரூக் தனது *Indigenous Church Planting* என்ற நூலில் விளக்கியிருக்கிறார். வண்ணத்துப்பூச்சி அதன் கூட்டைவிட்டு வெளியே வர முயலுகிறது. ஒருவர் அதை வெறுமனே பார்த்துக்கொண்டிருக்க வேண்டும். அவர் பொறுமையிழந்து கூட்டுப்புழுவைக் கத்திரியால் வெட்டி அந்தப் பூச்சிக்கு உதவ முன்வருவாரானால், அதோடு போராட்டம் முடிந்துவிடுகிறது. ஆனால் வண்ணத்துப்பூச்சி பலவீனமானதாகவும், ஆதரவில்லாததாகவும் மாறிவிடுகிறது. அது ஒருசில நிமிடங்கள் மட்டுமே உயிர்வாழும். உதவிசெய்பவர் வாழ்க்கையின் விதிகளில் ஒன்றை மீறிவிடுகிறார். வண்ணத்துப்பூச்சி

போராட அவர் அனுமதித்திருப்பாரானால், அது வலுவானதும், அழகானதுமான முழு வளர்ச்சிபெற்ற பூச்சியாக மாறிவிட்டிருக்கும்.

உள்ளூர் விசுவாசிகள் போராடும்போது, விசுவாசத்தில் நடந்து, தேவனைப் பின்பற்றும்போது, தேவனே எல்லா ஆதாரங்களையும் அருளுவார் என்று அவரைச் சார்ந்திருக்கும்போது, அவர்கள் தங்கள் விசுவாசத்தில் பலப்படுத்தப்படுவார்கள். அவர்கள் எப்படி மாற வேண்டுமென்று தேவன் விரும்புகிறாரோ அப்படி மாறுவார்கள்.

பல சபைகளின் கட்டிடத்துக்கு முன்னால் சபையின் பெயர்ப் பலகை வைக்கப்பட்டிருக்கும். எடுத்துக்காட்டாக, முதல் பாப்டிஸ்ட் சபை. ஆனால் "முதல் பாப்டிஸ்ட் சபை இங்கே கூடிவருகிறது" என்பதே பொருத்தமானதாக இருக்கும். இதிலுள்ள வேறுபாடு என்ன? முதலாவது பலகை கட்டிடமே சபை என்று அறிவிக்கிறது. இரண்டாவது பெயர்ப் பலகை மக்களே சபை என்றும், அவர்கள் எந்த இடத்திலும் கூடிவரலாம் என்றும் அறிவிக்கிறது.

பாரம்பரிய செயல்முறைகளைப் பின்பற்றி ஒரு சபையை ஸ்தாபிப்பதற்குரிய செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**சபை ஸ்தாபிப்பவரின் சம்பளம்:**

**மாதந்தோறும் ___________ x 12 மாதங்கள் x 7 ஆண்டுகள் = ரூ. ________________**

**சபை ஸ்தாபிப்பவரின் வீட்டு வாடகை:**

**மாதந்தோறும் ___________ x 12 மாதங்கள் x 7 ஆண்டுகள் = ரூ. ________________**

**நிலம் ரூ. ________________**

**கட்டுமானச் செலவு ரூ. ________________**

**ஒரு சபைக்கு மொத்தச் செலவு ரூ. ________________**

**# 3 பண்பு: தேவனுடைய தலைமைத்துவத்தின்கீழாகச் சுயமாகப் பெருக்கமடைகிறது**

ஒரு புதிய ஏற்பாட்டுச் சபை சுயமாகப் பெருக்கமடைகிறது. அது தன்னுடைய இயல்பின் காரணமாக மற்றவர்களோடு தனது வாழ்வைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். இப்படிப்பட்ட சபை சுவிசேஷ சபையாகும். இது புதிய சபைகளைத் துவங்கும் வாஞ்சையைக் கொண்டிருக்கிறது.

உலகத்தின் மக்கள்தொகைப் பெருக்கத்துக்கேற்ப, நாம் புதிய ஏற்பாட்டு சபைகளை உருவாக்க வேண்டும். அவை மற்ற சபைகளை ஸ்தாபிக்கின்றன. இதன்மூலம் எல்லா நகரங்கள் மற்றும் பட்டணங்களிலுள்ள மக்களை நாம் எட்ட முடியும்.

துவக்கத்தில் முன்னோடி ஒரு சுவிசேஷகராக இருக்கிறார். அவர் ஆத்துமாக்களை ஆதாயம் செய்து, அவர்களைச் சீஷராக்கி, இந்த விசுவாசிகளுக்கு விசுவாசத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைப் போதிக்கிறார். அடுத்த படி தேவன் உள்ளூர் தலைவர்களை எழுப்பும்படி ஜெபிப்பதாகும். இந்தப் புதிய தலைவர்கள் புதிய அண்டைப் பகுதிகளிலோ அல்லது பட்டணங்களிலோ புதிய ஊழியத்தைத் துவக்குமாறு, அவர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும். சபைகள் புதிய சபைகளை, பிறகு மேலும் புதிய சபைகளைத் துவங்கும்படி இந்தச் செய்முறை தொடர்ந்து நடக்கிறது. முன்னோடி சுவிசேஷகர் தொடர்ந்து இந்த உள்ளூர் தலைவர்களுக்குப் பயிற்சியளித்து, வெவ்வேறான குழுக்களைச் சபைகளாக அமைக்க வேண்டும். பிறகு அவர் ஊழியத்தை உள்ளூர் தலைவர்களின் கைகளில் விட்டுவிட வேண்டும். என்றாலும் உதவிக்காகவும், ஊக்கமளித்தலுக்காகவும் தொடர்ந்து அவர்களைச் சந்தித்துவர வேண்டும்.

## முடிவுரை

சபை ஸ்தாபிப்பதில் வெற்றிபெற விரும்பும் முன்னோடி சுவிசேஷகர் இவைகளைச் செய்ய வேண்டும்:

1. ஆவிக்குரியபிரகாரமாக முதிர்ச்சியடைந்தவர்களாகவும், நன்றாக ஆயத்தமானவர் களாகவும், பயிற்சி பெற்றவர்களாகவும் இருக்க வேண்டும்.
2. ஒரு சுவிசேஷ அணியை உருவாக்கி, சீஷராக்குவது எப்படி என்று அறிந்திருக்க வேண்டும்.
3. "இங்கே வா" என்ற தத்துவத்தை அல்ல, "அங்கே போ" என்ற தத்துவத்தைப் பின்பற்றி, உலகத்துக்குள் சென்று, இழந்துபோன ஆத்துமாக்களைக் கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்த வேண்டும்.
4. சந்தோஷமானதும், மகிழ்ச்சியானதுமான ஆராதனைகளைத் துவங்க வேண்டும்.
5. புதிய விசுவாசிகளைத் தொடர்ந்து சென்று, அவர்களை எப்படிச் சீஷராக்குவது என்று அறிந்திருக்க வேண்டும்.
6. புதிய தலைவர்களுக்கு எப்படிப் பயிற்சியளிப்பது என்று அறிந்திருக்க வேண்டும்.
7. புதிய விசுவாசிகளுக்கு எப்படி ஞானஸ்நானம் கொடுப்பது, திருவிருந்தைப் பரிமாறுவது எப்படி என்று அறிந்திருக்க வேண்டும்.
8. இழந்துபோனவர்களை ஆதாயப்படுத்துவது எப்படி என்று உள்ளூர் மக்களுக்குப் பயிற்சியளித்து, அவிசுவாசிகளின் வீடுகளில் எப்படி வேதாகம ஆய்வை நடத்துவது என்று வழிநடத்த வேண்டும்.
9. புதிய சபையை வழிநடத்தும்படி உள்ளூர் தலைவர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும்.
10. சபை சுய ஆளுகை, சுய ஆதரவு, சுய பெருக்கம் இவைகளைப் பெறும்படி வழிநடத்த வேண்டும்.
11. புதிய ஊழியத்தைத் துவங்கும்படி தங்களுக்குச் சொந்தமான சுவிசேஷ அணிகளை உருவாக்குவது எப்படி என்று புதிய விசுவாசிகளுக்குப் பயிற்சியளிக்க வேண்டும்.

# செயல்பூர்வமான அம்சங்கள்

# உங்கள் அணிக்குப் பயிற்சி அளிப்பது எப்படி?

# செயல்பூர்வமான அம்சங்கள்:

## உங்கள் அணிக்குப் பயிற்சியளிப்பது எப்படி?

முன்னோடி சுவிசேஷகர் தனது ஊழியத்தை எப்படிச் செயல்பூர்வமான வழிகளில் நிறைவேற்ற வேண்டும்என்பதைக்கையேட்டின்இந்தப்பகுதிவிளக்குகிறது.தேவனுடையபரிசுத்தஆவியானவரின் தலைமைத்துவம் மற்றும் வழிநடத்துதலில் இந்தச் செயல்முறைகளைப் பின்பற்றினால், இவை செயல்படுகின்றன. இவை இந்த வகையில் பரிசுத்த ஆவியானவரால் தூண்டப்பட்டிருக்கின்றன என்று புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளபடியால் செயல்படுகின்றன. முன்னோடி சுவிசேஷகர் இந்த அணுகுமுறையைப் பயன்படுத்தும்போது, புதிய ஏற்பாட்டு நற்செய்தி ஊழியச் செயல்முறைகளை இக்காலத்திய பின்னணியில் செயல்படுத்துகிறார்.


1. புதிய குழுக்களை / புதிய சபைகளைத் துவக்குவது எப்படி? ... 33

படி 1: சமாதானத்தை நாடுபவரைக் கண்டுபிடிப்பது எப்படி? ... 33

படி 2: செயல்பூர்வமான வழியில் தேவ அன்பைக் காட்டுவது எப்படி? ... 35

படி 3: வேதாகம ஆய்வுகளை வழிநடத்துவது எப்படி? ... 37

படி 4: அயிக்கோஸ் கொள்கையைப் பின்பற்றுவது எப்படி? ... 40

2. பரிசுத்த ஆவியானவர் ... 40

3. ஜெபம் ... 44

4. இரட்சிப்பு ... 49

5. தனிப்பட்ட சாட்சி ... 52

6. சுவிசேஷத்தை விளக்கும் ஆறு வசனங்கள் ... 54

# செயல்பூர்வமான அம்சங்கள்:

## உங்கள் அணிக்குப் பயிற்சியளிப்பது எப்படி?

*உங்கள் அணிக்கு நீங்கள் போதிக்கும் முதல் காரியம்*

### *புதிய குழுக்களை / புதிய சபைகளைத் துவங்குவது எப்படி?*

**நீங்கள் உங்கள் அணியை முதன்முதலாகச் சந்திக்கும்போது, இதுவே நீங்கள் அவர்களுக்குப் போதிக்கும் முதல் காரியமாகும். "புதிய குழுக்களை / புதிய சபைகளைத் துவங்குவது எப்படி?" என்ற தலைப்பின் கீழாக நான்கு படிகளிலும் உங்கள் அணிக்குப் பயிற்சியளித்த பிறகு, சமாதானத்தைத் தேடும் மக்களைக் கண்டுபிடிக்குமாறு அவர்களை அனுப்பி, வேதாகம ஆய்வுகளைத் துவங்குமாறு செய்யுங்கள். அடுத்த வாரத்திலிருந்து வாரந்தோறும் நீங்கள் அவர்களைச் சந்தித்து, சீஷத்துவப் பயிற்சிகளைப் பயன்படுத்தி அவர்களைச் சீஷராக்கத் துவங்க வேண்டும்.**

ஒரு முன்னோடி ஊழியர் ஒரு பட்டணத்துக்குள் நுழையும்போது, பரிசுத்த ஆவியானவர் அவரை ஆவிக்குரிய பசிதாகம் கொண்டிருக்கும் மக்களிடம் வழிநடத்துவார் என்பதைக் கருத்தில் கொண்டிருக்க வேண்டும். தேவன் எல்லா இடங்களிலும் செயல்படுகிறார், கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளத் திறக்கும்படி அவர் சில இருதயங்களை ஆயத்தப்படுத்துகிறார். ஆனால் அவர்கள் தனிப்பட்ட முறையில் சுவிசேஷச் செய்தியைக் கேட்க வேண்டும். பரிசுத்த ஆவியானவர் தமது பணியைச் செய்வார் என்று சுவிசேஷகர் முழு நம்பிக்கை வைத்திருக்க வேண்டும். இருதயங்களை ஆயத்தப்படுத்துவதே பரிசுத்த ஆவியானவரின் பணியாகும். சுவிசேஷகரின் பணி எளிமையானது - பரிசுத்த ஆவியானவரால் ஆயத்தப்படுத்தப்படுகிறவர்களை அவர் கண்டுபிடிக்க வேண்டும்.

அநேக காரியங்கள் ஒருபோதும் மாறுவதில்லை. வேதாகமத்தின் செய்தி எப்போதும் மாறாததாக இருக்கிறது. செய்முறை எப்போதும் மாறிக்கொண்டிருக்கிறது. இந்தப் புத்தகத்திலுள்ள செய்முறைகளைப் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலில் பின்பற்றும்போது, அவை செயல்படுகின்றன. பரிசுத்த ஆவியானவரின் தலைமைத்துவத்தின்கீழாகப் புதிய சபையைத் துவங்குவதின் அடிப்படைகள்:

1. தேவனுடைய தலைமைத்துவத்தின் கீழாகச் சுய ஆளுகை
2. தேவனுடைய தலைமைத்துவத்தின் கீழாகத் தன்னாதரவு
3. தேவனுடைய தலைமைத்துவத்தின் கீழாகச் சுய பெருக்கமடைதல்.

இதுவே இலக்காகும். இந்த இலக்கை எட்ட வேண்டுமானால், எல்லாக் கலாச்சாரத்திலும் செயல்படக் கூடிய வேதாகமரீதியான செயல்முறைகளை நாம் பயன்படுத்த வேண்டும்.

## *படி 1: சமாதானத்துக்குப் பாத்திரரைக் கண்டுபிடிப்பது எப்படி?*

**பரிசுத்த ஆவியானவர் தன்னை வழிநடத்துகிறார், அவர் இழந்துபோன மக்களின் இருதயங்களை ஆயத்தப்படுத்துகிறார் என்ற நம்பிக்கையை முன்னோடி ஊழியர் கொண்டிருக்க வேண்டும்.**

முன்னோடி ஊழியர் ஒரு பகுதியைத் தெரிந்துகொண்டு, அந்த இடத்துக்குச் சென்று, தெருக்களிலும், விடுதிகளிலும், வீடுகளிலும், எல்லா இடங்களிலும் மக்களைச் சந்திக்க வேண்டும். ஒரு மக்கள் தொகை விவரப் பட்டியலைப் பயன்படுத்தலாம். இழந்துபோன மக்களின் இருதயங்களை ஆதாயப்படுத்துவது தேவனுடைய பணியாகும். முன்னோடி சுவிசேஷகரால் இதைச் செய்ய **முடியாது.** பரிசுத்த ஆவியானவருக்கு மட்டுமே ஒருவரை ஆதாயப்படுத்தி, கிறிஸ்துவின் தேவையை உணர வைக்கும் வல்லமை உண்டு. யாருடைய இருதயம் பரிசுத்த ஆவியானவரால் ஆயத்தப்படுத்தப்பட்டிருக்கிறதோ அவரை அல்லது அவர்களைக் கண்டுபிடிப்பதே முன்னோடி

சபை ஸ்தாபகரின் பணியாகும். அதாவது சமாதானத்தையும், தேவனையும் நாடுகிறவர்களை நாம் கண்டுபிடிக்க வேண்டும்.

**இயேசு இந்த நபரைச் சமாதான பாத்திரன் என்று அழைக்கிறார்.** லூக்கா 10:5-6 வசனங்கள் "ஒரு வீட்டில் பிரவேசிக்கிறபோது: இந்த வீட்டுக்குச் சமாதானம் உண்டாவதாகவென்று முதலாவது சொல்லுங்கள்.சமாதான பாத்திரன் அங்கே இருந்தால், நீங்கள் கூறின சமாதானம் அவனிடத்தில் தங்கும், இல்லாதிருந்தால் அது உங்களிடத்திற்குத் திரும்பிவரும்" என்று கூறுகின்றன.

**முன்னோடி ஊழியர் ஒரு பகுதிக்குள் சென்று "நான் ஒரு வேதாகம ஆய்வை வழிநடத்த விரும்புகிறேன். உங்களுக்கு அதில் ஆர்வம் உண்டா?" என்று கேட்க வேண்டும். அந்த நபர் "ஆம்" என்று பதிலளித்தால், அவர் சமாதான பாத்திரனாக இருக்கிறார். எந்த இடத்தில் வேதாகம ஆய்வை நடத்தலாம் என்று அவர்களே ஓரிடத்தைக் குறிப்பிடும்படி செய்யுங்கள்.** ஏன் இதைச் செய்ய வேண்டும்? சபை சுய ஆளுகை கொண்டதாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் துவக்கத்திலிருந்தே ஒவ்வொரு செயலையும் செய்ய வேண்டும். வேதாகம ஆய்வுகளை ஒரு மரத்தடியிலோ, ஒரு வீட்டிலோ அல்லது பொது இடத்திலோ நடத்தலாம். என்றாலும், கூடுமானவரையில் ஒரே இடத்தில் வாரந்தோறும் வேதாகம ஆய்வுகளை நடத்துவது சாதகமானதாகும். அது இடத்தைக் குறித்த தவறான எண்ணங்களை அகற்றிவிடுகிறது. முன்னோடி ஊழியர் சிறுபிள்ளைகளை மட்டும் கொண்டு தனது ஊழியத்தைத் துவங்காதிருப்பது நலமாகும். ஒரு வலுவான மையத்தை அவர் உருவாக்கிய பிறகு சிறுபிள்ளைகளுக்கான ஊழியத்தைத் துவங்கலாம். ஆனால், துவக்கத்தில் பல வீடுகளில் வேதாகம ஆய்வுகளை நடத்த வேண்டும் என்பதே அவருடைய நோக்கமாகும். இவை வெவ்வேறான, அதிக இடைவெளி கொண்ட இடங்களில் நடத்தப்பட வேண்டும். ஒரு வேதாகம ஆசிரியராக இருப்பது முன்னோடி ஊழியரின் நோக்கம் அல்ல. வேதாகம ஆய்வின் மறைமுகமான செயல்முறையை அல்லது கதை சொல்லும் செயல்முறையை அவர் பயன்படுத்த வேண்டும். அவர் விதைகளை விதைக்கிறார். பரிசுத்த ஆவியானவர் தமது வேளையின்படி கனிகளை உருவாக்குவார்.

கேள்விகளைக் கேட்பதின் மூலம் சமாதானத்தையும், தேவனையும் தேடுகிறவர்களைக் கண்டுபிடிக்க முடியும். அவர்கள் "ஆம்" என்று பதிலளித்தால் அவர்கள் சமாதான பாத்திரராக இருக்கலாம். அவர்களுடைய வீடுகளுக்குச் சென்று வேதாகம ஆய்வை நடத்துவதற்கான நேரத்தைச் சுவிசேஷகர் முடிவுசெய்ய வேண்டும். முதலாவதாக, முன்னோடி ஊழியர் ஒருவரோடு உரையாடலைத் துவங்கி, இயல்பான வகையில் கீழ்க்கண்ட கேள்விகளைக் கேட்க வேண்டும்:

### கிறிஸ்தவரல்லாத அடிப்படையிலான கலாச்சாரத்துக்கான கேள்விகள்:

1. **உங்களிடம் ஒரு ஆவிக்குரிய கேள்வியைக் கேட்கலாமா?**
2. **தேவனைக் குறித்த உங்கள் எண்ணம் என்ன?**
3. **எல்லாவற்றையும் உண்டாக்கிய தேவனைத் தனிப்பட்ட முறையில் அறிய விரும்புகிறீர்களா?**
4. **எல்லாவற்றையும் உண்டாக்கிய தேவனைப்பற்றிய ஒரு கதையை உங்களோடு பகிர்ந்து கொள்ளலாமா?**

### கிறிஸ்தவ அடிப்படையிலான கலாச்சாரத்துக்கான கேள்விகள்:

1. **உங்களிடம் ஒரு ஆவிக்குரிய கேள்வியைக் கேட்கலாமா?**
2. **நீங்கள் இயேசு கிறிஸ்துவோடு தனிப்பட்ட உறவைக் கொண்டிருப்பதாக உணர்கிறீர்களா அல்லது அப்படிப்பட்ட உறவை உண்டாக்கிக்கொள்ளும் நிலையில் இருக்கிறீர்களா?**
3. **இன்றிரவு நீங்கள் மரித்தால் பரலோகத்துக்குச் செல்லுவோம் என்ற நிச்சயம் உங்களுக்கு உண்டா?**

4. **உங்கள் வீட்டில் ஒரு வேதாகம ஆய்வு நடத்தப்படுவதை நீங்கள் விரும்புகிறீர்களா?**

வானொலி ஒலிபரப்புக்களுக்கும், துண்டுப் பிரதி விநியோகத்திலும், பெரிய நிகழ்வுகளிலும் பதிலளிப்பவர்களின் மூலம் யார் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்க முடியும். இவை கூடுதலான வழிகளாகும். எப்படியிருப்பினும், முன்னோடி ஊழியரும் அவருடைய அணியினரும் ஆர்வம் காட்டும் எவரிடமும் அவர்களுடைய வீட்டில் வேதாகம ஆய்வுகளை நடத்தலாமா (தனிப்பட்ட முறையில் மக்களிடம் கேட்பதற்கு அப்பாற்பட்டு) என்று கேட்க வேண்டும். இதன்மூலம் பரிசுத்த ஆவியானவர் யாருடைய இருதயங்களில் கிரியை செய்கிறார் என்பதைக் கண்டறிய முடியும்.

## *படி 2: செயல்பூர்வமான வழியில் தேவ அன்பைக் காட்டுவது எப்படி?*

**யோவான் 13:34 வசனத்தில் இயேசு "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்" என்ற புதிய கட்டளையைக் கொடுத்திருக்கிறார். நாம் எப்படி ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும் என்பதையும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்: "நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்."**

**"இயேசு நம்மிடத்தில் அன்புகூருவதுபோல" நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும்.**

**அப்படியானால், இயேசு நம்மிடத்தில் எப்படி அன்புகூருகிறார் என்பதே கேள்வியாகும்.**

**இயேசு பல வழிகளில் நம்மிடத்தில் அன்புகூர்ந்தாலும், இரு வழிகளை மட்டும் இங்கே பார்ப்போம்:**

1. **நிபந்தனையில்லாமல்**: (மத்தேயு 9:9-13) இயேசு தம்மைப் பின்பற்றி வரும்படி மத்தேயுவிடம் கூறினார். அவருடைய நாட்களில் மத்தேயு புறக்கணிக்கப்பட்டவராக, ஒரு "பாவியாக" இருந்தார். ஆனால் இயேசு மத்தேயுவிடம் அன்புகாட்டினார். புறக்கணிக்கப்பட்டு, இழந்துபோன, வேதனைப்படும் ஒரு மனிதனை இயேசு கண்டார். தம்மைப் பின்பற்றும்படி இயேசு மத்தேயுவிடம் கூறினார். இயேசு மனிதன்மீது அதிகமான அன்புகொண்டிருந்தபடியால் அவனுக்காக மரிக்கவும் அவர் சித்தமுள்ளவராக இருந்தார். நம்மீதுள்ள இயேசுவின் அன்பு நம்மைச் சார்ந்திருக்கவில்லை, நாம் செய்வதையும், நாம் யாராக இருக்கிறோம் என்பதையும் அது சார்ந்திருக்கவில்லை. நாம் அவரைப் பின்பற்றினாலும் அல்லது அவரைப் புறக்கணிக்கப்பதைத் தெரிந்துகொண்டாலும், அவர் நம்மிடத்தில் அன்புகாட்டுகிறார்.
2. **தியாகத்தோடுகூட**: (மத்தேயு 13:13-14) இயேசு சில வேளைகளில் தனிமையில் நேரத்தைக் கழிக்க விரும்பினாலும், எப்போதுமே தம்மிடம் வருகிறவர்களுக்கு உதவிசெய்ய ஆயத்தமும் விருப்பமும் கொண்டிருந்தார். தேவையிலிருந்தவர்கள் இயேசுவை அணுகியபோது, அவர் எப்போதுமே தம்மைத்தாமே கொடுத்தார். அவர் தமது நேரத்தையும் பலத்தையும் கொடுத்தார். இயேசு மனதுருக்கம் கொண்டு, எப்போதுமே **வேதனைப்படுகிறவர்களையும், ஊனமுற்றவர்களையும், இழந்துபோனவர்களையும் தொட்டார். எவருக்கும் உதவிசெய்ய முடியாத அளவுக்கு அவர் பரபரப்பாகச் செயல்படவில்லை.**

**இதே வழிகளில் நாம் ஒருவர் மற்றவர்மீது அன்புகாட்ட வேண்டும்:**

1. **நிபந்தனையில்லாமல்**: லேவியராகமம் 19:18 வசனத்தில் தேவன் "உன்னில் நீ அன்புகூருவது போல் பிறனிலும் அன்புகூருவாயாக" என்ற கட்டளையைக் கொடுத்திருக்கிறார். லூக்கா 10:29 வசனத்தில் சீஷர்கள் இயேசுவிடம் "எனக்குப் பிறன் யார்?" என்று கேட்டார்கள். இயேசு அவர்களுக்கு ஒரு உவமைக்கதையைக் கூறினார். இதன்மூலம் அவர்கள் அதிகமாக வெறுத்த சமாரியர்களுக்கும் அவர்கள் அன்புகாட்ட வேண்டிய பிறனாக இருக்கிறார்கள் என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

இயேசுவைப் பின்பற்றும் நாம் யாரிடத்தில் அன்புகாட்ட வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ள முடியாது.

நாம் எல்லா மக்களிடத்திலும் அன்புகாட்ட வேண்டும் என்பதை இயேசு தெளிவுபடுத்தியிருகிறார். எல்லா வர்க்கத்தினர், ஜாதியினர், நண்பன் அல்லது எதிரி, பணக்காரர் அல்லது ஏழை, சுத்தமானவர் அல்லது அசுத்தமானவர் எல்லாரிடத்திலும் நாம் அன்புகாட்ட வேண்டும்.

தேவன் அன்பாகவேயிருக்கிறார். சிலுவையே அவருடைய அன்பின் மிகப்பெரிய வெளிப்பாடாகும். தேவன் இப்போதும் உலகத்துக்குத் தமது அன்பைக் காட்ட விரும்புகிறார். இன்று அவரால் எப்படித் தமது அன்பைக் காட்ட முடியும்? தமது சீஷர்களாகிய உங்கள் மூலம் அவர் அதைக் காட்ட விரும்புகிறார். எனவே, நீங்கள் அதைச் செய்வீர்களா? இழந்துபோனவர்களையும், வேதனைப்படுகிறவர்களையும் எட்டிச் சென்று, செயல்பூர்வமான வழியில் அவர்களுக்குத் தேவ அன்பைக் காட்டுவீர்களா?

2. **தியாகத்தோடுகூட**: அன்புகாட்டுவதற்குப் பணம் தேவைப்படாவிட்டாலும், நேரத்தையும் பலத்தையும் செலவழிக்க வேண்டியிருக்கிறது. ஒருவர் மற்றவருடைய பாரத்தைச் சுமக்க வேண்டும் என்று வேதாகமம் நமக்குக் கட்டளையிடுகிறது. எவரேனும் வேதனைப்பட்டால் அல்லது தேவையில் இருந்தால், அவருடைய வேதனை மற்றும் சிக்கலின் நடுவில் அவரோடு கூட நடப்பதற்கு அதிக அளவில்லான உணர்வுபூர்வமான பலம் தேவைப்படுகிறது. சில வேளைகளில் ஒருவர் சுகமடைவதற்கு அதிகமான காலம் தேவைப்படுகிறது. அவரோடுகூட நாம் பல மாதங்கள் அல்லது பல ஆண்டுகள் நடக்க வேண்டியிருக்கலாம். மற்றொருவருடைய வாழ்க்கையில் முதலீடு செய்யும்படி நாம் நேரத்தைச் செலவழிக்க ஆயத்தமாக இருக்கிறோமா? தேவ அன்பைக் காட்டும்படி நமது வாழ்க்கையைத் தியாகம் செய்ய விருப்பமுள்ளவர்களாக இருக்கிறோமா?

   **யோவான் 13:35: "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்."**

நாம் நிபந்தனையில்லாமல், தியாகத்தோடுகூடத் தேவ அன்பைக் காட்டுவோமானால், மக்கள் நம்மில் அவருடைய அன்பைக் காண்பார்கள், நாம் வேறுபட்டவர்கள் என்பதை அவர்கள் அறிந்து, அவருடைய அன்புக்கு இழுக்கப்படுவார்கள். அவருடைய அன்பு இழந்துபோனவர்களின் இருதயங்களைத் திறக்கும். அவர்கள் அவருடைய சத்தியத்தைக் கேட்டு, ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருப்பார்கள். அவருடைய அன்பு சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ளுவதற்கான கதவுகளை நமக்குத் திறந்துகொடுக்கும்.

அப்படியானால் தேவ அன்பை நீங்கள் எப்படிச் செயல்மூலம் காட்ட முடியும்? உங்களுடைய சமுதாயத்தில் எப்படிச் சேவைசெய்ய முடியும்? நீங்களும் உங்கள் சபையும் எப்படிச் சமுதாயத்துக்குள்ளாகச் சென்று தேவ அன்பைக் காட்ட முடியும்? அசாதாரணமான வகையில் உங்கள் சமுதாயத்திலுள்ளவர்களுக்குச் சேவை செய்து, அவர்களை அதிர்ச்சியடைய வைக்க முடியும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். உலகம் எப்போதுமே பதிலுக்கு எதையாவது எதிர்பார்க்கிறது. ஆனால் நாம் அன்புகாட்டி, ஊழியம்செய்யும்போது, பதிலுக்கு எதையும் கேட்கக் கூடாது.

நீங்கள் அவர்களிடம் செல்லும்போது, தேவனுடைய அன்பைச் செயல்பூர்வமாகக் காட்ட விரும்புவதாகக் கூறுங்கள். தேவ அன்பு சுவிசேஷத்துக்கு அவர்களுடைய இருதயத்தைத் திறந்துகொடுக்கும்போது, அவர்களுடைய வீட்டில் வேதாகம ஆய்வு நடத்தப்படுவதில் அவர்கள் ஆர்வம் காட்டுகிறார்களா என்று கேளுங்கள். தேவன் உங்களைச் சமாதான பாத்திரர்களிடம் வழிநடத்துவார்.

# அவிசுவாசிகளுக்குச் சுவிசேஷரீதியான வேதாகம ஆய்வுகள்

*இயேசுவின் நற்செய்தியைக் கதையாகக் கூறுதல்*

எழுதியவர்: கிறிஸ்டி பிராவ்னர்

சமாதானத்துக்குப் பாத்திரர் யார் என்பதை நீங்கள் கண்டுபிடித்த பிறகு, அவர் தன்னுடைய வீட்டில் வேதாகம ஆய்வை நடத்துவதற்குச் சம்மதித்த பிறகு, வேதாகம ஆய்வை நடத்துவதற்காக எப்போது அவர்களுடைய வீட்டுக்குச் செல்லுவது என்பதைத் தீர்மானிக்க வேண்டும். அந்த வேதாகம ஆய்வில் பங்கெடுக்கும்படி அவர் தமது குடும்ப உறுப்பினர்களையும், நண்பர்களையும் அழைக்குமாறு அவரை ஊக்குவிக்க வேண்டும். வாரத்துக்கு ஒரு பாடம் வீதம் இந்த ஆய்வு ஏழு முதல் எட்டு வாரங்கள் வரை நடத்தப்படும் என்பதை அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அவர் வாரத்துக்கு ஒரு ஆய்வுக்கு மேலாக நடத்த விரும்பினால், முன்னோடி ஊழியரால் அப்படிச் செய்ய முடியுமானால், வாரத்துக்கு ஒரு ஆய்வு மட்டுமே நடத்த வேண்டும் என்ற அவசியமில்லை.

வேதாகம ஆய்வுகளை நடத்துவதில் கதைசொல்லும் செயல்முறையைக் குறித்து இந்தப் பகுதி விளக்குகிறது. மறைமுகமான செயல்முறையைக் குறித்துப் பிற்சேர்க்கையில் விளக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயல்முறையும் சுவிசேஷரீதியிலான வேதாகம ஆய்வுகளின் வெவ்வேறான தொகுப்பைப் பயன்படுத்துகிறது.

## *கதைசொல்லுதல்*

இந்தச் செயல்முறை வாசிக்கத் தெரியாதவர்களுக்காக வடிவமைக்கப்பட்டிருந்தாலும், வாசிக்கத் தெரிந்தவர்கள் மத்தியிலும் இதை வெற்றிகரமாகச் செயல்படுத்தலாம்.

நினைவில் வைத்திருங்கள்: இவர்கள் அவிசுவாசிகள். வேதாகமத்தின் உள்ளடக்கம் அவர்களுக்குத் தெரியாது, அதைப் பயன்படுத்தவும் அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் ஒருவேளை வேதாகமத்தைக் குறித்துக் கேள்விப்படாமல் இருக்கலாம். அவர்களுக்குப் போதிக்க அதிகமான பொறுமை தேவைப்படும். நீங்கள் எப்போதுமே இருவர் இருவராக ஊழியம் செய்வது நல்லது. ஆய்வில் ஈடுபடுபவர்கள் வேதாகமத்தைப் பயன்படுத்துவது எப்படி என்பதைக் கற்றுக்கொள்ளுவதில் இருவரும் பங்காளிகளாகச் செயல்பட்டு அவர்களுக்கு உதவலாம்..

முதலாவதாக, வேதாகமம் எல்லாவற்றையும் உண்டாக்கிய தேவனுடைய வார்த்தை என்று விளக்குங்கள். அவர் தமது சத்தியத்தை நம்மோடு பகிர்ந்துகொள்ளும்படி வெவ்வேறான மக்களின் மூலம் இதை எழுதியபடியால் இது தேவனால் எழுதப்பட்ட புத்தகமாகும். இந்தப் புத்தகம் தேவன் நம்மீது எவ்வளவாக அன்புகொண்டிருக்கிறார் என்பதையும், நமக்காக அவருடைய நோக்கம் என்ன என்பதையும் காட்டுகிறது. வேதாகமம் உண்மையானது என்று நீங்கள் விசுவாசிப்பதை அவர்களோடு பகிர்ந்துகொள்ளலாம்.

இரண்டாவதாக, வேதாகமத்தை அவர்களுக்குக் காட்டுங்கள். வேதாகமம் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்று இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது என்றும், அவை மேலும் பல சிறு புத்தகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன என்றும் அவர்களுக்குச் சொல்லுங்கள். பழைய மற்றும் புதிய ஏற்பாட்டின் உள்ளடக்கத்தைக் குறித்துச் சிறிய விளக்கம் கொடுங்கள்.

மூன்றாவதாக, பக்க எண்களைக் கொண்டு அவர்களால் வேதாகமத்தின் ஒரு புத்தகத்தைக் கண்டுபிடிக்க முடியும் என்பதைக் காட்டுங்கள். மத்தேயுவின் பக்க எண்ணைக் கண்டுபிடித்து, மத்தேயு சுவிசேஷத்தை எடுக்க அவர்களுக்கு உதவுங்கள். மத்தேயு சுவிசேஷத்தை அவர்கள் கண்டுபிடித்த பிறகு நீங்கள் அவர்களுக்கு அதிகார மற்றும் வசனங்களின் பிரிவு

களைக் காட்டலாம். அவர்களுக்கு நீங்கள் சொல்லப்போகும் கதை இந்த மத்தேயுவின் புத்தகத்திலிருந்து வருகிறது என்று அவர்களிடம் சொல்லுங்கள்.

கதையைச் சொல்லி, ஆவிக்குரிய சத்தியங்களைப் பகிர்ந்துகொள்ளும்போது, கீழ்க்கண்ட ஆலோசனைகளைப் பின்பற்றுங்கள்:

1. எப்போதுமே அந்த நபரை மரியாதையோடு நடத்துங்கள். கதையைச் சொல்லுவதற்கும், அடுத்த வாரம் அதைத் தொடருவதற்கும் அனுமதியைக் கேளுங்கள்.

2. ஒரு அமைதியான, உரையாடும் தொனியில் பேசுங்கள். தனிப்பட்டவரிடம் பிரசங்கம் செய்யாதிருங்கள்.

3. சத்தியங்களைக் குறித்து விவாதம் செய்யாதிருங்கள். அவிசுவாசியின் இருதயத்தில் பரிசுத்த ஆவியானவர் சத்தியத்தை உணர்த்துவதற்கு அனுமதியுங்கள்.

4. அந்த நபரை நியாயந்தீர்க்காதீர்கள், அவர் எதை விசுவாசிக்கிறாரோ அதற்காகக் குற்றம் சொல்லாதீர்கள். வேதாகமத்தை வாசித்து, பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தையின் மூலமாகக் கிரியைசெய்ய அனுமதியுங்கள்.

5. ஒரு சிறிய ஜெபத்தோடு ஒவ்வொரு கூட்டத்தையும் துவங்குங்கள். கதைகளைப் புரிந்துகொள்ள உதவுமாறு தேவனிடம் வேண்டிக்கொள்ளுங்கள்.

6. கதையைச் சொல்ல இந்த வழிமுறையைப் பயன்படுத்துங்கள்: புத்தகத்திலிருந்து ஒவ்வொரு வாக்கியமாக வாசியுங்கள். பிறகு நீங்கள் வாசித்ததை உங்கள் சொந்த வார்த்தைகளில் விளக்குங்கள். இதன்மூலம் அந்த நபர் வேதாகமக் கதையை இருமுறை கேட்க வாய்ப்புக் கிடைக்கும். எளிய முறையில் அதன் விளக்கத்தையும் அறிந்துகொள்ள முடியும். கூடுதலான பிரதிகள் இருக்குமானால், பங்கெடுப்பவர்கள் கதைகளை வாசித்து, இதில் பங்கெடுக்க முடியும்.

7. கதையில் முடிவில் வரும் நேர்முகக் கேள்விகளைத் தலைவர் கேட்க வேண்டும். விரிவுபடுத்தவோ அல்லது விவாதிக்கவோ இந்தக் கேள்விகள் கொடுக்கப்படவில்லை. மறுஆய்வு செய்து, அவர்கள் கதையைப் புரிந்துகொண்டிருக்கிறார்களா என்று சரிபார்ப்பதே இதன் நோக்கமாகும்.

8. ஆவிக்குரிய சத்தியங்களை வாசியுங்கள். ஒவ்வொரு சத்தியத்தையும் குறித்து விவாதித்து, கேள்வி கேட்கக் குழு உறுப்பினர்களை அனுமதியுங்கள். ஆனால் **ஒருபோதும்** எவருடனும் விவாதம் செய்யாதீர்கள். இந்த இடத்தில் உறுப்பினர்கள் ஆவிக்குரிய சத்தியங்களை ஒப்புக்கொள்ள வேண்டும், ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அவசியமில்லை. தேவனுடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியங்களை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதே முக்கியமாகும்.

9. ஆவிக்குரிய சத்தியங்களுக்குப் பிறகு, ஒவ்வொருவரும் தேவைகளையும், ஜெப விண்ணப்பங்களையும் குழுவோடு பகிர்ந்துகொள்ளுமாறு செய்யுங்கள்.

10. ஒவ்வொரு தேவைக்காகவும், குழுவிலுள்ள ஒவ்வொரு நபருக்காகவும் ஜெபியுங்கள். குழு வளர்ச்சியடைந்து, மக்கள் ஆண்டவரை ஏற்றுக்கொள்ளும்போது, உறுப்பினர்கள் பரிந்துரை ஜெப வேளையில் ஒருவர் மற்றவருக்காக ஜெபிப்பதற்கு அனுமதியுங்கள்.

11. ஏழாம் பாடத்தின் முடிவுக்குப் பிறகு அவர்கள் இயேசுவைத் தங்கள் ஆண்டவராக ஏற்றுக்கொள்ளும்படி அழைப்புவிடுக்க வேண்டும். ஏழு வாரங்களில் இடைப்பட்ட நேரத்தில் எவரேனும் தங்கள் வாழ்க்கையை இயேசுவுக்கு ஒப்புக்கொடுப்பதில் ஆர்வத்தைத் தெரிவிப்பார்களானால், இயேசுவை எப்படி ஆண்டவராக ஏற்றுக்கொள்ளுவது என்பதை அவர்களுக்குப் போதிக்க வேண்டும். அப்படிச் செய்யும்படியான வாய்ப்பை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

# புதிய விசுவாசிகளுக்காகத் தொடர் ஊழிய வேதாகம ஆய்வுகள்

(Follow-up Bible Studies for New Believers)

*கிறிஸ்துவில் ஒரு புது வாழ்வைத் துவங்குதல்*

எழுதியவர்: கிறிஸ்டி பிராவ்னர்

**மத்தேயு 28:19 மற்றும் 2 தீமோத்தேயு 2:2**

நாம் வெறுமனே மக்களைப் புதிதாக மனம் மாறச் செய்ய வேண்டும் என்று அல்ல, "போய், சீஷராக்குங்கள்" என்ற கட்டளையை இயேசு நமக்குக் கொடுத்திருக்கிறார். உங்கள் பாடக் குழுவிலுள்ளவர்கள் இயேசுவைத் தங்கள் ஆண்டவராக ஏற்றுக்கொண்டு, அவருக்குத் தங்கள் வாழ்க்கையை ஒப்புக்கொடுக்கும் தீர்மானத்தை எடுத்த பிறகு, அவர்களைச் சீஷராக்குவது அத்தியாவசியமானதாகும். அவர்கள் தேவனோடுள்ள தங்கள் புதிய உறவில் வளர்ச்சிபெறும்படியாகவும், தேவனுக்குள் நோக்கமும் அர்த்தமும் நிறைந்த அபரிமிதமான வாழ்க்கை வாழும்படியாகவும், உடனடியாக அவர்களுக்குச் சீஷராகும் பயிற்சியைக் கொடுக்க வேண்டும்.

முதலாவதாக, தேவனை அறியும்படி அவர்களைச் சீஷராக்குங்கள்: தேவனுடைய வார்த்தையிலும், ஜெபத்தின்மூலமாகவும் அவரோடு நேரத்தைச் செலவழிப்பது எப்படி என்று அவர்களுக்குப் போதியுங்கள். இரண்டாவதாக, ஊழியத்துக்காக அவர்களுக்குப் பயிற்சியளியுங்கள்.

1. **ஒரு தீர்மானமான எல்லை**

   முன்னோடி ஊழியர் ஒரு தீர்மானமான எல்லையை எட்டியிருக்கிறார். இப்போது அவர் நற்செய்திப் பாடங்களைக் கற்று முடித்திருக்கும் எல்லோரையும் சந்திக்கத் துவங்க வேண்டும். தொடர் ஆய்வு வகுப்புக்களில் பங்கெடுக்கும்படி தீர்மானம் எடுத்தவர்களையும், இன்னும் தீர்மானம் எடுக்காதவர்களையும் அழையுங்கள். இந்த எல்லையில் முன்னோடி ஊழியர் இரண்டு காரியங்களைச் செய்ய வேண்டும்.

   A. உடனடியாகத் தொடர் ஊழியப் பாடங்களைப் படிக்கத் துவங்க வேண்டும். புது விசுவாசி ஒவ்வொருவரையும் சீஷராக்க வேண்டும். ஒவ்வொரு விசுவாசிக்கும், ஒவ்வொரு சபைக்கும் சீஷத்துவம் அத்தியாவசியமானதாகும். சீஷராக்குதல் ஒரு விசுவாசி ஆவிக்குரிய பிரகாரமாக வளரும்படி செய்கிறது. இது வலுவான சபைக்கான அஸ்திபாரத்தைக் கொடுத்து, சபை பெருக்கமடையும்படி செய்கிறது. முன்னோடி ஊழியர் மறைமுகமான செயல்முறையைப் பயன்படுத்தி, தொடர் ஊழியப் பாடங்களை நடத்த வேண்டும். முன்னோடி ஊழியர் எந்தப் பாடத்தையும் பயன்படுத்தலாம் என்றாலும் நாங்கள் *கிறிஸ்துவில் ஒரு புது வாழ்வைத் துவங்குதல்* பாடங்களைப் பரிந்துரை செய்கிறோம்.

   B. **மிக முக்கியமானது**. எப்போதுமே இன்னுமதிகமான சமாதானப் பாத்திரர்களைத் தேடி, நற்செய்தி ஆய்வுப் பாடங்கள் அல்லது கதைத் தொகுதிகளைப் பயன்படுத்தி புதிய குழுக்களைத் துவங்குங்கள்.

2. **மூன்றாவது வாரம்**

   இதுவும் தீர்மானமானதொரு வாரமாகும். குழுவினர் ஒரு உள்ளூர் தலைவரைத் தெரிந்தெடுக்கும்படி முன்னோடி ஊழியர் அனுமதிக்க வேண்டும். அவர் அடுத்துவரும் வாரத்தில் விவாதங்களை வழிநடத்துவார். குழுவுக்காக முன்னோடி ஊழியரே தலைவரைத் தெரிந்தெடுக்க முயலக்கூடாது. ஆனால் கோட்பாட்டுரீதியாகப் பிழை ஏற்பட்டுவிடாதவாறு ஆலோசனை கொடுக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். முன்னோடி ஊழியர் தனிப்பட்ட முறையில் உள்ளூர் தலைவரைச் சந்தித்து, அவருக்குப் பயிற்சியளிக்க வேண்டும்.

பரிசுத்த ஆவியானவரின் தலைமைத்துவத்தில், இப்போது முன்னோடி ஊழியர் தேவன் புதிய விசுவாசிகளின் மத்தியிலிருந்து எழுப்புகிறவர்களைக் கொண்டு தனது சொந்த அணியை உருவாக்க வேண்டும். அவர் அவர்களுக்குப் பயிற்சியளித்து, புதிய சபைகளைத் துவங்கும்படி அவர்களை அனுப்புவார். **நினைவில் வைத்திருங்கள்**: முன்னோடி ஊழியர் வாரம்தோறும் தனது அணியினரைச் சந்திக்க வேண்டும்.

3. **நான்காவது மற்றும் ஐந்தாவது வாரங்கள்**

   உள்ளூர் தலைவர் வேதாகம ஆய்வை வழிநடத்துவார். முன்னோடி ஊழியர் குறுக்கிடாமல் அதைக் கவனித்துக்கொண்டிருக்க வேண்டும். முன்னோடி ஊழியரின் இடத்தில் உள்ளூர் தலைவரே தொடர்ந்து வேதாகம ஆய்வை வழிநடத்துவார்.

4. **ஆறாவது வாரம்**

   இந்த வாரத்தில் முன்னோடி தான் கூட்டத்தில் கலந்துகொள்ளாதிருப்பதற்கு ஒரு காரணத்தைக் கண்டுபிடித்துச் சொல்ல வேண்டும். ஆனால் கூட்டம் தொடர்ந்து நடக்கும்படி செய்ய வேண்டும்.

## *படி 4: அயிக்கோஸ் (oikos) கொள்கையைப் பின்பற்றுவது எப்படி?*

**இந்த இடத்தில் மற்றொரு கொள்கையும் செயல்படுகிறது. அதுவே அயிக்கோஸ் கொள்கையாகும். அப்போஸ்தலர் 16:31 வசனம் "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" என்று சொல்லுகிறது. அயிக்கோஸ் என்றால் ``வீட்டார்" அல்லது ``உங்கள் செல்வாக்கு வட்டம்" என்று அர்த்தமாகும். முழு உலகத்திலுள்ள எல்லோரும் ஒரு அயிக்கோசுக்குச் சொந்தமாக இருக்கிறார்கள்.**

நீங்கள் ஒரு சமாதானத்துக்குப் பாத்திரரைக் கண்டுபிடிக்கும்போது, அவர் தனது அயிக்கோசிலுள்ள எல்லா மக்களையும் உங்களுக்கு அறிமுகம் செய்யுமாறு கேட்டுக்கொள்ள வேண்டும். பிறகு நீங்கள் அவருடைய அயிக்கோசை ஊடுருவ வேண்டும். மேலும், அவருடைய அயிக்கோசிலுள்ள ஒவ்வொரு நபருக்கும் மற்றொரு அயிக்கோஸ் உண்டு. எடுத்துக்காட்டாக, சமாதானத்துக்குப் பாத்திரரான ஒருவருடைய அயிக்கோசில் பத்து நபர்கள் இருப்பார்களானால், அந்தப் பத்து நபர்கள் ஒவ்வொருவருடைய அயிக்கோசிலும் தலா பத்து நபர்கள் இருக்கலாம். பிறகு அவர்களையும் நீங்கள் ஊடுருவ வேண்டும். சமாதானக்குக்குப் பாத்திரரைக் கண்டுபிடித்து, அயிக்கோசின் இயல்பான ஓட்டத்தைப் பின்பற்றுவதே முக்கியமாகும்.

**சீஷத்துவம்**: அணிகளை வெளியே அனுப்பிவிட்ட பிறகு தலைவர்கள் ஒவ்வொரு வாரமும் அணியைச் சந்திக்க வேண்டும். தலைவர் ஒவ்வொரு வாரமும் அணிக்குப் பயிற்சியளித்து, அவர்களை அனுப்பிவைப்பார். இது குழு உறுப்பினர்களுக்கு எப்படி இயேசு கிறிஸ்துவோடு ஆழமானதும், அர்த்தமுள்ளதுமான உறவைப் பெறுவது என்பது குறித்த ஆவிக்குரிய ஒழுங்குகளைப் போதிக்கும் வேளையாகும்.

## *உங்கள் அணிக்கு நீங்கள் போதிக்கும் இரண்டாவது காரியம்:*

### *பரிசுத்த ஆவியானவர்*

பவுல் அப்போஸ்தலன் முற்றிலுமாகப் பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருந்தார். பரிசுத்த ஆவியானவரின் மூலமாகவே அவரால் இரட்சிப்பின் செய்தியை வல்லமையாகப் பிரசங்கித்து, பெரிய விளைபயன்களைப் பெற முடிந்தது, பெரிய அற்புதங்களைச் செய்ய முடிந்தது, புதிய சபைகளைத் துவங்க முடிந்தது. முன்னோடி சுவிசேஷகர் தனது ஊழியத்தில் நல்ல விளைவுகளைப் பெற விரும்பினால், அவர் எல்லா வேளைகளிலும் பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருக்க வேண்டும்.

**ஒரு பட்டணத்தில் பிரவேசித்து, ஆர்வமுள்ள மக்களோடு தொடர்புகொள்ளும்போது -**

பரிசுத்த ஆவியானவர் ஒரு புதிய ஊழியத்தைத் துவங்கும்படியாக, பல்வேறுபட்ட வழிவகைகள், மக்கள் மற்றும் சூழ்நிலைகளின் மூலமாகக் கதவைத் திறந்துகொடுக்கிறார். ஒவ்வொரு பட்டணத்திலும் சுவிசேஷத்தில் ஆர்வம்கொண்ட மக்கள் இருக்கிறார்கள். தேவன் எல்லா இடங்களிலும் கிரியைசெய்து வருகிறார். பரிசுத்த ஆவியானவர் இழந்துபோனவர்களின் இருதயங்களைத் திறந்துகொடுக்கிறார். அவர்களுடைய பாவங்களைக் குறித்து அவர் அவர்களுக்கு உணர்த்தி, இயேசு கிறிஸ்து மகிமைப்படும்படியாக அவர்களுக்குப் புதிய பிறப்பைக் கொடுக்கிறார். ஒரு புதிய ஊழியத்தைத் துவங்குவதற்குப் பரிசுத்த ஆவியானவர் அத்தியாவசியமானவராக இருக்கிறார்.

**வீட்டில் வேதாகம ஆய்வுகளை வழிநடத்தும்போது -**

கூட்டங்களை நடத்தும்போது முன்னோடி ஊழியர் தலைவர்களாகக் கூடியவர்களைக் கண்டுபிடித்து, அவர்களுக்குப் பயிற்சியளிப்பார். பவுல் அப்போஸ்தலன் ஒரு பட்டணத்துக்குள் நுழைந்து, இரண்டு அல்லது மூன்று வாரங்கள் அங்கே தங்கி, ஆத்துமாக்களை ஆதாயம் செய்து, புதிய சபைகளை வழிநடத்தும்படி தலைவர்களைக் கண்டுபிடிப்பார். உள்ளூர் தலைவர்களை எழுப்பும்படி முன்னோடி ஊழியர் பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருக்க வேண்டும்.

**ஒரு புதிய சபையை உருவாக்கும்போது -**

சபை பரிசுத்த ஆவியானவருக்குச் சொந்தமானதாகும். அவரே அதற்கு ஆதாரமாக இருக்கிறார். சபையானது பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் விளைபயனாக இருக்கும்போது, அவர் சபையின் வாழ்வுக்குத் தேவையான ஆவிக்குரிய வரங்களை அதன் உறுப்பினர்களுக்குக் கொடுப்பார். 1 கொரிந்தியர் 12, ரோமர் 12:6-12, 1 பேதுரு நிருபம் ஆகிய பகுதிகளில் இந்த வரங்களைக் குறித்த விவரங்களை நாம் காணலாம்.

**ஒரு பட்டணத்தைவிட்டுச் செல்லும்போது -**

முன்னோடி ஊழியர் தான் ஒரு பட்டணத்தை விட்டுச் செல்லும்போது, பரிசுத்த ஆவியானவர் ஊழியத்தைத் தொடரும்படி அவரைச் சார்ந்திருக்க வேண்டும். பவுல் அப்போஸ்தலன் பட்டணங்களை விட்டுச் செல்லும்போது, அவரால் ஊழியத்தை உள்ளூர் தலைவர்களின் கைகளில் விட்டுச்செல்ல முடிந்தது. ஏனென்றால் உண்மையில் அவர் ஊழியத்தைப் பரிசுத்த ஆவியானவரின் கரங்களிலேயே விட்டுச் சென்றார்.

கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்ய வேண்டுமானால், முன்னோடி ஊழியர் துணிவுள்ளவராக, பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும். எபேசியர் 5:18 வசனம் "துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினாலே நிறைந்திருக்க" வேண்டுமென்று கட்டளையிடுகிறது. பரிசுத்த ஆவியானவரைக் குறித்த கீழ்க்கண்ட சத்தியங்களைக் கவனியுங்கள்.

## 1. பரிசுத்த ஆவியானவரின் பண்புகள்

- பரிசுத்த ஆவியானவர் **நித்தியராக** இருக்கிறார் - எபிரெயர் 9:14
- பரிசுத்த ஆவியானவர் **எங்கும் இருப்பவராக** இருக்கிறார் - சங்கீதம் 139:7-10
- பரிசுத்த ஆவியானவர் **சர்வ வல்லவராக** இருக்கிறார் - லூக்கா 1:35
- பரிசுத்த ஆவியானவர் **சர்வ ஞானியாக** இருக்கிறார் - யோவான் 14:12, 26

  இந்த நான்கு பண்புகளும் தேவனுக்குத் தனிச்சிறப்பானவையாகும். தேவன் மட்டுமே நித்தியராகவும், எங்கும் இருப்பவராகவும், சர்வவல்லவராகவும், சர்வஞானியாகவும் இருக்கிறார்.

2. **இழந்துபோன நபருக்குள்ளாகப் பரிசுத்த ஆவியானவரின் பணி**

- இயேசுவே சத்தியமானவர் என்று பரிசுத்த ஆவியானவர் சாட்சி கூறுகிறார் - யோவான் 15:26-27
- பரிசுத்த ஆவியானவர் பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்துக்கு உணர்த்துகிறார் - யோவான் 16:8-11

3. **கிறிஸ்தவர்களுக்குள்ளாகப் பரிசுத்த ஆவியானவரின் பணி**

- பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்தவர்களுக்கு நித்திய வாழ்வின் நிச்சயத்தைக் கொடுக்கிறார் - 2 கொரிந்தியர் 1:22, எபேசியர் 1:13, 14
- பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்தவனைப் புதுப்பிக்கிறார் - தீத்து 3:5
- பரிசுத்த ஆவியானவர் பாவம் மற்றும் மரணத்தின் பிரமாணத்திலிருந்து கிறிஸ்தவனை விடுவிக்கிறார் - ரோமர் 8:2
- பரிசுத்த ஆவியானவர் உள்ளான மனுஷனிலிருந்து வரும் வல்லமையினால் கிறிஸ்தவர் களைப் பலப்படுத்துகிறார் - எபேசியர் 3:16
- பரிசுத்த ஆவியானவர் சாட்சி கூறும்படி கிறிஸ்தவனைப் புதுப்பித்து, விடுவிக்கிறார் - அப்போஸ்தலர் 8 அதி.

4. **பரிசுத்த ஆவியானவரின் நிறைவும் கனியும்**

- எல்லாக் கிறிஸ்தவர்களும் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட வேண்டும் - எபேசியர் 5:18
- ஆவியின் கனி அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் - கலாத்தியர் 5:22-23
- தேவனுடைய வார்த்தையைத் துணிவோடு பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பதே பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவதின் நோக்கமாகும் - அப்போஸ்தலர் 4:29, 31

5. **பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவதற்கான நிபந்தனைகள்**

- ஒருவர் இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டும் - அப்போஸ்தலர் 2:38.
- ஒருவர் தனது வாழ்க்கையில் தான் அறிந்த எல்லாப் பாவங்களையும் அறிக்கையிட வேண்டும் - 1 யோவான் 1:9 (வாசிக்க: சங்கீதம் 66:18)
- விசுவாசத்தின்மூலம், பரிசுத்த ஆவியானவர் உங்களை நிரப்பி, கட்டுப்படுத்தும்படி வேண்டிக்கொள்ள வேண்டும் - 1 யோவான் 5:14-15 (வாசிக்க: ரோமர் 1:17)
- ஒவ்வொரு நாளின் ஒவ்வொரு கணத்திலும் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும் - அப்போஸ்தலர் 5:32.

பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு, கட்டுப்படுத்தப்படுவதற்கு ஒரு எடுத்துக்காட்டாக வேதாகமத்தில் தாவீது காட்டப்படுகிறான். கீழ்க்கண்ட நான்கு ஆவிக்குரிய சத்தியங்களையும் நாம் நமது வாழ்க்கையில் செயல்படுத்தி, தேவன் நம்மைக் கட்டுப்படுத்தி, தமது ராஜ்யத்துக்காக நம்மைப் பயன்படுத்தும்படி அனுமதிக்க வேண்டும்.

- **1 சாமுவேல் 16:13 - ஆவியானவரால் நிரப்பப்பட்ட வாழ்க்கை வாழுவதற்கான வல்லமை தேவனிடமிருந்து வருகிறது**. தேவன் இன்று ஒவ்வொரு விசுவாசிக்கும் அதிகாரமளிப்பது போல, தாவீது தேவனுடைய ஆவியானவரால் வல்லமையளிக்கப்பட்டான். ஏனென்றால் தாவீதின் வாழ்க்கையின் மூலமாகத் தேவன் ஒரு நோக்கத்தை நிறைவேற்ற வேண்டியிருந்தது. தேவன் உங்கள் வாழ்க்கைக்கும் ஒரு நோக்கத்தையும், திட்டத்தையும் வைத்திருக்கிறார்.

பரிசுத்த ஆவியானவர் மட்டுமே அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான **ஒரே** வல்லமையாக இருக்கிறார். பணத்திலிருந்தோ, கல்வியிலிருந்தோ, வெற்றிகரமான வேலையிலிருந்தோ அல்லது அரசு அதிகாரத்திலிருந்தோ வல்லமை வருவதில்லை. தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் மூலமாக மட்டுமே அது வருகிறது.

- 1 சாமுவேல் 17:45 - **தேவன் மட்டுமே போதுமானவர், நமக்கு வேறு எதுவும் தேவையில்லை**. கோலியாத் ஆயத்தமாக இருந்தான். பெரிய உருவம், பலம், அனுபவம், சண்டையிடுவதற்கான ஆயுதம் எல்லாமே அவனிடம் இருந்தது. தாவீது எப்படியிருந்தான்? அவன் பெரியவனாகவோ அல்லது பலமுள்ளவனாகவோ இருக்கவில்லை. இப்படிப்பட்ட சண்டைப் பொருத்தமான ஆயுதங்களோ அல்லது அனுபவமோ அவனிடத்தில் இல்லை. தாவீது இதற்கு முன்பாக இப்படிச் சண்டை போட்டதில்லை. என்றாலும் தாவீது "நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்தினாலே உன்னிடத்தில் வருகிறேன்" என்று கூறினான். பரிசுத்த ஆவியானவர் மட்டுமே தாவீதுடன் இருந்தார், அவர் மட்டுமே போதுமானவராக இருந்தார்! நமக்கும் இது மட்டுமே தேவையாக இருக்கிறது. தேவன் தம்மைப் பின்பற்றும்படி நம்மை அழைத்து, தமது அளவில் பெரிய தரிசனத்தை நமக்குக் கொடுக்கும்போது, அதை நாமாகவே செய்ய முடியாமல் இருக்கும்போதும், நம்மிலிருக்கும் பரிசுத்த ஆவியானவர் போதுமானவராக இருக்கிறார், அவர் மட்டுமே நமக்குத் தேவையாக இருக்கிறார். அவர் அதைச் செய்வார்.
- 1 சாமுவேல் 17:50 - **தேவன் நமக்குள்ளும் நம் மூலமாகவும் இயலாத காரியத்தைச் செய்ய விரும்புகிறார்**. வெற்றிபெற்றது யார்? இல்லை, தாவீது வெற்றிபெறவில்லை. அது அவனுக்கு இயலாத காரியமாகும். **தேவனே வெற்றிபெற்றார்**. தேவன் தம்மால் மட்டுமே செய்ய முடிந்த காரியத்தை நமக்குள்ளும், நம் மூலமாகவும் செய்ய விரும்புகிறார். மூன்று அம்சங்களில் அவர் இயலாததைச் செய்ய விரும்புகிறார்:

    1. நமக்குள்ளாக: தேவனால் மட்டுமே நமது வாழ்க்கையை மாற்ற முடியும். அவர் இயலாத காரியத்தை நமக்குள்ளாகச் செய்ய விரும்புகிறார். நாம் இன்னுமதிமாகத் தேவனைப்போல ஆகும்படி நம்மை மாற்ற விரும்புகிறார். நாமாகவே இதைச் செய்ய முடியாது.

    2. நம் மூலமாக: தேவனால் மட்டுமே தமது ஊழியத்தைச் செய்ய முடியும். அவருடைய ஊழியத்தை அவர் நம்மூலமாகச் செய்ய விரும்புகிறார். நாமாகவே இதைச் செய்ய முடியாது.

    3. இழந்துபோனவர்களின் இருதயத்தில்: தேவனால் மட்டுமே இழந்துபோனர்களை இரட்சிக்க முடியும், அது நம்மால் இயலாத காரியமாகும். தேவன் தமது ஆவியானவரின் மூலமாக இழந்துபோனவர்களின் இருதயத்தில் கிரியைசெய்து, பாவத்தைக் குறித்து உணர்த்தி, சத்தியத்தை வெளிப்படுத்துகிறார். இது அவர்களை இரட்சிப்புக்குள் கொண்டுவருகிறது.

- 1 சாமுவேல் 17:46 - **உலகம் அவரே தேவன் என்று அறியும்படியாகத் தேவன் இயலாத காரியத்தைச் செய்கிறார்**. ஒரு அனுபவமில்லாத, ஆயத்தமில்லாத சிறு பையனைக் கொண்டு தேவன் இயலாத காரியத்தைச் செய்தபடியால் தாவீதை விட அதிகமான வல்லமை இருக்கிறது என்பதை அங்கிருந்தவர்கள் உணர்ந்தார்கள். "இஸ்ரவேலில் தேவன் இருப்பதை" உணர்ந்தார்கள். தேவன் நம்ப முடியாத வகையில் தமது வல்லமையை வெளிப்படுத்தியபடியால் பெலிஸ்தர்கள் பயப்பட்டார்கள். தேவன் நமக்குள்ளும், நம் மூலமாகவும் கிரியைசெய்ய நாம் அனுமதிக்கும்போது, அவரால் தமது வல்லமையை வெளிப்படுத்த முடிகிறது. நம்மைச் சுற்றிலும் இருக்கும் எல்லோரும் தேவன் இருக்கிறார் என்பதை அறிவார்கள்.

### முடிவுரை

இந்தப் பகுதியை நீங்கள் படிக்கும்போது, கீழே கொடுக்கப்பட்டுள்ள வசனங்களை எடுத்துப் பார்த்து, அவைகளின் மூலமாகப் பரிசுத்த ஆவியானவர் உங்களோடு பேசுவதற்கு அனுமதிக்க வேண்டும்.

ஒரு விசுவாசி அபிஷேகம் செய்தலின் அடையாளம் (1 யோவான் 2:20, 27; 2 கொரிந்தியர் 1:21), முத்திரையின் அடையாளம் (2 கொரிந்தியர் 1:22; எபேசியர் 1:13), அச்சாரத்தின் அடையாளம் (2 கொரிந்தியர் 1:22; எபேசியர் 1:14), ஞானஸ்நானத்தின் அடையாளம் (1 கொரிந்தியர் 12:13) பானத்தின் அடையாளம் (1 கொரிந்தியர் 12:13; யோவான் 4:14, 7:37-39) இவைகளின் மூலமாகப் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிருக்கிறார்.

"நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்று நமக்குக் கட்டளையிட்டவருக்கு (மாற்கு 16:15) நாம் கீழ்ப்படிய வேண்டும். நாம் அவர் மூலமாகப் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறபடியால், அவருடைய வார்த்தையை நேசிக்க வேண்டும் (யோவான் 17:17).

**கர்த்தருடைய அறுவடையில் நாம் நம்பிக்கையோடும் சந்தோஷத்தோடும் ஈடுபட வேண்டும். ஏனென்றால் அவர் நமக்குள் கிரியைசெய்து வருகிறார் (பிலிப்பியர் 1:6; 2:13). கிறிஸ்தவர்களுக்கு ஒருபோதும் ஆவிக்குரிய வரங்கள் குறைவுபடுவதில்லை (1 கொரிந்தியர் 1:7). ஆண்டவருடைய ஊழியத்துக்காகப் பரிசுத்த ஆவியானவர் நம்மைப் பலப்படுத்துகிறார். அவர் நமக்குக் கொடுத்திருக்கும் வரங்களின்மூலமாக இதைச் செய்கிறார் (1 கொரிந்தியர் 12:4-6).**

தேவன் தமது வார்த்தையில் போதிப்பதை நாம் புரிந்துகொண்டு அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும். இதன்மூலம் நமக்குள் தேவ சித்தத்தைச் செயல்படுத்தும் பரிசுத்த ஆவியின் கனியை வெளிப்படுத்துவோம் (கலாத்தியர் 5:22-26).

### செயல்படுத்துதல்

- மௌனமாக ஜெபியுங்கள்.
- உங்கள் வாழ்க்கையில் இருக்கும் பாவத்தை வெளிப்படுத்தும்படி பரிசுத்த ஆவியான வரிடம் கேட்டுக்கொள்ளுங்கள்.
- அவர் உங்களுக்கு நினைவுபடுத்தும் எல்லாப் பாவங்களையும் அறிக்கையிடுங்கள்.
- உங்கள் வாழ்க்கையை அவருக்கு ஒப்புக்கொடுத்து, நாள்தோறும் கீழ்ப்படியுங்கள்.

***உங்கள் அணிக்கு நீங்கள் போதிக்கும் மூன்றாவது காரியம்:***

## *ஜெபம்*

### முன்னுரை

நீங்கள் ஜெபிக்கும் மனிதனாக இராவிட்டால், இயேசு கிறிஸ்துவின் சீஷராக இருப்பது இயலாத காரியமாகும். முன்னோடி ஊழியர் தேவனோடு நேரம் செலவழிப்பதற்குத் தனது வாழ்க்கையில் முதலாவது முன்னுரிமையைக் கொடுக்க வேண்டும். இப்படியிராவிட்டால், முன்னோடி ஊழியரால் ஒருபோதும் தேவனை நெருக்கமாக அறிய முடியாது. அவர் தேவனுடைய வழிநடத்துதலின் கீழாக இருக்கமாட்டார், எந்த மெய்யான, ஆவிக்குரிய கனியையும் கொடுக்க மாட்டார்.

ஜெபத்தைக் குறித்த ஏழு அம்சங்களை நாம் தேவனோடுகூடத் தனித்திருக்கும்போது செயல்படுத்த வேண்டும்.

### 1. துதியும் ஆராதனையும்

சங்கீதம் 48:1 வசனம் "கர்த்தர் பெரியவர், அவர் ... மிகவும் துதிக்கப்படத்தக்கவர்" என்று சொல்லுகிறது. "கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்; அவர் துதி எப்போதும்

என் வாயிலிருக்கும். கர்த்தருக்குள் என் ஆத்துமா மேன்மைபாராட்டும்; சிறுமைப்பட்டவர்கள் அதைக்கேட்டு மகிழுவார்கள். என்னோடே கூடக் கர்த்தரை மகிமைப்படுத்துங்கள்; நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோமாக" என்று சங்கீதம் 34:1-3 வசனங்கள் சொல்லுகின்றன.

நமது ஞாயிறு ஆராதனைகளில் நாம் கர்த்தரைத் துதிக்கிறோம். ஆனால் திங்கள் முதல் சனி வரையில் தேவனோடு நமது தனிப்பட்ட நேரத்தில் நாம் எப்படி நடந்துகொள்ளுகிறோம்? "இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீரே பரிசுத்தர்" என்று சங்கீதம் 22:3 வசனம் சொல்லுகிறது.

துதி என்றால் என்ன? இது என்பது கர்த்தர் **யாராக** இருக்கிறார் என்பதற்காக அவரை உயர்த்திப் போற்றுவதாகும். ஸ்தோத்திரிப்பது என்பது தேவன் நமக்காகச் செய்திருப்பவைகளுக்காக அவருக்கு நன்றிகூறுவதாகும். துதித்தல் என்பது தேவனுடைய குணாதிசயம் மற்றும் பண்புகளை உயர்த்திப் போற்றுவதாகும்.

ஒருவர் வேதாகமரீதியாகத் தேவனைத் துதிக்க வேண்டுமானால், தனது சிந்தை, தனது சித்தம் மற்றும் தனது உணர்வுகளைப் பயன்படுத்த வேண்டும். நாம் கர்த்தரைத் துதிக்கும்போது ஆராதனை வேளைகளில் உணர்வுகளை வெளிப்படுத்துவதில் தவறில்லை. இது தவறு என்று சொல்லுவது, ஒருவர் தனது சிந்தையையோ அல்லது தனது சித்தத்தையோ பயன்படுத்த முடியாது என்று சொல்லுவதாகும். மனிதனுக்கு சரீரம், ஆத்துமா (அவனுடைய **சிந்தை, சித்தம்** மற்றும் **உணர்வுகள்**), ஆவி மூன்றும் உண்டு (1 தெசலோனிக்கேயர் 5:23).

என்றாலும் உணர்வுகளுக்கும் உணர்ச்சிவயப்படுவதற்கும் இடையில் பெரிய வேறுபாடு இருக்கிறது. உணர்ச்சிவயப்படுவது என்பது ஒருவர் தனது உணர்வுகளின்மீதான கட்டுப்பாட்டை இழந்துபோவதாகும். ஒரு ஆராதனையில் இப்படி நடக்கும்போது, ஆராதனை வேதாமரீதியான ஒழுங்கைவிட்டு விலகிப் போகிறது. வேதாகமம் ஆராதனைகளில் உணர்வுகளைப் பயன்படுத்துவதைத் தடைசெய்யாவிட்டாலும், உணர்ச்சிவயப்படுவதைத் தடைசெய்கிறது.

ஒருவர் தேவனோடுள்ள தனது தனிப்பட்ட வேளையில் அவரை எப்படித் துதிக்க முடியும் என்பதற்குச் சில ஆலோசனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

**a. ஒரு பாமாலைப் புத்தகம் அல்லது கிறிஸ்தவ பாடல் புத்தகத்தைப் பயன்படுத்தி தேவனை நோக்கிப் பாமாலைகளைப் பாடுங்கள்**

தேவனோடு நீங்கள் தனிப்பட்ட நேரத்தைக் கழிக்கும்போது, அதே அறையில் வேறு எவரேனும் இருப்பார்களானால் நீங்கள் மௌனமாகப் பாடல் வரிகளைச் சொல்லலாம். "பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்" என்பது துதிகள் நிறைந்த ஒரு பாமாலையாகும்.

பாமாலையின் முதல் வரியை வாசித்து, அதிலுள்ள வார்த்தைகளின் அர்த்தத்தைச் சிந்தித்து, தியானம் செய்யுங்கள். அந்த வரியில் வாசிப்பவைகளின் அடிப்படையில் தேவனைத் துதியுங்கள். இதற்குப் பிறகு, இரண்டாவது வரியை வாசியுங்கள். இப்படியாகப் பாமாலை முழுவதிலுமுள்ள வரிகளை வாசியுங்கள். பெரும்பாலான பாமாலைப் புத்தகங்களின் உள்ளடக்கம் பகுதியில் எவை துதிப்பாடல்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கும்.

**b. துதி கோரஸ் பாடல்களைப் பாடுங்கள் அல்லது வாசியுங்கள்**

எபேசியர் 5:19-20 வசனங்களில் வேதாகமம் "சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து..." என்று சொல்லுகின்றன. துதி கோரஸ் பாடல்கள் வேதாகமரீதியாகச் சரியானவையாகும்.

**c. வேதாகமத்தில் ஜெபத்தைக் குறித்த பகுதிகளை வாசித்து, ஒவ்வொரு வசனத்தையும் உங்களுக்குரியதாக ஆக்கிக்கொள்ளுங்கள்**

"எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மை

யுள்ளதாயிருக்கிறது! உம்முடைய மகத்துவத்தை வானங்களுக்கு மேலாக வைத்தீர்'' என்று சங்கீதம் 8:1 வசனம் கூறுகிறது.

இந்த வசனத்தை உங்களுக்குரியதாக ஆக்கிக்கொள்ள வேண்டுமானால் உங்கள் பெயரை அதில் சேருங்கள்: ''என் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது! உம்முடைய மகத்துவத்தை வானங்களுக்கு மேலாக வைத்தீர்.'' ஒவ்வொரு வசனத்தையும் ஒருமுறை வேதாகமத்தில் இருக்கிறபடியாக வாசியுங்கள், பிறகு அதே வசனத்தைத் தனிப்பட்ட துதியாக ஏறெடுக்கும்படி உங்களுக்குரியதாக ஆக்கிக்கொள்ளுங்கள்.

இப்படிப்பட்ட ஆராதனைக்குப் பொருத்தமாக இருக்கும் வேதாகமப் பகுதிகள்: சங்கீதங்கள் 8, 9, 19, 24, 65, 92, 104, 139, இயேசு மற்றும் பவுல் அப்போஸ்தலனின் ஜெபங்கள், வெளிப்படுத்தலின் புத்தகத்தில் பல்வேறு அதிகாரங்கள். ஒரு ஒத்தவாக்கிய அகராதியில் ''துதி'' என்ற சொல்லை எடுத்துப் பார்ப்பீர்களானால், பொருத்தமான வேதாகமப் பகுதிகளைக் கண்டுபிடிக்கலாம்.

ஒவ்வொரு விசுவாசியின் ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் துதித்தல் ஒரு அத்தியாவசியமான பகுதியாகும். பரலோகத்தில் நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதை அறிவதற்கு வெளிப்படுத்தல் 4 மற்றும் 5 ஆம் அதிகாரங்களை வாசித்துப் பாருங்கள்.

## 2. அறிக்கைசெய்தல்

அறிக்கைசெய்தலுக்காக அதிகமான நேரம் செலவழிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. நாம் ஒரு பாவத்தைச் செய்யும்போது, பரிசுத்த ஆவியானவர் உடனடியாக அதைக்குறித்து நமது மனச்சாட்சியில் பேசுகிறார். பரிசுத்த ஆவியானவர் நம்மை உணர்த்தும்போது, உடனடியாக ஒவ்வொரு பாவத்தையும் அறிக்கைசெய்ய வேண்டும். ''நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்'' என்று 1 யோவான் 1:9 வசனம் சொல்லுகிறது.

தேவனோடு நாம் தனிமையில் நேரம் செலவழிக்கும்போது, பரிசுத்த ஆவியானவர் சமீபத்தில் நாம் அறிக்கையிடாத பாவங்களை நினைவுக்குக் கொண்டுவருவார். ஒருவேளை ஒரு மோசமான மனோபாவம், கோபம், அல்லது எவர்மீதாவது கசப்புக்கொள்ளுதல் இவைகளை அவர் நினைவுபடுத்தலாம். அப்படியானால், நமது இருதயத்திலுள்ள எல்லாப் பாவங்களையும் நாம் அறிக்கைசெய்ய வேண்டும்.

## 3. நன்றி கூறுதல்

வேதாகமம் பிலிப்பியர் 4:6 வசனத்தில் இவ்வாறு கூறுகிறது: ''நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள்.''

தேவன் நமக்காகச் செய்திருப்பவைகளுக்காக நன்றியுணர்வோடு இருத்தலே அவரை ஸ்தோத்திரிப்பதாகும். எடுத்துக்காட்டாக, ''ஆண்டவரே, எனது ஆரோக்கியத்துக்காகவும், எனது உணவுக்காகவும், எனது குடும்பத்துக்காகவும் உமக்கு ஸ்தோத்திரம்'' என்று ஜெபிக்கலாம்.

## 4. தேவனுடைய சத்தத்தைக் கேட்டல்

''என் ஆத்துமாவே, தேவனையே நோக்கி அமர்ந்திரு; நான் நம்புகிறது அவராலே வரும்'' என்று சங்கீதம் 62:5 வசனம் சொல்லுகிறது. சங்கீதம் 46:10 ''நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்'' என்று சொல்லுகிறது.

தேவனுடைய சத்தத்தை நாம் எப்படிக் கேட்க முடியும்? தேவன் நாள்தோறும் விசுவாசிகளோடு பேசுவதற்கு இரண்டு வழிவகைகளைப் பயன்படுத்துகிறார்: பரிசுத்த ஆவியானவர் மற்றும்

தம்முடைய வார்த்தை. "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலேவரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" என்று ரோமர் 10:17 வசனம் சொல்லுகிறது.

வேதாகமம் தேவனிடமிருந்து வந்த அன்பின் கடிதமாக இருக்கிறது. தேவன் தமது வார்த்தையின் மூலமாகவும், தமது பரிசுத்த ஆவியானவரின் மூலமாகவும் நாள்தோறும் நம்மோடு பேச விரும்புகிறார். தேவனுடைய சத்தத்தைக் கேட்பதற்குச் சில வழிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

a. வேதாகமத்தின் ஒரு புத்தகத்தை வாசிக்கத் துவங்குங்கள். எபேசியர் நிருபத்தை வாசிக்கத் துவங்கலாம் என்று நாங்கள் பரிந்துரை செய்கிறோம்.

b. ஒவ்வொரு வசனம் அல்லது பத்தியிலுள்ள ஆவிக்குரிய சத்தியங்களை உங்களுக்குக் காட்டுமாறு தேவனிடம் வேண்டிக்கொள்ளுங்கள். எடுத்துக்காட்டாக, எபேசியர் 1:1 வசனம் "தேவனுடைய சித்தத்தினாலே இயேசுகிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய பவுல், எபேசுவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்களுக்கு எழுதுகிறதாவது..." என்று சொல்லுகிறது. நான்கு ஆவிக்குரிய சத்தியங்கள் இதில் காணப்படுகின்றன:

   1) பவுல் ஒரு விசுவாசியாகவும் இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகவும் இருக்கிறார்.
   2) அவர் தேவனுடைய சித்தத்தினால் தெரிந்துகொள்ளப்பட்ட அப்போஸ்தலனாக இருக்கிறார்.
   3) "பரிசுத்தவான்கள்" என்ற சொல் எபேசுவிலிருந்த கிறிஸ்தவர்களைக் குறிக்கிறது.
   4) இந்தக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் உண்மையுள்ளவர்களாக இருந்தார்கள்.

c. ஒவ்வொரு ஆவிக்குரிய சத்தியத்தையும் தனிப்பட்டதாக்குங்கள். தேவன் இந்தச் சத்தியங்களின் மூலமாக வாசிப்பவரோடு பேசுகிறார். எடுத்துக்காட்டாக, தேவன் எபேசியர் 1:1 வசனத்தில் நான்கு சத்தியங்களை எனக்குக் கூறுகிறார்:

   1) தாமஸ் வேட், நீ எனது சித்தத்தின்மூலமாக இயேசு கிறிஸ்துவின் சீஷனாக இருக்கிறாய்.
   2) தாமஸ் வேட், நான் உன்னை எனது சித்தத்தினால் தெரிந்துகொண்டேன்.
   3) தாமஸ் வேட், நீ வசிக்கும் இடத்தில் ஒரு பரிசுத்தவானாக இருக்கிறாய்.
   4) தாமஸ் வேட், நீ கிறிஸ்து இயேசுவுக்குள் உண்மையுள்ளவனாக இருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

### 5. தேவனுடைய வார்த்தையை ஜெபமாகத் தேவனுக்குத் திரும்ப ஏறெடுங்கள்

தேவனை நோக்கி ஜெபிக்க வசனத்தைப் பயன்படுத்துங்கள். எபேசியர் நிருபத்திலுள்ள இந்தக் குறிப்பிட்ட வசனத்தைப் பயன்படுத்தி நாம் "அன்பான பிதாவே, என் தேவனே, நீர் என்னை இயேசு கிறிஸ்துவின் சீஷனாக இருக்கும்படி அழைத்திருப்பதற்காக உமக்கு நன்றி கூறுகிறேன். நான் உம்முடைய பரிசுத்தவானாக இருப்பற்காக உமக்கு நன்றி கூறுகிறேன். நான் உமக்காகப் பிரித்தெடுக்கப்பட்ட ஒருவனாக இருக்கிறேன். என் பிதாவே, நான் கிறிஸ்துவுக்கு உண்மையுள்ளவனாக இருக்க வேண்டுமென்பதே என் விருப்பமாகும். இயேசுவின் நாமத்தில் நான் ஜெபிக்கிறேன். ஆமென்!"

முதல் வசனத்தைக் குறித்து இந்தப் படிகளைப் பின்பற்றிய பிறகு, இரண்டாவது வசனத்துக்குச் சென்று, இதே முறையைப் பின்பற்றுங்கள்.

### 6. பரிந்துரை ஜெபம்

வேதாகமம் எபேசியர் 6:18 வசனத்தில், "எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும்

சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்" என்று சொல்லுகிறது.

பரிந்துரை ஜெபம் என்பது மற்றவர்களுக்காக ஏறெடுக்கப்படும் ஜெபமாகும். பெரும்பாலான மக்கள் தங்கள் வேதாகமத்தின் இறுதியில் ஒரு வெற்றுத் தாளை வைத்திருக்கிறார்கள். இந்தப் பக்கத்தை எட்டு நேர் பகுதிகளாகப் பிரியுங்கள். அல்லது தனியாக ஒரு நோட்டுப் புத்தகத்தைப் பயன்படுத்துங்கள்.

எடுத்துக்காட்டாக, பக்கத்தின் மேல் பகுதியில் "**நாள்தோறும்**" என்று எழுதுங்கள். அதற்குக் கீழாக உங்கள் மனைவி/கணவனின் பெயர், பிள்ளைகள், பெற்றோர், சகோதர சகோதரிகளின் பெயர்களை எழுத வேண்டும். இவர்கள் உங்களுக்கு நெருக்கமாக இருக்கிறார்கள்.

அடுத்த பக்கத்தில் அல்லது அடுத்த பகுதியில் "**ஞாயிறு**" என்று எழுதுங்கள். அதற்குக் கீழாக வாரத்தின் இந்த நாளில் யாருக்காக ஜெபிக்கப் போகிறீர்களோ அவர்களுடைய பெயர்களைக் குறிப்பிடுங்கள். உங்கள் போதகர், அவருடைய குடும்பத்தார், உங்கள் ஞாயிறு பள்ளி ஆசிரியர் மற்றும் வகுப்பிலுள்ள மற்றவர்களுக்காக ஜெபியுங்கள்.

அடுத்த பக்கத்தில் அல்லது அடுத்த பகுதியில் "**திங்கள்**" என்று எழுதுங்கள். இங்கே உங்கள் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்களின் பெயர்களைப் பட்டியலிட வேண்டும்.

அடுத்த பக்கத்தில் அல்லது அடுத்த பகுதியில் "**செவ்வாய்**" என்று எழுதுங்கள். இந்த நாளில் நீங்கள் இழந்துபோனவர்கள் என்று அறிந்திருப்பவர்களுக்காக ஜெபியுங்கள். நீங்கள் அவிசுவாசிகளோடு வேதாகம ஆய்வுகளை நடத்தும்போது, பரிசுத்த ஆவியானவர் பாவத்தை உணர்த்தி, சத்தியத்தை வெளிப்படுத்தும்படி அவர்களுடைய இருதயங்களில் கிரியைசெய்ய வேண்டுமென்று ஜெபிக்க வேண்டும்.

அடுத்த பக்கத்தில் அல்லது அடுத்த பகுதியில் "**புதன்**" என்று எழுதுங்கள். இதன் கீழாக அருட்பணியாளர்கள், உங்கள் சபை அமைப்பின் தலைவர்கள், உங்கள் சபைத் தலைவர்கள் மற்றும் யாருக்காக நீங்கள் ஜெபிக்க விரும்புகிறீர்களோ அவர்களுடைய பெயர்களை எழுதுங்கள்.

அடுத்த பக்கத்தில் அல்லது அடுத்த பகுதியில் "**வியாழன்**" என்று எழுதுங்கள். இந்தப் பக்கத்தில் உங்கள் நாட்டுத் தலைவர்களின் பெயர்களை எழுதுங்கள். "நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்; நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும்" என்று 1 தீமோத்தேயு 2:1,2 வசனங்கள் சொல்லுகின்றன.

அடுத்த பக்கத்தில் அல்லது அடுத்த பகுதியில் "**வெள்ளி**" என்று எழுதுங்கள். இந்தப் பக்கத்தில் சபையிலிருந்து பின்வழுவிப் போனவர்களின் பெயர்களை எழுதுங்கள். அல்லது இழந்துபோனவர்களின் பெயர்களை எழுதுங்கள். இந்தப் பட்டியலில் நண்பர்களின் பெயர்களையும், உடன் சபை உறுப்பினர்களையும் பெயர்களையும் சேருங்கள். இந்த நாளில் நீங்கள் ஈடுபாடு கொண்டுள்ள செயல்திட்டங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

அடுத்த பக்கத்தில் அல்லது அடுத்த பகுதியில் "**சனி**" என்று எழுதுங்கள். அணி உறுப்பினர்கள் எல்லோருடைய பெயர்களையும் இந்தப் பக்கத்தில் எழுதுங்கள். அணி உறுப்பினர் ஒவ்வொருவரும் அணியின் மற்ற உறுப்பினர்களின் பெயர்களை இந்தப் பகுதியில் சேர்த்திருக்க வேண்டும்.

ஒரு முன்னோடி ஊழியர் இதைச் செய்யும்போது, அவர் வாரத்தின் ஒவ்வொரு நாளும் பலருக்காக ஜெபிப்பார். சிலர் ரோமர் 16ஆம் அதிகாரம் ரோமாபுரியிலிருந்த கிறிஸ்தவர்களைக் குறித்த பவுலின் ஜெப பட்டியல் என்று நம்புகிறார்கள்.

## 7. தியானம் மற்றும் வேதவசனத்தை மனப்பாடம் செய்தல்

வேதாகமம் யோசுவா 1:8 வசனத்தில், "இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய்" என்று சொல்லுகிறது. இரவும் பகலும் தேவனுடைய வார்த்தையைத் தியானிப்பதின்மூலம் வாழ்க்கை மாற்றப்படும் என்று இந்த வசனம் சொல்லுகிறது. முன்னோடி ஊழியரை இயேசுவின் சாயலுக்கு ஒப்பாயிருக்கும்படி செய்வதே தேவனுடைய நோக்கம் என்று ரோமர் 8:29 வசனம் சொல்லுகிறது. இதன் விளைவாகச் செழிப்பான நடக்கையையும், வெற்றிகரமான வாழ்க்கையையும் பெற முடியும். "நாம் தேவனுடைய வார்த்தையை இரவும் பகலும் தியானிப்பது எப்படி? நாம் உறங்கிக்கொண்டிருக்கும்போது தேவனுடைய வார்த்தையை எப்படித் தியானிக்க முடியும்?"

A. ஒவ்வொரு வாரமும் வேதாகமத்திலிருந்து ஒரு வசனத்தைத் தெரிந்துகொள்ளுங்கள்.

B. அந்த வசனத்தையும், அதன் பின்னணியையும் வாசியுங்கள்.

C. இந்த வசனத்திலுள்ள ஆவிக்குரிய சத்தியங்களை உங்களுக்குக் காட்டுமாறு தேவனிடம் வேண்டிக்கொள்ளுங்கள்.

D. ஜெபத்தில் இந்த வசனத்தை உங்களுக்குரியதாக ஆக்கிக்கொள்ளுங்கள்.

E. மேற்கோள் குறிப்போடுகூட இந்த வசனத்தை ஒரு அட்டையில் எழுதுங்கள்.

F. நாள் முழுவதும் இந்த வசனத்தைப் பலமுறை வாசியுங்கள். வரிசையில் காத்திருக்கும்போதோ அல்லது உங்கள் அமைதியான தியான வேளையிலேயோ இதைச் செய்யுங்கள். ஒரு நாளைக்குக் குறைந்தபட்சமாக ஐந்து முறையாவது இந்த அட்டையை வெளியே எடுத்துப் படியுங்கள்.

G. ஒவ்வொரு நாளும் இரவில் கடைசியாக இந்த வசனத்தை வாசிக்க வேண்டும். இது உங்கள் உள்மனதில் வசனத்தைப் பதிய வைக்க உதவும்.

## 8. விண்ணப்பம் செய்தல்

வேதாகமம் எபிரெயர் 4:16 வசனத்தில், "ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்" என்று சொல்லுகிறது. விண்ணப்பம்செய்வது என்பது தேவனிடம் உங்கள் சொந்தத் தேவைகளைத் தெரிவிப்பதாகும்.

***உங்கள் அணிக்கு நீங்கள் போதிக்கும் நான்காவது காரியம்:***

## *இரட்சிப்பு*

உங்கள் செயல்களுக்கு முன்பாக எப்போதுமே உங்கள் நம்பிக்கைகள் வருகின்றன. "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்" என்று மத்தேயு 12:34 வசனம் சொல்லுகிறது. முன்னோடி சுவிசேஷகர் அடிப்படை புதிய ஏற்பாட்டுக் கோட்பாடுகளை அறிந்திருக்க வேண்டும். முன்னோடி சுவிசேஷகர் வேதாகமம், இரட்சிப்பு, ஊழியம் மற்றும் சபையைக் குறித்து எந்த நம்பிக்கைகளைக் கொண்டிருக்கிறாரோ அது ஊழியத்தில் அவருடைய வெற்றிக்கு அத்தியாவசியமானதாகும். இரட்சிப்பைக் குறித்த அவருடைய நம்பிக்கை அவர் கொடுக்கும் செய்தியில் பிரதிபலிக்கிறது. பல கிறிஸ்தவர்களுக்கு வேதாகமத்தைக் குறித்த மிகவும் அடிப்படையான கேள்விகளுக்குக்கூடப் பதிலளிக்கத் தெரியவில்லை.

1. **சுவிசேஷம் என்றால் என்ன**? வேதாகமத்தில் சுவிசேஷத்தைக் குறித்துக் கொடுக்கப் பட்டிருக்கும் ஒரே வரையறையை **1 கொரிந்தியர் 15:1-4** வசனங்களில் வாசியுங்கள்.

______________________________________________

2. **நித்திய வாழ்வு என்றால் என்ன**? வேதாகமத்தில் நித்திய வாழ்வைக் குறித்துக் கொடுக்கப் பட்டிருக்கும் ஒரே வரையறையை **யோவான் 17:3** வசனத்தில் வாசியுங்கள்.

புதிய ஏற்பாட்டின்படி இரட்சிப்பு என்றால் என்பதை முன்னோடி சுவிசேஷகர் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். ஒரு புதிய ஏற்பாட்டுச் சபை இரட்சிக்கப்பட்ட மக்களைக் கொண்டிருக்கிறபடியால், இரட்சிப்பைக் குறித்து முன்னோடி சுவிசேஷகர் கொண்டிருக்கும் கோட்பாடு அவருடைய ஊழியத்துக்கு அஸ்திபாரமானதாகும்.

கிறிஸ்துவில்லாமல் மக்கள் நித்தியமாக இழந்துபோகிறார்கள், நித்தியத்தை அவர்கள் நரகத்தில் கழிப்பார்கள் என்ற நம்பிக்கை முன்னோடி சுவிசேஷகருக்கு இல்லாவிட்டால் அவரால் செயல்பட முடியாது. நீங்கள் மெய்யாகவே இதை விசுவாசிக்கிறீர்களா? கிறிஸ்துவில்லாத ஒரு நபர் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டிருக்கிறார், அவருடைய வாழ்க்கை அழுத்தமும், தனிமையுணர்வும், பயமும், குற்ற உணர்வும் நிறைந்ததாக இருக்கிறது, அவருடைய ஆத்துமாவின் ஆழத்தில் வெறுமை காணப்படுகிறது என்பவைகளை ஒரு முன்னோடி சுவிசேஷகர் புரிந்துகொள்ள வேண்டும்.

இறுதி நியாயத்தீர்ப்பைக் குறித்த கோட்பாடு மிக முக்கியமானதாகும். சில கலாச்சாரங்களில் ஆவி வணக்கமும், மறுபிறவி குறித்த எண்ணமும் வலுவாகக் காணப்படுகிறது. இயேசு மறுபிறவியைக் குறித்தல்ல, உயிர்த்தெழுதலைக் குறித்தே நமக்குப் போதித்திருக்கிறார். "அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" எபிரெயர் 9:27 வசனம் சொல்லுகிறது.

இழந்துபோனவர்களைத் தேடி இரட்சிக்கும்படி, இயேசு வந்தார் என்று லூக்கா 19:10 வசனம் சொல்லுகிறது. இது முன்னோடி சுவிசேஷகரின் பணியாகவும் இருக்கிறது. மக்கள் தங்கள் இரட்சிப்புக்காக இயேசுவைத் தவிர வேறு எதிலும் நம்பிக்கை வைத்தால் அவர்கள் இழந்து போனவர்களாக இருக்கிறார்கள். கலாத்தியர் 2:16 வசனம் "நியாயப்பிரமாணத்தின் கிரியை களினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே" என்று சொல்லுகிறது. இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதின் மூலமாகவே நாம் நீதிமானாக்கப்படுகிறோம். "இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலேயன்றி, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே மனுஷன் நீதிமானாக்கப்படுவதில்லையென்று அறிந்து, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலல்ல, கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படும்படிக்குக் கிறிஸ்து இயேசுவின்மேல் விசுவாசிகளானோம்" என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறார்.

இழந்துபோன மக்கள் இரட்சிக்கப்படவில்லை என்பதை முன்னோடி சுவிசேஷகர் உணருவது எவ்வளவு முக்கியமோ அதுபோல, இழந்துபோன தனிப்பட்டவரும் தன்னை இழந்துபோனவராகக் காண வேண்டும். நம்மால் வெறுமனே "கிறிஸ்துவுக்காகத் தீர்மானம் எடுப்பவர்களைக்" கண்டுபிடிக்க முடியாது. மாறாக, நாம் சீஷர்களை உருவாக்க வேண்டும். நாம் புதிய விசுவாசிகளைச் சபையின் ஊழியத்துக்குள்ளாக ஒருங்கிணைத்து, உள்ளூர் தலைவர்களுக்குப் பயிற்சியளித்து, பரிசுத்த ஆவியானவரின் தலைமையின் கீழாக ஒரு சுய ஆதாரமும், சுய ஆளுகையும், சுய பெருக்கமும் கொண்ட சபையை ஸ்தாபிக்க வேண்டும்.

எனவே இரட்சிக்கப்படுவதற்குத் தான் என்ன செய்ய வேண்டும் என்பதை ஒருவர் தெளிவாகப் புரிந்துகொண்டிருப்பது மிக முக்கியமாகும். ஒருவர் தனது பாவங்களை விட்டு மனந்திரும்பி,

ஆண்டவராகவும், ஒரே இரட்சகராகவும் இயேசு கிறிஸ்துவின்மீது நம்பிக்கை வைக்கும்போதே அவர் இரட்சிக்கப்படுகிறார். ஆர்வம்காட்டும் மக்கள் தங்களுடைய இழந்துபோன நிலையை உணர்ந்து, கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள என்ன செய்ய வேண்டும் என்று அறிந்திருக்கிறார்களா என்பதை முன்னோடி ஊழியர் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

**முதலாவதாக, அவர் தனது பாவங்களைக் குறித்து "மனந்திரும்ப" வேண்டும்.**

**மனந்திரும்புதல் என்றால் என்ன?** மாற்கு 1:15

> "மனந்திரும்புதல்" என்றால் உங்கள் வாழ்க்கையை இயேசு கிறிஸ்துவின் திசையில் திருப்பி உங்கள் மனதை (கருத்துக்களை) மாற்றுவதாகும். ஒருவர் தனது மனதை மாற்றி, தனது பாவத்திலிருந்து இயேசுவை நோக்கித் திரும்ப வேண்டுமானால், தானே தனது வாழ்க்கையைக் கட்டுப்படுத்துவதை உணர்ந்து, இயேசுவிடம் தனது வாழ்க்கையின் கட்டுப்பாட்டை ஒப்புக்கொடுக்க விரும்ப வேண்டும். இது ஒருவர் தனது முழு வாழ்க்கையையும் இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுப்பதாகும். மனந்திரும்புதல் என்பது உங்கள் பாவங்களை விட்டுவிட்டு (சுய கட்டுப்பாட்டுடன் கூடிய வாழ்க்கை), இயேசுவை உங்கள் வாழ்க்கையின் ஆண்டவராகவும், எஜமானராகவும் ஏற்றுக்கொள்ளுவதாகும்.

ரோமர் 10:9 வசனத்திலும் இதுபோன்ற ஒப்புக்கொடுத்தல் குறிப்பிடப்படுகிறது. ஒருவர் இயேசுவே கர்த்தர் என்று "அறிக்கையிட்டு" சுய கட்டுப்பாடுள்ள வாழ்க்கை மற்றும் விக்கிரகங்களிலிருந்து திரும்பி இயேசுவை ஆண்டவராக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**மனந்திரும்புதல் என்றால் என்ன?**

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

**இரண்டாவதாக, அவர் தனது ஒரே ஆண்டவராகவும், இரட்சகராகவும், மத்தியஸ்தராகவும் இயேசு கிறிஸ்துவின்மீது தனது ``விசுவாசத்தை" வைக்க வேண்டும்.** ரோமர் 10:9 வசனத்தில் "விசுவாசித்தல்" என்பது ஒருவர் தனது மனதில் இயேசுகிறிஸ்துவைக் குறித்த உண்மைகளை அறிந்திருப்பதைக் குறிக்கவில்லை. யாக்கோபு 2:19 வசனத்தில் பிசாசுகளும்கூட இயேசுவைப் பற்றி உண்மைகளை விசுவாசிக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது.

"பிஸ்டிஸ்" என்ற கிரேக்கச் சொல்லே "விசுவாசம்" அல்லது "விசுவாசித்தல்" என்று மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. அதாவது, ஒருவர் கிறிஸ்துவோடுகூட ஒன்றாகும்படியாகத் தனது வாழ்க்கையை அவருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பதே இதன் அர்த்தமாகும். இதற்குக் குறைவான எதுவும் மெய்யான விசுவாசம் அல்ல. பலர் தங்கள் மனதில் மட்டும் இயேசு கிறிஸ்துவைக் குறித்த வரலாற்று உண்மைகளை நம்புகிறார்கள். மெய்யான விசுவாசத்துக்கும், அதாவது இரட்சிக்கும் விசுவாசத்துக்கும், பொய்யான விசுவாசத்துக்கும் இடையிலான வேறுபாட்டை மக்களுக்குக் காட்டுவதே நமது பணியாகும்.

**விசுவாசம் என்றால் என்ன?**

____________________________________________________

____________________________________________________

இரட்சிக்கும் விசுவாசம் இரட்சிப்பதற்காக எந்தக் கூடுதலான காரியத்தின்மீதும் நம்பிக்கை வைப்பதில்லை. எடுத்துக்காட்டாக, ஒருவர் தனது நற்கிரியைகள், நல்ல வாழ்க்கை, விக்கிரகங்கள், கன்னிமரியாள், தூதர்கள் மற்றும் பரிசுத்தவான்களின்மீது நம்பிக்கை வைப்பதை விட்டுவிட்டு, ஒரே ஆண்டவராகவும், இரட்சகராகவும், மத்தியஸ்தராகவும் இயேசு கிறிஸ்துவின்மீது மட்டுமே

நம்பிக்கையை வைக்க வேண்டும். சார்ல்ஸ் புருக் தனது *Indigenous Church Planting* என்ற நூலில் "பாவம், மனந்திரும்புதல், விசுவாசம் இவைகளைக் குறித்துச் சரியான வகையில் இடைபடாத இரட்சிப்பைக் குறித்த வரையறை ஒரு சமயக் குழுவை உருவாக்குமேயொழிய அது ஒரு சபையை உருவாக்காது" என்று சொல்லியிருக்கிறார்.

ஒவ்வொரு சுவிசேஷகரும் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலைப் பின்பற்ற வேண்டும். ஏனென்றால் அவர் மட்டுமே இழந்துபோனவர்களின் பாவத்தை அவர்களுக்கு உணர்த்துவார். முன்னோடி சுவிசேஷகர் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் மெய்யானதும், பூரணமானதுமான சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். அப்போது பரிசுத்த ஆவியானவர் மக்களின் இருதயங்களில் கிரியைசெய்து, நிலைத்திருக்கும் கனியை உருவாக்குவார்.

***உங்கள் அணிக்கு நீங்கள் போதிக்கும் ஐந்தாவது காரியம்:***

## *தனிப்பட்ட சாட்சி*

**தனிப்பட்ட அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ளுவதே ஒரு சாட்சியின் நோக்கமாகும். மற்றவர்களுடைய வாழ்க்கையில் நேரிட்ட காரியங்களைக் குறித்து ஒருவரோடு வாதிப்பது இயலக்கூடிய காரியமாகும். ஆனால் ஒருவருடைய சொந்த அனுபவத்தைக் குறித்து மற்றவர்களோடு விவாதிப்பது கடினமான காரியமாகும். அப்போஸ்தலர் 22:1-16 மற்றும் அப்போஸ்தலர் 26:9-23 வசனங்களில், தான் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டது பற்றியும், தான் அவரைக் கண்ட பிறகு நேரிட்டவைகளைக் குறித்தும் பவுல் அப்போஸ்தலன் கூறுகிறார்.**

1. **ஒருவர் தனது சாட்சியைப் பகிர்ந்துகொள்ளுவதில் நினைவில் வைத்திருக்க வேண்டிய காரியங்கள்**

    a. சுருக்கமாகச் சொல்லுங்கள் (அதிகபட்சமாக இரண்டு நிமிடங்கள்)

    b. நீங்கள் கிறிஸ்துவை எப்படிக் கண்டுகொண்டீர்கள் என்பதை இழந்துபோனவர்களுக்குச் சொல்லுவதே உங்கள் நோக்கம் என்பதை நினைவில் வைத்திருங்கள். சுவிசஷத்தைப் பிறகு விளக்கிச் சொல்லலாம்.

    c. பிரசங்கம் செய்யாதிருங்கள்.

    d. இந்த வேளையில் இரட்சிப்பின் திட்டத்தை விளக்காதிருங்கள்.

    e. அழைப்பு விடுக்காதிருங்கள்.

    f. தெளிவில்லாத வார்த்தைகளைப் பயன்படுத்தாதிருங்கள். எடுத்துக்காட்டாக, "எனக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது." இப்படிச் சொல்லும்போது ஒரு அவிசுவாசி இரட்சிக்கப்படுவதற்கு ஞானஸ்நானம் அவசியம் என்று நினைக்கலாம். "ஒரு நாள் இரவு நான் இயேசுவை என் இருதயத்தில் ஏற்றுக்கொண்டேன்" என்றோ அல்லது "எனது ஒரே இரட்சகராகவும் ஆண்டவராகவும் கிறிஸ்துவின்மீது நம்பிக்கை வைத்தேன்" என்று சொல்லலாம்.

    g. நீங்கள் விரும்பினால் வேதவசனங்களைப் பயன்படுத்துங்கள்.

    h. உங்களுடைய சாட்சியை எழுதுங்கள். அது 250 முதல் 350 வார்த்தைகளுக்குள்ளாக இருக்க வேண்டும்.

    i. இந்த இரண்டு சொற்றொடர்களைக் கொண்டு உங்கள் சாட்சியை முடியுங்கள்:

        1) இப்போது நித்திய வாழ்வைப் பெற்றிருக்கும் நிச்சயம் எனக்கு உண்டு.

        2) நீங்கள் எப்படி நித்தியமாக வாழ்வதின் நிச்சயத்தைப் பெற முடியும் என்று வேதாகமத்திலிருந்து விளக்கிச் சொல்லட்டுமா?

2. **சாட்சி**

உங்கள் சாட்சியை எழுதுவதற்குக் கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளியுங்கள்:

a. **இயேசுவை அறிவதற்கு முன்பாக என்னுடைய வாழ்க்கை எப்படியிருந்தது? மனோபாவங்கள், வாழ்க்கைமுறைகள், பாவங்கள் இவைகளைக் குறிப்பிடுங்கள் (அப்போஸ்தலர் 22:1-5; 26:4-11)**

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

b. **இயேசு தேவை என்பதை நான் எப்படி உணர்ந்தேன்? (அப்போஸ்தலர் 22:6-8; 26:12-15)**

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

c. **எங்கே, எப்படி நான் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டேன்? (அப்போஸ்தலர் 22:6-10; 26:13-18)**

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

d. **கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதிலிருந்து என்னுடைய வாழ்க்கை எப்படி வேறுபட்டிருக்கிறது? (அப்போஸ்தலர் 22:10-21; 26:19-23)**

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

d. முடிவுரை:

**எப்போதுமே** "இப்போது எனக்கு நித்திய வாழ்வைக் குறித்த நிச்சயம் இருக்கிறது. நீங்களும்கூட நித்திய வாழ்வின் நிச்சயத்தை எப்படிப் பெற முடியும் என்று வேதாகமம் சொல்லுவதை நான் உங்களுக்கு விளக்கிக் காட்டுவதை விரும்புகிறீர்களா?"

இப்போது நீங்கள் உங்களுக்கும் இழந்துபோன நபருக்கும் இடையில் பாலத்தைக் கட்டியிருக்கிறீர்கள். இப்போது அந்தப் பாலத்தைக் கடந்து, அவருடைய தனிப்பட்ட வாழ்க்கையில் நுழைவதற்கான அனுமதியைக் கேட்கிறீர்கள். அவர் "சரி" என்றோ அல்லது "வேண்டாம்" என்றோ கூறலாம். அவர் ஒப்புக்கொண்டால் அவருக்குச் சுவிசேஷத்தை அறிவியுங்கள். அவர் மறுத்தால், அவருக்காக நாள்தோறும் ஜெபிக்கும்படி உங்களுடைய வேதாகமத்தில் அவருடைய பெயரை எழுதி வைக்கலாமா என்று கேளுங்கள்.

*உங்கள் அணிக்கு நீங்கள் போதிக்கும் ஆறாவது காரியம்:*

## *சுவிசேஷத்தை விளக்கிக் கூறும் ஆறு வசனங்கள்*

இரண்டு வகைப்பட்ட கலாச்சாரங்கள் இருக்கின்றன:

1. கிறிஸ்தவரல்லாத அடிப்படையிலான கலாச்சாரம்
2. கிறிஸ்தவ அடிப்படையிலான கலாச்சாரம்

**இவை எப்படிப்பட்ட கலாச்சாரத்துக்கும் பொருத்தமான சுவிசேஷ அடிப்படைகளாகும். கலாச்சாரத்தினால் சுவிசேஷத்தை மாற்ற முடியாது. அது நாம் சுவிசேஷத்தை எப்படி அறிவிக்கிறோம் என்பதில் மட்டுமே மாற்றத்தைக் கொடுக்கிறது. ஒருவர் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுவதற்கு முன்பாக இந்த அடிப்படைச் சத்தியங்களை எப்படியாவது அவரோடு பகிர்ந்துகொள்ள வேண்டும். ஒரு நீண்ட கால ஆய்வின் வடிவிலோ அல்லது கதைசொல்லும் வடிவிலோ இவைகளை நீங்கள் சொல்ல வேண்டும். கிறிஸ்தவ அடிப்படையிலான கலாச்சாரத்தில் ஒருவரை நீங்கள் சந்தித்தவுடனே இவைகளைக் கூறலாம். ஒருவர் சுவிசேஷத்தைக் கூற எந்த வடிவத்தைத் தெரிந்துகொண்டாலும், சுவிசேஷத்தின் இந்த அடிப்படை உண்மைகளை அவர் தெரிந்துவைத்திருப்பது அவசியமாகும்.**

### கிறிஸ்தவரல்லாத அடிப்படையிலான கலாச்சாரத்துக்குரிய கேள்விகள்

இந்த இடத்தில் நீங்கள் "தேவன் யார்? அவரை எப்படிப் புரிந்துகொண்டிருக்கிறீர்கள்?" போன்ற அடிப்படைக் கேள்விகளோடு துவங்க வேண்டும். அவருடைய பதிலுக்குச் செவிகொடுத்த பிறகு, அவரோடுகூட தொடர் ஆய்வுகளை நடத்தலாமா என்று கேளுங்கள். கிறிஸ்தவரல்லாத அடிப்படையிலான கலாச்சாரத்தில் உலகத்தை உண்டாக்கிய தேவனைப்பற்றி அவர்கள் அறிய விரும்புகிறார்களா, தனிப்பட்ட முறையில் அவரை அறிய விரும்புகிறார்களா என்று கேளுங்கள். எளிய வேதாகமப் பாடங்களை அல்லது நாள்வரிசையிலான வேதாகமக் கதைகளைப் பயன்படுத்துங்கள்.

### கிறிஸ்தவ அடிப்படையிலான கலாச்சாரத்துக்குரிய கேள்விகள்

"உங்களிடம் ஒரு கேள்வி கேட்கலாமா? இன்றிரவு நீங்கள் மரித்தால் நித்திய வாழ்வைப் பெறும் நிச்சயம் உங்களுக்கு உண்டா? பரலோகத்துக்குச் செல்லுவீர்களா?" (இந்தக் கேள்வியை மனப்பாடம் செய்யுங்கள்). அந்த நபர் சரியாகப் பதிலளிக்காவிட்டால், தொடர்ந்து உங்கள் சாட்சியைச் சொல்லி, சுவிசேஷத்தை அறிவியுங்கள். அவர் "எனக்கு நிச்சயம் இருக்கிறது" என்று சொல்லுவாரானால், இந்த இரண்டாவது கேள்வியைக் கேளுங்கள்: "இந்தக் கணத்தில் நீங்கள் தேவனுக்கு முன்பாக நிற்கிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுவோம். `நான் ஏன் உன்னை என்னுடைய பரலோகத்துக்குள் அனுமதிக்க வேண்டும்?' என்று அவர் கேட்டால் அவருக்கு எப்படிப் பதிலளிப்பீர்கள்?" (இந்தக் கேள்வியையும் மனப்பாடம் செய்யுங்கள்). அவரால் உங்களுக்குச் சரியான வகையில் பதிலளிக்க முடியாவிட்டால் அவரோடு சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ளுங்கள். "இயேசு கிறிஸ்துவோடுகூடத் தனிப்பட்ட உறவை வளர்த்துக்கொண்டிருக்கிறீர்களா அல்லது அப்படிப்பட்ட முயற்சியில் இருக்கிறீர்களா?" என்ற கேள்வியையும்கூட நீங்கள் கேட்கலாம்.

**கவனியுங்கள்**: ரோமன் கத்தோலிக்கர்கள் போன்ற கிறிஸ்தவ அடிப்படையிலான கலாச்சாரத்தில் பயன்படுத்தப்படும் கேள்விகளைவிட, இந்து சமயம், பௌத்த சமயம், இயற்கைச் சமயம் போன்றவைகளுக்குரிய நித்தியம் சம்பந்தமான கேள்விகள் வித்தியாசமாக இருக்கும். இந்தக் கலாச்சாரங்களில் நாம் "தேவன்", "இயேசு", "பரலோகம்", அல்லது "நரகம்"ஆகிய சொற்களைப் பயன்படுத்தும்போது அந்தந்தக் கலாச்சாரத்துக்கு ஏற்ற வகையில் அவைகளைப் பயன்படுத்த வேண்டும். எடுத்துக்காட்டாக, தேவன் யார் என்பதை விளக்குவதற்கு, அவரே எல்லாவற்றையும் உண்டாக்கிய சர்வ வல்லமையுள்ள ஆவி வடிவிலானவர் என்று விவரிப்பது நல்லதொரு துவக்கமாகும். இயேசுவைக் குறித்துக் குறிப்பிடும்போது, அவருடைய மனிதப் பிறப்பையும் அவர் ஏன் மனிதனாகப் பிறந்தார் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

“பரலோகம்” என்பது மற்றொரு முக்கியமான சொல்லாகும். பௌத்தர்களைப் பொருத்தவரையில் மோட்சம் என்பது எல்லா ஆசைகளிலிருந்தும் தப்புவதாகும். இந்துவைப் பொருத்தவரையில் அது மறுபிறவியின் சுழற்சியிலிருந்து தப்புவதாகும். இயற்கை வணக்கத்திலுள்ளவர்களுக்கு அது வெவ்வேறு வகையிலான அர்த்தத்தைக் கொடுக்கிறது. பல கிழக்கு ஆப்பிரிக்கப் பின்னணிகளில் அது உங்களுடைய சந்ததியினர் உங்களுக்காக ஏறெக்கும் பலிகளைப் பொருத்ததாக இருக்கிறது.

பல கலாச்சாரங்களில் வேதாகமம் மக்கள் அறிந்த ஒரு புத்தகமாக **இருக்கவில்லை**. எட்டப்படாத மக்கள் குழுக்களில் பலர் இதுவரை வேதாகமத்தைக் குறித்துக் கேள்விப்படவேயில்லை. இப்படிப்பட்ட இடங்களில் நான் வேதாகமம் தேவன் தம்மைக்குறித்து நமக்கு வெளிப்படுத்துவதற்காகக் கொடுத்த புத்தகம் என்று விளக்கியிருக்கிறேன். அவர்கள் இதை விசுவாசிக்க வேண்டியதில்லை. அநேகமாக அவர்கள் இதை நம்ப மாட்டார்கள். ஆனால் உங்களோடுகூட அதை ஆய்வுசெய்ய அவர்கள் விரும்பினால், பரிசுத்த ஆவியானவர் தமது பணியைச் **செய்வார்**. சத்தியத்தை அவர்களுக்கு வெளிப்படுத்தத் துவங்குவார்.

வேதாகமம் தேவனுடைய வார்த்தையா அல்லது இல்லையா என்று ஒருபோதும் விவாதத்தில் ஈடுபடாதீர்கள். தேவனுடைய புத்தகத்தில் எழுதப்பட்டவைகளின்மீதுள்ள நம்பிக்கையின் அடிப்படையில் உங்கள் விசுவாசம் இருக்கிறது, அதை அவர்களிடம் பகிர்ந்துகொள்ள விரும்புகிறீர்கள் என்று சொல்லுங்கள்.

ஒரு முன்னோடி ஊழியர் தான் யாருக்கு ஊழியம் செய்கிறாரோ அவர்களுப் பொருத்தமான சாட்சி கூறும் உபகரணத்தைத் தெரிந்துகொள்ளுவது மிக முக்கியமாகும்.

**சுவிசேஷத்தின் உண்மைகள் ஒருபோதும் மாறுவதில்லை. ஆனால் அணுகுமுறை எப்போதும் கலாச்சாரத்தின் அடிப்படையில் மாறும்.**

**நினைவில் வைத்திருங்கள்**: கிறிஸ்தவ அடிப்படையிலான கலாச்சாரத்தில் நீங்கள் நித்தியத்தைக் குறித்த கேள்விகளைப் பயன்படுத்தலாம். ஆனால் கிறிஸ்தவரல்லாத அடிப்படையிலான கலாச்சாரத்தில் ஆவிக்குரிய அறிவின் பல்வேறு மட்டங்களைக் கவனமாகப் பகுத்தறிய வேண்டும். அவர்கள் “பரலோகம்” போன்ற சொற்களைப் பயன்படுத்துவது வேதாகமக் கருத்தின் அடிப்படையிலானதாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

## சுவிசேஷத்தை அறிவித்தல்

**(இந்த ஆறு வசனங்களும் சுவிசேஷத்தின் சாராம்சத்தை விளக்குகின்றன).**

1. **தேவன் உங்கள் வாழ்க்கைக்காக ஒரு நோக்கத்தை வைத்திருக்கிறார்**

   **வசனம் #1: 1 யோவான் 5:13, “உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவ குமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்.”**

   இந்த வசனத்தின் நோக்கம்: தேவன் மனிதர்மீது கொண்டிருக்கும் அன்பின் காரணமாக அவர்களுக்கு நித்திய ஜீவனின் நிச்சயத்தைக் கொடுக்க விரும்புகிறார் என்று காட்டுவது.

   இந்த வசனத்தின் விளக்கம்: நித்திய வாழ்வு என்பது இரண்டு காரியங்களாகும்:

   1) நீங்கள் இந்த வாழ்க்கையில் வாழும்போதே இயேசு கிறிஸ்துவை அறிந்து அவருடைய சமாதானத்தை உங்கள் இருதயத்தில் கொண்டிருத்தல் (யோவான் 17:3).
   2) நீங்கள் மரித்த பிறகு பரலோகத்தில் இயேசு கிறிஸ்துவோடுகூட நித்தியமாக வாழுதல் (யோவான் 14:1-3).

   இந்த வசனத்தைச் செயல்படுத்துதல்: நீங்கள் நித்திய வாழ்வைப் பெற்றிருக்கிறீர்கள் என்ற நிச்சயத்தைப் பெற விரும்புகிறீர்களா?

   **கவனிக்கவும்: கிறிஸ்தவ அல்லது கிறிஸ்தவரல்லாத கலாச்சாரங்களின் அடிப்படையில்** இந்தச் சொற்களுக்குத் தெளிவான விளக்கம் கொடுக்க வேண்டும். இதற்கு அதிகமான நேரம் பிடிக்கும்.

2. **உங்களுடைய தேவை**

**வசனம் # 2: ரோமர் 3:23, "எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி..."**

இந்த வசனத்தின் நோக்கம்: நாம் எல்லோரும் பாவிகள் என்று காட்டுவது.

இந்த வசனத்தின் விளக்கம்: பாவம் என்றால் என்ன? பாவம் என்பது தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இருப்பதாகும். எடுத்துக்காட்டாக, நாம் எல்லோருமே பொய்சொல்லுதல், கோபப்படுதல், கசப்பு, பேராசை, இச்சை, பெருமை ஆகிய பாவங்களைச் செய்திருக்கிறோம்.

இந்த வசனத்தைச் செயல்படுத்துதல்: நீங்கள் பாவம் செய்திருக்கிறீர்கள் என்பதை உணர்கிறீர்களா? பாவத்தின் பின்விளைவு என்ன?

**வசனம் # 3: ரோமர் 6:23, "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்."**

இந்த வசனத்தின் நோக்கம்: நாம் எல்லோரும் நமது பாவங்களுக்காக மரண தண்டனை பெறத் தகுதியுள்ளவர்களாக இருக்கிறோம் என்று காட்டுவது.

இந்த வசனத்தின் விளக்கம்: மரணம் என்றால் என்ன? மரணம் என்பது தேவனிடமிருந்து இரண்டு வழிகளில் பிரிக்கப்பட்டிருப்பதாகும்:

முதலாவதாக, மரணம் என்பது இந்த வாழ்க்கையிலேயே தேவனிடமிருந்து பிரிக்கப் பட்டிருப்பதாகும். இது சந்தோஷமோ அல்லது ஆத்துமாவில் சமாதானமோ இல்லாத வாழ்க்கையாகும். இது உங்கள் இருதயத்தில் இயேசு இல்லாத, நித்திய வாழ்வைக் குறித்த நிச்சயமில்லாத வாழ்க்கையாகும். தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டிருப்பது மனிதனுக்கு வெறுமையான, பயமுள்ள இருதயத்தைக் கொடுக்கிறது.

இரண்டாவதாக, மரணம் என்பது தேவனிடமிருந்து நரகத்தில் நித்தியமாகப் பிரிக்கப் பட்டிருப்பதாகும். இது நித்தியத்துக்கும் கிறிஸ்து இல்லாத வாழ்க்கையாகும். வேதாகமம் சொல்லுகிறபடி, நாம் எல்லோருமே, நமது பாவங்களின் காரணமாக, தேவனிடமிருந்து பிரிக்கப்பட்ட மரணத்துக்குத் தகுதியுள்ளவர்களாக இருக்கிறோம்.

இந்த வசனத்தைச் செயல்படுத்துதல்: நீங்கள் உங்கள் பாவத்தின் காரணமாக, தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டு, மரணத்துக்குத் தகுதியாக இருக்கிறீர்கள் என்பதை உணர்கிறீர்களா?

3. **தேவன் அருளும் காரியம்**

**வசனம் # 4: ரோமர் 5:8, "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்."**

இந்த வசனத்தின் நோக்கம்: தேவன் நம்மிடத்தில் அதிகமாக அன்புகூருகிறபடியால், நமது பாவங்களுக்காக மரிக்கும்படி அவர் தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைக் கொடுத்தார் என்று காட்டுவது.

இந்த வசனத்தின் விளக்கம்: பாவத்துக்கான ஒரே தண்டனை மரணமாகும். நமது இடத்தில், நமது பாவத்துக்கான தண்டனையைச் செலுத்தும்படியாக, இயேசு கிறிஸ்து தண்டிக்கப்பட்டு, நியாயந்தீர்க்கப்பட்டு, சிலுவையில் மரண தண்டனை விதிக்கப்பட்டார்.

இயேசுவின் மரணமே பாவத்தின் குற்றத்திலிருந்து மனிதனை விடுவிக்க ஒரே போதுமான பலியாக இருக்கிறது. பலர் தங்களுடைய நல்ல வாழ்க்கை அல்லது நல்ல செயல்களைச் சார்ந்து பல வழிகளிலும் தேவனிடத்தில் வருவதற்கு முயலுகிறார்கள். பரிசுத்தவான்கள், விக்கிரகங்கள், சொரூபங்கள், ஆவிகள் அல்லது அவதாரங்களின் மூலமாகவும் அவர்கள் தேவனிடத்தில் வர முயலுகிறார்கள்.

மனிதன் தனது சொந்த முயற்சிகளால் பாவத்தைச் சுத்திகரிக்க முடியாது. தேவனோடு உறவு கொள்ளுவதற்கான ஒரே வழி இயேசு கிறிஸ்துவின் மூலமாகச் செல்லுவதாகும். நமது

பாவங்களுக்காக இயேசு சிலுவையில் மரித்த பிறகு, அவர் மரணத்தை வெற்றிகொண்டு, உயிரோடு எழுந்தார். அவர் இப்போதும் உயிரோடு இருக்கிறார், உங்கள் இருதயத்தில் வாழ விரும்புகிறார்.

இந்த வசனத்தைச் செயல்படுத்துதல்: இயேசு கிறிஸ்து உங்கள் ஒரே ஆண்டவராகவும், இரட்சகராகவும், மத்தியஸ்தராகவும் இருக்கிறார் என்பதை விசுவாசிக்கிறீர்களா?

4. **உங்கள் பதில்**

**வசனம் # 5: ரோமர் 10:9, "கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்."**

இந்த வசனத்தின் நோக்கம்: இயேசு கிறிஸ்துவை உங்கள் ஆண்டவராக ஏற்றுக்கொள்ள வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும் என்று காட்டுவது.

இந்த வசனத்தின் விளக்கம்: இயேசுவை ஏற்றுக்கொள்ள நீங்கள் இரண்டு காரியங்களைச் செய்ய வேண்டும்:

1) முதலாவதாக, இயேசுவை ஏற்றுக்கொள்ள வேண்டுமானால், கிறிஸ்துவை உங்கள் ஒரே ஆண்டவராக அறிக்கையிட வேண்டும். நீங்கள் உங்கள் பாவங்களைவிட்டுத் திரும்பி கிறிஸ்துவைப்பின்பற்றவேண்டும். அதாவதுஉங்கள்வாழ்க்கையின்முழுக்கட்டுப்பாட்டையும் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். இதுவே மனந்திரும்புதலாகும்.

2) இரண்டாவதாக, இயேசுவை ஏற்றுக்கொள்ள வேண்டுமானால், கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தார் என்றும் அவரே உங்கள் ஒரே இரட்சகர் என்றும் விசுவாசிக்க வேண்டும். நித்திய ஜீவனை அடைய வேண்டுமானால், நல்லொழுக்கம், நல்ல செயல்கள், விக்கிரகங்கள், சொரூபங்கள், பரிசுத்தவான்கள் அல்லது அவதாரங்களின்மீது உங்கள் பார்வையை வைப்பது உங்களை இரட்சிக்கமாட்டாது.

இந்த வசனத்தைச் செயல்படுத்துதல்: இயேசுவை ஆண்டவர் என்று அறிக்கையிடவும், உங்கள் வாழ்க்கையை அவருக்கு ஒப்புக்கொடுக்கவும் நீங்கள் ஆயத்தமாக இருக்கிறீர்களா? மற்றக் காரியங்களின்மீது நம்பிக்கை வைப்பதை விட்டுவிட்டு, இப்போதே இயேசு கிறிஸ்துவை உங்கள் ஒரே ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டு அவருக்கு உங்கள் வாழ்க்கையை ஒப்புக்கொடுக்க ஆயத்தமாக இருக்கிறீர்களா?

**வசனம் # 6: ரோமர் 10:13, "கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்."**

இந்த வசனத்தின் நோக்கம்: இயேசுவின் நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற யாவரும் இரட்சிப்படைவார்கள் என்று காட்டுவது.

இந்த வசனத்தின் விளக்கம்: இப்போதே நீங்கள் உங்கள் இருதயத்தில் இயேசுவை விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்ள முடியும்.

இந்த வசனத்தைச் செயல்படுத்துதல்: இயேசுவுக்கு உங்கள் வாழ்க்கையை ஒப்புக்கொடுத்து, இப்போதே அவர் உங்கள் வாழ்க்கையில் பிரவேசிக்கும்படி வேண்டிக்கொள்ள ஆயத்தமாக இருக்கிறீர்களா? நீங்கள் ஆயத்தமாக இருப்பீர்களானால், உங்கள் முழு இருதயத்தோடும் இந்த ஜெபத்தைத் தேவனிடம் எறெடுங்கள்:

> "ஆண்டவரே, நான் ஒரு பாவி. எனது ஒரே ஆண்டவராகவும், இரட்சகராகவும், மத்தியஸ்தராகவும் நான் உம்மீது என் நம்பிக்கையை வைக்கிறேன். எனது வாழ்க்கையை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். எனது இருதயத்துக்குள் வந்து, இப்போதே என்னை இரட்சியும். என்னை மாற்றி, எனது வாழ்க்கையின் முழுக் கட்டுப்பாட்டையும் எடுத்துக்கொள்ளும். ஆமென்."
>
> இயேசு உங்கள் ஜெபத்துக்குப் பதிலளித்திருக்கிறார் என்று நம்புகிறீர்களா? இயேசு இப்போது எங்கே இருக்கிறார்? நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா?

# திட்டம்

# புதிய குழுக்களையும், புதிய சபைகளையும் பெருக்கமடையச் செய்வதற்கான செயல்தந்திரம்

இந்தப் பகுதி முன்னோடி சுவிசேஷகர் பின்பற்ற வேண்டிய செயல்முறையைச் சுருக்கமாகக் கொடுக்கிறது. சபையை வடிவமைப்பதற்கான நான்கு வெவ்வேறான மாதிரிகள் கொடுக்கப்பட்டுள்ளன. பெருக்கமடையச் செய்வதின் மூலம் புதிய சபைகளைத் துவங்குவது எப்படி என்பதற்கான நான்கு சுழற்சிகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

**நினைவில் வைத்திருங்கள்**: இது பின்பற்ற வேண்டிய ஒரு செயல்திட்டம் அல்ல. இவை கொள்கைகள்தாம்; ஒருவர் எப்படிப்பட்ட செயல்தந்திரத்தை உருவாக்கலாம் என்று ஆலோசனை தருகின்றன. ஆனால் ஊழியத்தில் அது வேறுவிதமாக வளர்ச்சியடையலாம். பரிசுத்த ஆவியானவரின் தலைமையைப் பின்பற்றுவதே முக்கியமாகும். அவர் பயிற்சியளிக்கும்படி புதிய தலைவர்களை எழுப்புவார், அவர் புதிய ஊழியங்களைத் துவங்குவதற்கான கதவுகளைத் திறப்பார். மற்றவர்களுக்குப் பயிற்சியளிக்கும் மற்றவர்களுக்குப் பயிற்சியளிக்கும் மற்றவர்களுக்குப் பயிற்சியளிக்கும் மற்றவர்களுக்குத் தொடர்ந்து பயிற்சியளிக்க மறவாதிருங்கள்!

**I. ஒரு சபையை வடிவமைப்பதற்கான நான்கு மாதிரிகள்**

**II. முன்னோடி சுவிசேஷ ஊழியச் சுழற்சிகள் (cycles)**

## I. ஒரு சபையை வடிவமைப்பதற்கான நான்கு மாதிரிகள்

சபை ஸ்தாபிப்பதில் **கட்டம் I** என்பது பூஜ்யத்திலிருந்து நீங்கள் சபையைத் துவங்கும் கட்டம் வரையில் செல்லுவதாகும். **கட்டம் II** என்பது புதிய ஊழியத்தை நீங்கள் கட்டமைப்பதாகும். புதிய சபையை வடிவமைப்பதற்குப் பல மாதிரிகள் இருக்கின்றன. ஆனால் நான்கு மாதிரிகளை மட்டுமே குறிப்பிடுகிறோம். இந்த அத்தியாத்தில் கட்டம் I க்கான திட்டமும் கொடுக்கப்பட்டுள்ளது.

### 1. பாரம்பரியச் சபை (The Traditional Church)

இந்த மாதிரி செயல்திட்ட அடிப்படையிலானது. ஞாயிறு பள்ளி போன்ற செயல்திட்டங்கள் இதில் இருக்கும். இவை கூடுதலான வேதாகமரீதியானவையாகும். ஒரு கட்டிடம் இருக்க வேண்டும் என்பது அதிகமாக வலியுறுத்தப்படுகிறது. பெரும்பாலும் போதகர் மற்றும்/ அல்லது மூப்பர் அல்லது டீக்கன்மார்களின் வலுவான குழுவினால் கட்டுப்படுத்தப்படுகிறது.

### 2. துணைக்கோள் சபை (The Satellite Church)

இந்த மாதிரியில் ஒரு தாய்ச் சபைக்கு அதிகமான ஊழியங்கள் மற்றும்/ அல்லது சபைகள் இருக்கின்றன. தாய்ச் சபை அல்லது ஆதரவளிக்கும் சபை இந்த ஊழியங்கள் மற்றும்/ அல்லது சபைகளைக் கட்டுப்படுத்துகிறது. ஒவ்வொரு சபையிலும் ஆராதனை, வேதாகம ஆய்வு, ஐக்கிய உறவு போன்றவை இருக்கும். வீடுகளிலோ, கடையின் முன்பகுதியிலோ அல்லது சிற்றாலயத்திலோ இவை நடத்தப்படும். என்றாலும், இவர்கள் இப்போதும் தாய்ச் சபையின் உறுப்பினர்களாகவே இருக்கிறார்கள். பெரும்பாலும் தசமபாகமும் காணிக்கைகளும் தாய்ச் சபைக்கு அனுப்பப்படுகின்றன. இந்தத் துணைக்கோள் சபைகள், தாங்களும் ஒரு தாய்ச்சபையாக ஆகும் வரையில் தங்களில் தாங்களே பெருக்கமடையும் தத்துவத்தைக் கொண்டிருக்கவில்லை என்பதே பிரச்சினையாகும். பல இடங்களில் சபை அமைப்புரீதியாக உருவாக வேண்டுமானால் நிலம் அல்லது கட்டிடம் தேவைப்படுகிறது, பிரதிஷ்டை செய்யப்பட்ட போதகர் தேவைப்படுகிறார். இவை மனிதனால் உருவாக்கப்பட்ட தேவைகளாகும், இவை தேவனிடமிருந்து வருவதில்லை.

### 3. **சிறுகுழுச் சபை** (The Cell Church)

இந்த மாதிரியில் சபை சிறு குழுக்களைக் கொண்டிருக்கிறது. இவை வீடுகளிலும், கடைகளிலும், அலுவலகங்களிலும் கூடிவருகின்றன. இந்தக் குழுக்கள் பூகோளரீதியில் உருவாக்கப்படுகின்றன. அல்லது இளைஞர் குழுக்கள், பெண்கள் குழுக்கள், ஆண்கள் குழுக்கள் என்று ஒரேசீரான தன்மையுள்ள குழுக்களாக உருவாக்கப்படுகின்றன. சமுதாயத்தில் சிறுகுழுக் கூட்டங்கள் நடத்தப்படுவது வலியுறுத்தப்படுகிறது. குருத்துவ மற்றும் உறுப்பினர் பராமரிப்பு, பரஸ்பர நம்பிக்கை இவைகள் வலியுறுத்தப்படுகின்றன. பெரும்பாலும் குழுக்களில் திருவிருந்து பரிமாறப்படலாம், குழு அடிப்படையில் ஞானஸ்நானம் கொடுக்கலாம். இந்த முறைமைகளை நடத்தும் ஒரு சாமானியர் குழுவுக்குத் தலைமைதாங்குகிறார். ஒவ்வொரு வாரமும் குழுக்கள் ஒரு பெரிய கொண்டாட்ட ஆராதனையில் பங்கெடுக்கின்றன.

### 4. **வீட்டுச் சபை** (The House Church)

சிறிய சபைகள் புதிய விசுவாசிகளின் வீடுகளில் துவங்கப்படுகின்றன. இவை 15 முதல் 30 உறுப்பினர்களைக் கொண்டதாக வளர்ச்சியடையலாம், பிறகு இது பெருக்கமடைகிறது. ஒவ்வொரு வீடும் ஒரு தனிப்பட்ட உள்ளூர் சுயாதீனச் சபையாக இருக்கிறது. ஆராதனைகள் வீடுகளிலோ அல்லது கடைகளிலோ நடத்தப்படுகின்றன. வீட்டுச் சபையில் ஞானஸ்நானம், திருவிருந்து என்ற இரண்டு முறைமைகளும் ஆசரிக்கப்படுகின்றன. சபையின் ஐந்து நோக்கங்களை இவை செயல்படுத்துகின்றன: துதித்தல், சுவிசேஷ ஊழியம், சீஷத்துவம், சேவக ஊழியங்கள் மற்றும் ஐக்கிய உறவு.

## II. முன்னோடி சுவிசேஷ ஊழியச் சுழற்சிகள்

### சுழற்சி 1



## சுழற்சி 2


முன்னோடி
சுவிசேஷ
ஊழியர்
முதல் சுழற்சியில் புதிதாக
மனம் மாறியவர்களைக்
கொண்டு இரண்டாவது
சுவிசேஷ - சீஷத்துவ அணியை
உருவாக்குகிறார்
ஆராய்ந்து பார்த்தல்
மற்றும் / அல்லது
தொடர்புகள்
நற்செய்திக் குழு
நற்செய்திக் குழு
நற்செய்திக் குழு
நற்செய்திக் குழு
கொண்டாட்டம்
மற்றும்
சீஷத்துவம்

## சுழற்சி 2இன் தொடர்ச்சி

**இந்தக் கொண்டாட்ட ஆராதனை முதலாம் சுழற்சியின் கொண்டாட்ட ஆராதனையோடு சேர்க்கப்படலாம் அல்லது தனிப்பட்ட உள்ளூர் சபையாக உருவாகலாம்**



## சுழற்சி 3




மூன்றாவது சுழற்சியில், ஆதி முன்னோடி சுவிசேஷ ஊழியருக்குப் பதிலாக முதலாம் மற்றும் இரண்டாவது சுழற்சியில் கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தப்பட்ட புதிய விசுவாசிகளால் நற்செய்திக் குழுக்களும், கொண்டாட்ட ஆராதனைகளும், சுவிசேஷ ஊழிய - சீஷத்துவ பயிற்சிகளும் நடத்தப்பட வேண்டும்.

## சுழற்சி 3இன் தொடர்ச்சி



# சுழற்சி 4




இப்போது உள்ளூர் தலைவர்கள் எல்லா நற்செய்திக் குழுக்களையும், கொண்டாட்ட ஆராதனை களையும், சீஷத்துவக் குழுக்களையும் வழிநடத்துகிறார்கள். இப்போது சபையை வழிநடத்தும்படி புதிய தலைவர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும்.

## சுழற்சி 4இன் தொடர்ச்சி




உங்கள் உள்ளூர் கலாச்சாரத்தைச் சார்ந்து ஒரு உள்ளூர் சபையோ அல்லது நான்கு வெவ்வேறான சபைகளோ இருக்கக்கூடும். உள்ளூர் தலைவர்கள் எல்லாச் சுழற்சிக்கும் வழிகாட்ட வேண்டும்.

## சுழற்சி 5




புதிய சபை தன்னைத்தானே பெருக்கமடையச் செய்கிறது.

ஸெல் சபைகளைத் துவங்க முன்னோடி சுவிசேஷ செயல்தந்திரத்தைப் பயன்படுத்துதல்




முன்னோடி
சுவிசேஷ
ஊழியர்
ஆராய்ந்து பார்த்தல்
மற்றும் / அல்லது
தொடர்புகள்
நற்செய்திக் குழு
நற்செய்திக் குழு
நற்செய்திக் குழு
நற்செய்திக் குழு
சேய்ச் சபை
சேய்ச் சபை
சேய்ச் சபை
சேய்ச் சபை

## "அயிக்கோசின்" செயல்முறை

+ சமாதானப் பாத்திரரின் மனமாற்றத்தினால் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள்.

- இன்னும் விசுவாசியாகவில்லை.



## பிற்சேர்க்கைகள்


வேதாகமமும் கலாச்சாரமும் ... 72

வேதாகமமும் அதன் அதிகாரமும் ... 73

மறைமுகமான செயல்முறை ... 77

முன்னோடி சுவிசேஷ ஊழியர் மற்றும் வேதாகம ஆய்வு உபகரணங்கள் இல்லாமல் ஒரு வீட்டு வேதாகம ஆய்வை வழிநடத்துவது எப்படி? ... 92

## வேதாகமமும் கலாச்சாரமும்

எது வேதாகமரீதியானது, எது கலாச்சாரரீதியானது என்பதை நாம் பிரித்துப் பார்ப்பது அவசியமாகும். தாமஸ் வேட் அகின்ஸ் ஒரு அமெரிக்கர். ஆனால் ஆசியாவிலும் (வியட்நாம்), அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் (வாஷிங்டன்), ஆப்பிரிக்காவிலும் (ஜிம்பாப்வே), பிரேசிலிலும் அருட்பணியாளராக ஊழியம்செய்யும்படி தேவன் அவரை அழைத்திருக்கிறார். இன்று அவர் உலகெங்கிலும் பயிற்சிக் கருத்தரங்குகளை நடத்திவருகிறார்.

உலகத்தில் ஒவ்வொரு இடத்திலும் அதற்கே தனிச்சிறப்பான கலாச்சாரம் காணப்படுகிறது. வேதாகமத்தின் அடிப்படையிலும், ஒவ்வொரு நாட்டின் சொந்தக் கலாச்சாரத்தின் அடிப்படையிலும் ஆண்டவருடைய ஊழியத்தைச் செய்ய வேண்டும். அது ஒரு கலாச்சாரத்தின் சமயப் பாரம்பரியங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கக் கூடாது. எடுத்துக்காட்டாக, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பெரும்பாலான சபைகள் ஞாயிறு காலை 11 மணிக்குத் தங்கள் ஆராதனைகளைத் துவங்குகின்றன. அப்படியானால் உலகத்திலுள்ள எல்லா சபைகளிலும் காலை 11 மணிக்கு ஆராதனையைத் துவங்க வேண்டுமென்று அர்த்தமாகுமா? **இல்லை!** அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பல சபைகள் பாமாலை இசையைப் பயன்படுத்துகின்றன. அப்படியானால் உலகத்திலுள்ள மற்ற நாடுகளும் பாமாலை இசையைப் பயன்படுத்த வேண்டுமா? **இல்லை!** அப்படிச் செய்ய விரும்பினால் அவர்கள் அதைச் செய்யலாம். ஆனால் அவர்கள் உள்ளூர்க் கலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்ட இசைப் பாடல்களையே பாட வேண்டும். உள்ளூர் இசைக் கருவிகளைப் பயன்படுத்த வேண்டும். எடுத்துக் காட்டாக, ஒரு சபை எலெக்ட்ரிக் கிடார், எக்காளம், டிரம்ஸ் மற்றும் பிற இசைக் கருவிகளைப் பயன்படுத்தலாம்.

**எச்சரிக்கை!** இசை என்பது துதித்தல் அல்ல. இசை என்பது துதித்தலுக்கு ஒரு வழிவகையாக மட்டுமே இருக்கிறது. அது நமது உணர்வுகளைத் தேவனிடம் வெளிப்படுத்தும் ஒரு செயல்முறையாக இருக்கிறது. பயன்படுத்தப்படும் இசை மக்களின் கலாச்சாரத்தைப் பிரதிபலிப்பது அவசியமாகும். அது முன்னோடி ஊழியரின் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்க வேண்டிய அவசியமில்லை. நாம் ஒரு உள்ளூர் சமுதாயத்தின் கலாச்சாரத்தைப் புரிந்துகொள்ளும் வரையில் ஆற்றலுள்ள அருட்பணியாளராகவோ அல்லது முன்னோடி ஊழியராகவோ செயல்பட முடியாது.

ஒவ்வொரு நாட்டிலும் பல கலாச்சாரங்களும் துணைக் கலாச்சாரங்களும் இருக்கின்றன. ஒரு முன்னோடி ஊழியர் எந்த இடத்தில் தனது ஊழியத்தை நடத்தும்படி திட்டமிடுகிறாரோ அந்த மக்களின் கலாச்சாரத்தை அறிந்து, புரிந்துகொள்ளுவது அவசியமாகும். அவர் அந்தக் கலாச்சாரத்தை மாற்ற முயலக் கூடாது, கிறிஸ்து மக்களின் இருதயங்களை மாற்ற அனுமதிக்குமாறு ஊழியம் செய்ய வேண்டும். ஒரு கலாச்சாரத்துக்குள்ளாக வேதாகமக் கொள்கைகளுக்கு முரண்பாடாக இருக்கும் காரியங்களை மட்டுமே அகற்ற வேண்டும். எடுத்துக்காட்டாக, உலகத்தின் சில காட்டுப் பகுதிகளில் மக்கள் சிறு குழந்தைகளைப் பலியிடுகிறார்கள். இப்படிப்பட்ட பழக்கம் வேதாகமக் கோட்பாட்டுக்கு முற்றிலும் விரோதமானதாகும். இந்த இடத்தில் முன்னோடி ஊழியர் சுவிசேஷத்தின் சத்தியத்தைப் பிரசங்கிப்பதின் மூலம் தேவன் கலாச்சாரத்தை மாற்ற அனுமதிக்கிறார்.

அமெரிக்கத் தலைநகராகிய வாஷிங்டனில் தாமஸ் வேட் அகின்ஸ் ஊழியத்தைத் துவங்கியபோது அவர் இதை அனுபவித்தார். தெற்கு வியட்நாமில் அருட்பணியாளராக ஊழியம் செய்துவிட்டு 1970ஆம் ஆண்டு அமெரிக்காவுக்குத் திரும்பியபோது, இலட்சக்கணக்கான இளைஞர்கள் தெருக்களில் வசிப்பதை அவர் கண்டார். அவர்கள் வீட்டை விட்டு வெளியேறி, போதை மருந்துகளுக்கு அடிமையாகி, தலைமயிரை நீளமாக வளர்த்துக்கொண்டு, நாட்டுப் பாடல்களைப் பாடி, அமெரிக்க இந்தியர்களின் ஆடைகளை அணிந்துகொண்டு, வியட்நாம் யுத்தத்துக்கு எதிராகக் குரலெழுப்பிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஹிப்பிக்கள் என்று அழைக்கப்பட்டார்கள்.

இந்த இளைஞர்களில் எவரும் ஒரு சுவிசேஷ சபைக்குச் செல்லவில்லை. அவர்களைக் கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்த வேண்டுமானால், சபை அவர்களிடம் செல்ல வேண்டும். தாமஸ் வேட் அமெரிக்க

இந்தியர்களின் ஆடைகளை அணிந்துகொண்டு, தனது தலைமயிரை நீளமாக வளர்த்து, அவர்களுடைய கலாச்சாரத்துக்குள் நுழைந்தார். ஆனால் அவர் குடிக்கவோ, போதை மருந்துகளை எடுத்துக்கொள்ளவோ இல்லை. அவர் ஒரு நியூ இங்கிலாந்து பட்டணத்தில் ஒரு உணவு விடுதியைத் திறந்தார். அவர்கள் நாற்காலிகளையெல்லாம் அகற்றினார்கள், கருப்பு வண்ண (நீலம்) விளக்குகளை மாட்டினார்கள், மக்கள் தரையில் அமரும்படி செய்தார்கள். விடுதியின் முன்னால் ஒரு பெரிய சிலுவை வைக்கப்பட்டது, அதன்மீது சிவப்பு விளக்கு பிரகாசித்துக்கொண்டிருந்தது., ஒவ்வொரு நாளும் பாப்டிஸ் சபை சாண்ட்விச்சுகளையும், காப்பியையும் கொடுத்துதவியது.

ஒவ்வொரு நாளும் மாலை மூன்று மணி முதல் அதிகாலை இரண்டு மணி வரையில் தாமஸ் வேடும், அவருடைய மனைவியும், அவர்களுடைய அணியினரும் விடுதியின் கதவுகளைத் திறந்து வைத்தார்கள். ஹிப்பிக்கள் உள்ளே வந்து இலவச சாண்ட்விச்சுகளைச் சாப்பிட்டு, காப்பியைக் குடிக்க அனுமதித்தார்கள். ஹிப்பிக்கள் வந்து தரையில் உட்காரும்போது, தாமஸ் வேடும் அவருடைய அணியினரும் அவர்களோடு உட்கார்ந்துகொள்ளுவார்கள். அவர்களுடைய வாழ்க்கையைக் குறித்து அவர்களுடன் பேசுவார்கள். அவர்கள் சபைக் கட்டிடத்தை விட்டு வெளியே வந்து, அவர்களுடைய கலாச்சாரத்துக்குள் நுழைந்தபடியால் அவர்களால் பலரைக் கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்த முடிந்தது. அவர்கள் சபைக்கு வந்து, சுவிசேஷத்தைக் கேட்டு, இயேசுவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை அத்தியாவசியமானதாகக் கருதவில்லை. அவர்கள் மக்களை நாடிச் சென்றனர்.

**ஒரு நாட்டின் ஒவ்வொரு பகுதிக்கும் அதற்கென ஒரு கலாச்சாரம் இருக்கிறது என்பதே முக்கிய கருத்தாகும். முன்னோடி ஊழியரின் ஊழியம் அந்தக் கலாச்சாரப் பின்னணிக்குப் பொருத்தமானதாக இருக்க வேண்டும். மற்றொரு பகுதி அல்லது நாட்டின் கலாச்சாரத் தாக்கம் இருக்கக் கூடாது. முன்னோடி ஊழியர் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும், ஏனென்றால் சுவிசேஷமே வேதாகமரீதியாக இல்லாத கலாச்சாரத்தின் அம்சங்களை மாற்றிப்போடும்.**

## வேதாகமமும் அதன் அதிகாரமும்

**உலகத்திலுள்ள ஒவ்வொரு நபருக்கும் ஒரு அதிகாரத்தின் ஆதாரம் இருக்கிறது. எது சரி, எது தவறு என்பதைத் தீர்மானிப்பதற்கு அதிகாரத்தின் நான்கு ஆதாரங்களை டாக்டர் ரால்ஃபெ நெய்பர் ஜூனியர் தனது *Survival Kit* நூலில் விவரித்திருக்கிறார்.**

1. **அறிவு:** எது சரியானது அல்லது தவறானது, நல்லது அல்லது கெட்டது, செய்யக் கூடியது, செய்ய முடியாதது போன்றவைகளுக்கு இடையில் பகுத்தறியும் தனது சொந்தத் திறமையைக் கொண்டு ஒருவர் சத்தியத்தைத் தீர்மானிக்கிறார். எடுத்துக்காட்டாகத் தனது அறிவைச் சார்ந்திருக்கும் ஒருவர் இயேசு செய்த அற்புதங்களை மறுக்கலாம். ஏனென்றால் அவரால் அவைகளை அறிவியல் பூர்வமாக நிரூபிக்க முடிவதில்லை. ஏசாயா 55:8 வசனம் "என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்" என்று சொல்லுகிறது.

2. **அனுபவம்:** இதில் ஒரு நபர் தனது உணர்வுகள், அறியும் சக்தி, உணர்ச்சிகள் இவைகளைக் கொண்டு எது சரி, எது தவறு என்று தீர்மானிக்கிறார். எடுத்துக்காட்டாக, ஒருநாள் தாமஸ் வேட் பிரேசில் நாட்டில் ரியோடி ஜெனிரோவில் ஒரு வாடகைக் காரில் ஏறினார். அதன் ஓட்டுநருக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கத் துவங்கினார். அந்த டிரைவர் ஒரு கூட்டத்தில் பார்வையற்ற ஒருவன் குணமாக்கப்பட்டு, பார்வையைப் பெற்றதைத் தான் கண்டதாகக் கூறினான். தாமஸ் அவனிடம் அவனுடைய சபையின் பெயரைக் கேட்டார். தான் ஒரு கிறிஸ்தவன் இல்லை என்று அவன் பதிலளித்தான். அவனுடைய சமயம் கிறிஸ்தவ நம்பிக்கையோடு எந்தத் தொடர்பையும் கொள்ளாத ஒரு சமயமாக இருந்தது.

   சாத்தானுக்கும் அற்புதங்களைச் செய்யும் சக்தி உண்டு. ஆனால் அவனால் எவரையும் இரட்சிக்க முடியாது, அவர்களுக்கு மெய்யான சமாதானத்தையும், முழுமையான மன்னிப்பையும்

கொடுக்க முடியாது. சில வேளைகளில் அவன் மக்களை வஞ்சிப்பதற்காக அற்புதங்களைச் செய்கிறான். 2 தெசலோனிக்கேயர் 2:9-12 வசனங்களில் வேதாகமம் இப்படிச் சொல்லுகிறது: "**அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனடியால் அப்படி நடக்கும். ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்.**"

சிலர் "நான் மதுவையும், போதை மருந்துகளையும் நம்புகிறேன். ஏனென்றால் அவைகளைப் பயன்படுத்தும்போது நலமான உணர்வைப் பெறுகிறேன்" என்று சொல்லுகிறார்கள். இவர்களுக்கு அவர்களுடைய உணர்வுகளே அதிகாரத்தின் ஆதாரமாக இருக்கின்றன. இப்படி உணர்வுகளின் அடிப்படையில் உங்களுடைய நம்பிக்கையை வைத்திருப்பது அபாயகரமான காரியமாகும். வேறு சிலர் "இந்தக் குறிப்பிட்ட நபரால் நோயைக் குணமாக்க முடிந்தபடியால் நான் இந்தக் குணமாக்கும் நபர் அல்லது மருத்துவரின்மீது நம்பிக்கை வைத்திருக்கிறேன்" என்று சொல்லுகிறார்கள். ஆனால் அற்புதங்களைச் செய்யும் ஒருவர் பிரமாதமான காரியங்களைச் செய்து, பணத்தையும் புகழையும் சம்பாதித்தாலும், அவர் தேவனிடமிருந்து வராதவராகவும் இருக்கலாம். அற்புதங்கள், உணர்வுகள் அல்லது நமது அனுபவங்களின் அடிப்பையில் நமது விசுவாசத்தை வைத்திருக்கக் கூடாது. நாம் இயேசு கிறிஸ்துவின்மீது, அவர் யார் என்பதின்மீது, தேவனுடைய வார்த்தையிலுள்ள அவருடைய வாக்குத்தத்தங்களின்மீது நமது விசுவாசத்தை வைக்க வேண்டும்.

3. **பாரம்பரியம்:** இதுவே இயேசு எதிர்நோக்கிய மிகப்பெரிய பிரச்சினைகளில் ஒன்றாகும். அவர் யூதர்களின் பாரம்பரியத்துக்கு எதிராகப் போராடினார். ஏனென்றால் அவர்கள் எப்போதுமே மனிதர்களின் தேவைகளுக்கு முன்னால் தங்கள் பாரம்பரியத்துக்கு முதலிடம் கொடுத்தார்கள். மாற்கு 3:1-6 வசனங்கள் பரிசேயர்கள் இயேசுவைச் சோதிப்பதை நாம் காணலாம்.

வசனம் 01 - இயேசு ஒரு ஜெபஆலயத்துக்குள் நுழைந்தபோது என்ன நடந்தது என்பதை நாம் பார்க்கிறோம். அந்த ஜெப ஆலயத்தில் மக்கள் நிறைந்திருந்தார்கள். அவர்களுக்கு நடுவே சூம்பின கையையுடைய ஒரு மனிதன் இருந்தான்.

வசனம் 02 - மக்கள் தங்களுக்குள்ளே இப்படிப் பேசிக்கொண்டார்கள்: "இப்போது உள்ளே நுழைந்தவர் யார் தெரியுமா?" "இயேசு." "அதோ அங்கே யார் இருக்கிறான் தெரிகிறதா?" "ஒரு சூம்பின கையையுடைய மனிதன் இருக்கிறான்." "இயேசு அவனைக் குணமாக்குவார் என்று நினைக்கிறாயா?" "தெரியவில்லை. இன்று சனிக்கிழமை, ஓய்வுநாள் அல்லவா?"

வசனம் 03 - இயேசு அந்த மனிதனை எழுந்து, தம்மிடம் வரும்படி கூறினார். பிறகு அவர் கூட்டத்தாரைப் பார்த்துக் கேட்ட கேள்வி அடிப்படையில் இப்படி இருந்தது: "இந்த மனிதனைக் குணமாக்குவது பாவமா?"

வசனம் 04 - எல்லோரும் அமைதியாக இருந்தார்கள். அவர்களுடைய இருதயக் கடினத்தைக் கண்டு, இயேசு கோபப்பட்டார்.

வசனம் 05 - இயேசு அந்த மனிதனிடம் "உன் கையை நீட்டு" என்று கூறினார். அவன் தன் கையை நீட்டினான், அவனுடைய கை முழுமையாகக் குணமடைந்தது.

"*கர்த்தருக்கு ஸ்தோத்திரம், இவனுடைய கை குணமாகிவிட்டது!*" ஆனால் கூட்டத்தினர் இப்படிப் பதிலளிக்கவில்லை. 6ஆம் வசனத்தை வாசியுங்கள்.

வசனம் 06 - உடனே பரிசேயர் புறப்பட்டுப்போய், அவரைக் **கொலைசெய்யும்படி**, அவருக்கு விரோதமாய் ஏரோதியரோடேகூட ஆலோசனைபண்ணினார்கள். இயேசுவின் ஊழியத்தின் முடிவில் அல்ல, துவக்கத்திலேயே அவரைக் கொல்லத் திட்டமிட்டார்கள். **ஏன்?**

1. இங்கேயுள்ள பிரச்சினை என்ன?

அது ஓய்வுநாளாக இருந்தது.

2. ஓய்வுநாளில் ஒருவனைக் குணமாக்குவதிலுள்ள பிரச்சினை என்ன?

அது சமயப் பாரம்பரியங்களுக்கு எதிரானது

3. இயேசு திரித்துவத்தின் அங்கமாக இருக்கிறார் என்றும் அவர் தேவனுடைய குமாரன் என்றும் விசுவாசிக்கிறீர்களா?
4. இயேசு ஓய்வுநாளுக்கு ஆண்டவராக இருக் கிறார் என்று நீங்கள் நம்புகிறீர்களா?
5. இயேசு ஓய்வுநாளில் அந்த மனிதனைக் குணமாக்கியபோது அவர் தமது பரம பிதா வுக்குக் கீழ்ப்படியாமல் போனார் என்று நம்பு கிறீர்களா?
6. அப்படியானால் பிரச்சினைதான் என்ன?

சமயத் தலைவர்கள் சில கூடுதலான விதிகளையும், பாரம்பரியங்களையும் உருவாக்கினார்கள். தேவன் அவைகளை உருவாக்கவில்லை.

**இதற்கும் முன்னோடி சுவிசேஷ ஊழியம் மற்றும் சபை ஸ்தாபித்தலுக்கும் இடையிலான தொடர்பு என்ன? எல்லாமே!!!**

பாஸ்டர் தாமஸ் வேட் அகின்ஸ் பிரேசில் நாட்டுக்குச் சென்றபோது, அவர் சபை ஸ்தாபிப்பவர்களின் ஒரு அணியை உருவாக்கினார். அவர்களில் பலர் சாமானிய மக்களாவர். "சாட்சி சொல்லுவது எப்படி, புதிய சபைகளைத் துவக்குவது எப்படி" என்று அவர் அவர்களுக்குப் போதித்தார். அவர்கள் பட்டணங்களுக்குச் சென்று, மக்களைக் கிறிஸ்துவுக்கு ஆதாயப்படுத்தினார்கள். புதிய சபைகளைத் துவங்கினார்கள். இரண்டே ஆண்டுகளில் அவர்கள் 63 புதிய ஊழியங்களைத் துவங்கினார்கள்!

என்றாலும், தாமஸ் வேட் மனிதன் உருவாக்கிய மூன்று வலுவான பாரம்பரியங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இவை மனிதரால் உருவாக்கப்பட்டவையாக இருந்தாலும் அதிகச் சக்தி வாய்ந்தவையாக இருந்தன. சபை துரிதமாக வளர்வதற்கு அவை தடையாக இருந்தன.

**பாரம்பரியம் #1** - அவர்கள் மக்களைக் கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்திய பிறகு தாமஸ் வேட் "இந்தச் சாமானிய சுவிசேஷகர்கள் புதிதாக மனமாற்றம் பெற்றவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, திருவிருந்தைப் பரிமாற வேண்டும்" என்று கூறினார். என்றாலும் சில (எல்லோரும் அல்ல) போதகர்கள் "அவர்கள் போதகராக அபிஷேகம் செய்யப்படாதபடியால் அவர்கள் இதைச் செய்யக் கூடாது" என்று கூறினார்கள்.

"வேதாகமத்தில் எந்த இடத்தில் அப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது?" என்று தாமஸ் கேட்டார். "வேதாகமம் அப்படிப் போதிக்காவிட்டாலும் இங்கே அதுவே எங்கள் `பாரம்பரியம்' அல்லது விதி" என்று அவர்கள் பதிலளித்தார்கள்.

இப்போதுள்ள போதகர் அபிஷேக முறைமை வேதாகமத்தில் காணப்படவில்லை. அது வேதாகமத்தில் ஒரு அதிகாரபூர்வமான செயலாகவோ அல்லது செயல்திட்டமாகவோ இருக்கவில்லை. ஒரு முறைசார்ந்த போதகர் அபிஷேக ஆராதனை கிடையாது. "அபிஷேகம் செய்தல்" என்ற சொல்லுக்கு "நியமித்தல், பிரதிஷ்டை செய்தல், ஒழுங்குபடுத்துதல்" என்று அர்த்தமாகும். யோவான் 15:16 வசனத்தில் இயேசு தமது சீஷர்களை "ஏற்படுத்தினார்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. "நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்;... நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்."

அப்போஸ்தலர் 14:23 வசனம் பவுல் மூப்பர்களை "ஏற்படுத்தினார்" (அபிஷேகம் செய்தார்) என்று சொல்லுகிறது. "அல்லாமலும் அந்தந்தச் சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்தி வைத்து, உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள் விசுவாசித்துப் பற்றிக்கொண்ட கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள்." இந்த மூப்பர்கள் பவுல் துவங்கிய சபைகளின் சாமானியத் தலைவர்களாக இருந்தார்கள்.

வேதாகமத்தில் அபிஷேகம்செய்வது மனிதனுடைய கிரியை அல்ல, தேவனுடைய கிரியையாக இருந்தது. தேவன் தலைவர்களை நியமிக்கிறார், தெரிந்தெடுக்கிறார், தெரிந்துகொள்ளுகிறார். இன்று சில நாடுகளில் போதகராக அபிஷேகம் செய்வது என்பது வேதாமரீதியானதைவிடக் கூடுதலான ஒன்றாகக் காணப்படுகிறது. சில நாடுகளில் ஒருவர் அபிஷேகம் செய்யப்படுவதற்கு முன்பாக அவர் வேதாகமப் பள்ளி அல்லது இறையியல் கல்லூரியில் படிப்பை முடித்திருக்க வேண்டும். இயேசு எந்த இறையியல் கல்லூரிக்குச் சென்றார்? பவுல், பேதுரு, யோவான் போன்றோர் எந்த இறையியல் கல்லூரிக்குச் சென்றார்கள்?

நான் கேட்கிறேன், பவுல் அப்போஸ்தலனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தது யார்? ஒரு போதகரா அல்லது சாமானியரா? இயேசு எத்தனை பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்?

அபிஷேகம் பெற்ற போதகர்கள் **மட்டுமே** ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும், திருவிருந்தைப் பரிமாற வேண்டும் என்ற கருத்து எங்கிருந்து வந்தது? சபை வாழ்க்கையைப் பொருத்தவரையில் நாம் பழைய ஏற்பாட்டு முறைமையைப் பின்பற்றுகிறோம், அங்கே மக்களுக்காக ஆசாரியனே எல்லாவற்றையும் செய்தார். ரோமன் கத்தோலிக்க சபையும் இப்படிப்பட்ட தாக்கத்தை விளைவித்திருக்கிறது.

**பாரம்பரியம் #2** - தாமஸ் அடுத்தபடியாக, "நாம் இந்தக் கூடுகைகளைச் சபைகளாக அமைக்க வேண்டும்" என்று கூறினார். உடனே சிலர் "அவர்களுக்குச் சொந்தமாக இடமும் கட்டிடமும் இல்லாத வரையில் நம்மால் அதைச் செய்ய முடியாது" என்று கூறினார்கள். "வேதாகமத்தில் எங்கே இப்படிப் போதிக்கப்பட்டிருக்கிறது?" என்று பாஸ்டர் தாமஸ் கேட்டார். மறுபடியுமாக, "வேதாகமம் அப்படிப் போதிக்கவில்லை, ஆனால் அது எங்கள் பாரம்பரியமாகும்" என்று பதிலளித்தார்கள்.

**பாரம்பரியம் #3** - மற்றொரு நாட்டில் போதகர்கள் "இங்கே குறைந்தபட்சமாக ஐம்பது உறுப்பினர்களாவது கூடிவராவிட்டால் அதை ஒரு சபையாக அமைக்க முடியாது என்று எங்கள் திருச்சபையின் ஆளுகை அமைப்பு கூறுகிறது" என்று தடுத்தார்கள். மறுபடியுமாக "வேதாகமத்தில் எங்கே இப்படிப் போதிக்கப்பட்டிருக்கிறது?" என்று பாஸ்டர் தாமஸ் கேட்டார். மறுபடியுமாக, "வேதாகமம் அப்படிப் போதிக்கவில்லை, ஆனால் அது எங்கள் பாரம்பரியமாகும்" என்று பதிலளித்தார்கள்.

பல இடங்களில் நமது பாரம்பரியங்கள் தேவனுடைய வார்த்தையைவிட அதிகமான அதிகாரத்தைப் பெற்றிருக்கின்றன. இதைத்தான் கிறிஸ்துவும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. நாம் தேவனுடைய ராஜ்யத்தில் வளர்ச்சியைக் கண்டு, புதிய சபைகள் துவங்கப்படுவதைக் காண வேண்டுமானால், வேதாகமத்துக்குத் திரும்பிச் சென்று, தேவனுடைய வார்த்தையைப் பின்பற்ற வேண்டும். மனிதரால் உருவாக்கப்பட்ட விதிகள் மற்றும் பாரம்பரியங்களுக்கு மேலாக வேதாகமத்தை வைக்க வேண்டும். நமது உலகத்தில் மெய்யான சபை ஸ்தாபிக்கும் இயக்கத்தை நாம் காண வேண்டுமானால், தேவன் அவர்களை அழைத்திருக்கும் ஊழியத்துக்காக நமது சாமானிய சுவிசேஷகர்களுக்கு அதிகாரமளிக்க வேண்டும். ஒரு சபை எப்படியிருக்க வேண்டும் என்ற வேதாகமத்தின் போதனைகளைப் பின்பற்ற வேண்டும்.

தேவனுடைய வார்த்தைக்கு மேலாக நாம் நமது பாரம்பரியத்தை வைக்கும்போது, அவருடைய வார்த்தையை மதிப்பில்லாததாக ஆக்குகிறோம். இப்படிப்பட்ட மக்கள் மாயக்காரர்கள் என்று மத்தேயு 15:6-9 வசனங்கள் அழைக்கின்றன. "உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கிவருகிறீர்கள். மாயக்காரரே, உங்களைக்குறித்து: இந்த ஜனங்கள் தங்கள்

வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது; மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார்."

4. **வேதாகமம்:** தேவனுடைய வார்த்தையே மெய்யான அதிகாரத்துக்கு ஒரே ஆதாரமாக இருக்கிறது. தேவன் தமது எழுதப்பட்ட வார்த்தையின்மூலமாகச் சத்தியங்களை வெளிப்படுத்துகிறார். அவைகளை மாற்ற முடியாது, அவை அறிவை நிறைவுசெய்கின்றன.

   யோவான் 8:32 வசனத்தில் இயேசு "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்று சொல்லியிருக்கிறார்.

   ஏசாயா 40:8 வசனம் "புல் உலர்ந்து பூ உதிரும்; நமது தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும்" என்று சொல்லுகிறது.

   சங்கீதம் 119:105 வசனம் "உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது" என்று சொல்லுகிறது.

   சங்கீதம் 119:140 வசனத்தில் "உமது வார்த்தை மிகவும் புடமிடப்பட்டது, உமது அடியேன் அதில் பிரியப்படுகிறேன்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

   சங்கீதம் 119:160 வசனம் "உம்முடைய வசனம் சமூலமும் சத்தியம், உம்முடைய நீதி நியாயமெல்லாம் நித்தியம்" என்று சொல்லுகிறது.

   யோவான் 14:6 வசனம் "அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்... என்றார்" என்று சொல்லுகிறது.

   **சத்தியம் என்றால் என்ன? A. இயேசு கிறிஸ்து**

   **B. தேவனுடைய வார்த்தை**

## மறைமுகமான செயல்முறை (Indirect Method)

**இந்தச் செயல்முறை வேய்ன் மூர் எழுதிய *Good News from God* என்பதோடு கூடப் பயன்படுத்தப் படுகிறது. இதில் கொடுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களில் பங்கெடுப்பவர்கள் சரியான வார்த்தைகளை நிரப்ப வேண்டும்.**

**கிறிஸ்தவர்களல்லாதவர்களோடு சுவிசேஷரீதியான வேதாகம ஆய்வுகளை வழிநடத்துவது எப்படி - வேய்ன் மூர் எழுதிய *Good News from God*.**

1. **முதல் கூட்டம்**

   A. முன்னோடி ஊழியர் இவைகளைக் கூட்டத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும்:

      a. புதிய ஏற்பாடுகள்

      b. பேனாக்கள் அல்லது பென்சில்கள்.

      c. காகிதங்கள்

      d. ஆய்வுக்குப் பொருத்தமான கோரஸ் பாடல்களைக் கொண்ட ஒரு தாள்

      e. கைப்பிரதிகள், முன்னோடி ஊழியர் நடத்த விரும்பும் பாடங்கள் (*இயேசுவின் நற்செய்தி* போன்ற பாடங்கள்).

   B. முன்னோடி ஊழியர் வேதாகம ஆய்வை வழிநடத்துபவர் என்று தன்னைத்தானே அறிமுகம் செய்துகொள்ள வேண்டும்.

C. முன்னோடி ஊழியர் ஒரு காகிதத்தில் கூடியிருப்பவர்கள் கையொப்பமிட்டு, தங்கள் வயது மற்றும் பிறந்தநாள் விவரங்களைக் கொடுக்குமாறு செய்ய வேண்டும். நீங்கள் குழுவின் ஒவ்வொரு உறுப்பினர்களுக்காகவும் ஜெபிப்பதற்கு இது உங்களுக்கு உதவியாக இருக்கும் என்று சொல்லுங்கள். உங்களுடைய ஜெப நோட்டுப் புத்தகத்தில் "நாள்தோறும்" என்ற தலைப்பின்கீழாக இந்தப் பட்டியலைச் சேர்க்க வேண்டும்.

D. பிறகு முன்னோடி ஊழியர் பல கோரஸ் பாடல்களை அறிமுகம் செய்து, அவர்களிடம் அவைகளைக் கற்றுக்கொள்ள விருப்பமா என்று கேட்க வேண்டும். குழுவினரே இதைத் தீர்மானிக்க வேண்டும். பாடல்களைப் பாடும்படி அவர்கள் தெரிந்துகொண்டால், ஓரிரு நல்ல கோரஸ் பாடல்களை அவர்களுக்குச் சொல்லிக்கொடுங்கள்.

E. முன்னோடி ஊழியர் குழு உறுப்பினர்களிடம் அவர்களுடைய வாழ்க்கையில் சிறப்பாக எதற்காகவாவது ஜெபிக்க வேண்டுமா என்று கேட்க வேண்டும். பிறகு அவர்களுடைய விண்ணங்களுக்காக அவர்களோடு சேர்ந்து ஜெபிக்க வேண்டும். வாரம் முழுவதும் இந்த விண்ணப்பங்களுக்காக ஜெபிப்பதாக ஒப்படைப்புக் கொண்டிருக்க வேண்டும்.

F. குழு உறுப்பினர்கள் அடுத்த வாரம் வேதாகம ஆய்வுக்கு வரும்போது வேறு சிலரையும் அழைத்துவரும்படி அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

G. அந்த வீட்டில் எவ்வளவு நேரம் செலவழிக்கலாம் என்பது அந்த மக்களின் கலாச்சாரத்தைப் பொருத்ததாகும். சில கலாச்சாரத்தில் நீங்கள் அதிகமான நேரம் இருப்பதை விரும்புகிறார்கள், சில கலாச்சாரங்களில் ஒரு மணி நேரத்துக்கு மேலாக இருப்பதை விரும்புவது கிடையாது. எனினும் நீங்கள் நீண்ட நேரம் அங்கே இருக்கக் கூடாது. நீங்கள் பாடத்தை முடிக்காவிட்டாலும் அது பிரச்சினை இல்லை. அந்த வீட்டைவிட்டுச் செல்ல வேண்டிய நேரம் வரும்போது, நிறுத்திவிட்டு, அடுத்த வாரம் அதே இடத்தில் அதே பாடத்தைத் தொடர்ந்து போதியுங்கள்.

2. வேதாகமத்தை அறிமுகம் செய்து, ஆய்வை வழிநடத்துதல்

**நினைவில் வைத்திருங்கள்: இவர்கள் அவிசுவாசிகள். வேதாகமத்திலுள்ளவை அவர்களுக்குத் தெரியாது, அதை எப்படிப் பயன்படுத்துவது என்பதும் அவர்களுக்குத் தெரியாது. அவர்களுக்குப் போதிக்க அதிகமான பொறுமை தேவைப்படுகிறது. நீங்கள் இருவர் இருவராக ஊழியம்செய்ய வேண்டுமென்று நாங்கள் பரிந்துரை செய்கிறோம். ஆய்வில் பங்கெடுப்பவர்கள் வேதாகமத்தைப் பயன்படுத்துவது எப்படி என்று கற்றுக்கொள்ளுவதில் இருவரும் அவர்களுக்கு உதவிசெய்ய வேண்டும்.**

A. **அவர்களுக்குப் பொருளடக்கத்தைக் காட்டுங்கள்**. வேதாகமத்தில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன என்று விளக்குங்கள்: பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு. இவை மேலும் புத்தகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் உள்ளடக்கத்தைக் குறித்துச் சுருக்கமாகக் கூறுங்கள்.

B. **பக்க எண்ணைப் பார்த்து, அவர்களால் எப்படிப் புத்தகம் இருக்கமிடத்தைக் கண்டுபிடிக்க முடியும் என்று அவர்களுக்குக் காட்டுங்கள்**. யோவான் சுவிசேஷத்தின் பக்க எண்ணை அவர்கள் கண்டுபிடித்து, அந்தப் புத்தகத்தை எப்படி எடுத்துப் பார்ப்பது என்று உதவுங்கள். அவர்கள் யோவான் சுவிசேஷத்தைக் கண்டுபிடித்த பிறகு, அவர்களுக்கு அதிகாரப் பிரிவுகளையும், வசனப் பிரிவுகளையும் காட்டலாம்.

C. **மறைமுகச் செயல்முறையைப் பின்பற்றி கற்றுக்கொடுங்கள்**. எந்தப் புத்தகம் என்று கண்டுபிடித்த பிறகு நீங்கள் வேதாகம ஆய்வைத் துவங்கலாம். கேள்விகளையும், வசனங்களையும் வாசித்து, அவர்கள் கேள்விகளுக்குப் பதிலளிக்க அனுமதியுங்கள். மறைமுகச் செயல்முறையைப் பின்பற்றும்போது, தலைவர் வசனங்களையோ அல்லது கேள்விகளையோ வாசிக்க மாட்டார். கேள்விகளுக்குப் பதிலளிக்க மாட்டார். தலைவர்

அவர்கள் சரியான பதிலைக் கண்டுபிடிக்க உதவுவார். அவர்கள் தவறாகப் பதிலளித்தால், மறுபடியுமாக வசனத்தை வாசிக்கும்படி செய்யுங்கள். அவர்கள் பதிலைக் கண்டுபிடிக்கும் வகையில் கேள்வியை மாற்றி வடிவமையுங்கள். இந்தச் செயல்முறையின்மூலம் புதிதாக மனமாற்றம் பெற்றவர்கள், மற்ற அவிசுவாசிகளின் வீடுகளில் இதே வேதாகம ஆய்வுகளையோ அல்லது கதைசொல்லுதலையோ வழிநடத்த முடியும்.

### 3. அழைப்பு விடுத்தல்

*இயேசுவின் நற்செய்தி* பாடத்திட்டத்தின் ஆறாவது பாடத்தில் ஒரு அழைப்பு கொடுக்கப் பட்டுள்ளது (நீங்கள் கதை சொல்லுதல் பாடத்தைப் பயன்படுத்துவீர்களானால் ஏழாவது பாடத்தில் இந்த அழைப்பு கொடுக்கப்பட்டுள்ளது). தலைவர் "நித்திய வாழ்வைப் பெறுவது எப்படி?" என்ற கைப்பிரதியைப் பயன்படுத்தலாம். அல்லது சுவிசேஷத்தை விளக்கிச் சொல்லப் பொருத்தமான உபகரணங்களைப் பயன்படுத்தலாம். பிறகு குழு உறுப்பினர்கள் இயேசுவைத் தங்கள் ஆண்டவராக ஏற்றுக்கொள்ளும்படி அழைப்பு விடுக்க வேண்டும்.

### 4. கடைசிப் பாடம்

கடைசிப் பாடத்துக்குப் பிறகு குழுவினர் தீர்மானம் எடுப்பதற்காக நேரம் கொடுக்க வேண்டும். அவர்கள் தொடர்ந்து ஒன்றாகப் படிக்க விரும்புகிறார்களா என்று முன்னோடி ஊழியர் அவர்களிடம் கேட்க வேண்டும். அவர்கள் சரியென்று பதிலளிப்பார்களானால் தொடர் ஊழியப் பாடத்திட்டத்தை (*கிறிஸ்துவில் புது வாழ்வைத் துவங்குதல்*) பரிந்துரைசெய்ய வேண்டும். இந்த இடத்தில் ஒரு பெரிய மாற்றம் உண்டாகிறது. கூடுமான வரையில் எல்லாக் குழுவினரும் ஒரே இடத்தில் கூடிவர வேண்டும் என்று முன்னோடி ஊழியர் ஆலோசனை கூற வேண்டும். தீர்மானம் எடுக்காதவர்கள் உட்பட எல்லோரையும் அழையுங்கள்.

## மறைமுகச் செயல்முறையைப் பயன்படுத்துவது எப்படி?

**சார்ல்ஸ் புரோக்**

### முன்னுரை

மறைமுகச் செயல்முறையைப் பயன்படுத்தி ஒரு வேதாகம ஆய்வை வழிநடத்துவது என்பதைக் கற்றுக்கொள்ளுபவர்களுக்காக இந்தப் பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதைப் பூர்த்திசெய்ய ஒரு மணி நேரம் பிடிக்கும். இந்தத் தலைமைத்துவச் செயல்முறையைப் பயன்படுத்திப் போதிக்கும்போது, எந்த முறைசார்ந்த கல்வியோ அல்லது சிறப்பான பயிற்சியோ தேவையில்லை என்பதைத் தெளிவாகக் கண்டுகொள்ள முடியும்.

இந்தத் தலைமைத்துவச் செயல்முறையைப் பல்வேறு வகையிலான ஆய்வுகள் அல்லது புத்தகங்களுக்குப் பயன்படுத்தலாம். என்றாலும் முன்னோடி சுவிசேஷ ஊழியத்துக்குப் பொருத்தமான வகையில் இருக்கும்படி இந்த ஆய்வைத் தயாரித்திருக்கிறோம். இங்கே அது நற்செய்தி வேதாகம ஆய்வுகளை அல்லது சீஷத்துவ உபகரணங்களைக் குறிக்கிறது.

### இதைப் பயன்படுத்துவது எப்படி

ஒவ்வொரு வரிக்குக் கீழாகவும் ஒரு கோடு இடப்பட்டிருக்கிறது. இதற்குக் கீழாக மேலேயுள்ள கேள்விக்குரிய பதில் கொடுக்கப்பட்டுள்ளது. முதலில் இந்தப் பதில்களை ஒரு அட்டையினால் மறைத்துவிட்டு, கேள்விக்குப் பதில் கொடுக்கும்படியாகக் கோடிட்ட இடங்களை நிரப்ப வேண்டும். பிறகு அட்டையை நகர்த்தி, கேள்விக்குச் சரியான பதிலை எழுதியிருக்கிறீர்களா என்று சரிபார்க்கலாம். இந்தப் பக்கங்கள் முழுவதிலும் இதே செய்முறையைப் பின்பற்றுங்கள்.

கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு முன்பாகக் கீழேயுள்ள பதில்களைப் பார்க்காதிருங்கள்.

1. மறைமுகத் தலைமைத்துவத்திலுள்ள **இரண்டு காரியங்களைக் கண்டுபிடிப்பதே இந்தப் பகுதியின் நோக்கமாகும்**.

   மறைமுக தலைமைத்துவம் நேரடியான தலைமைத்துவத்தைப் போன்றதல்ல.

   மறைமுகத் தலைமைத்துவம் இரண்டு காரியங்களை உள்ளடக்கியிருக்கிறது:

   a. தலைவர் குழுவுக்கு வழிகாட்டுகிறார்.

   b. குழுவினர் பங்கெடுக்கிறார்கள்.

   மறைமுகத் தலைமைத்துவம் தலைவரின் ______________ குழுவினரின் ______________ உள்ளடக்கியிருக்கிறது.

---

வழிகாட்டுதல் (Direction)    பங்கெடுத்தல் (Participation)

2. மறைமுகத் தலைமைத்துவத்தில் தலைவர் பிரசங்கம் செய்ய வேண்டிய அவசியமில்லை.

   தலைவர் ______________ கொடுக்க வேண்டும்.

---

வழிகாட்டுதல்

3. பேசுதல், பிரசங்கித்தல், பாடுதல், ஜெபித்தல் எல்லாவற்றையும் ஒரு தலைவர் செய்யும்போது அது இப்படிப்பட்ட தலைமைத்துவத்துக்கு எடுத்துக்காட்டாகும்.

a. நேரடித் தலைமைத்துவம்.

b. மறைமுகத் தலைமைத்துவம்.

---

நேரடித் தலைமைத்துவம் (Direct Leadership)

4. குழுவினர் விவாதத்தில் பங்கெடுக்க வேண்டும். தலைவர் ஆய்வைக் குறித்த விவாதத்தில் குழுவினரை வழிநடத்த வேண்டும். மறைமுகத் தலைமைத்துவத்தின் ஒரு முக்கியமான பகுதி குழுவினர்________________________ ஆகும்.

---

பங்கெடுத்தல்

5. மறைமுகத் தலைமைத்துவம் இரண்டு காரியங்களை உள்ளடக்கியிருக்கிறது:

a. ________________________.

b. ________________________.

---

தலைவரால் வழிகாட்டப்படுதல் குழுவினரின் பங்கெடுப்பு

6. இந்தப் பாடத்தின் நோக்கம்:; மறைமுகச் செயல்முறையைப் பின்பற்றி வேதாகம ஆய்வை நடத்தும்போது, பின்பற்ற வேண்டிய ஐந்து விதிகளை எடுத்துக் கூறுதல்.

7. **குழு உறுப்பினர்கள் பங்கெடுக்கும்படி தலைவர் அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.**

தலைவரே எல்லாவற்றையும் செய்யும்போது மறைமுகத் தலைமைத்துவம் இயலாததாகிவிடும். மறைமுகத் தலைமைத்துவத்தில் எல்லா உறுப்பினர்களும்________________________ ஊக்குவிப்பது அவசியமாகும்.

---

பங்கெடுக்கும்படி

8. ஒரு தலைவர் எல்லா விவாதங்களையும் மேலாதிக்கம் செய்யும்போது, குழு உறுப்பினர்களுக்குப் பங்கெடுக்கும் வாய்ப்புக் கிடைப்பதில்லை. இப்படி நேரிடும்போது தலைவர் ________________________ தலைமைத்துவத்தைச் செயல்படுத்தவில்லை.

---

மறைமுக தலைமைத்துவம்

9. குழு உறுப்பினர்கள் கேள்விகளை வாசித்தல், பதிலளித்தல் அல்லது அவர்கள் இரட்சிக்கப்பட்ட பிறகு ஜெபித்தல் ஆகியவைகளில் பங்கெடுக்க முடியும். மறைமுகத் தலைமைத்துவத்தில் யாரெல்லாம் மேலே கூறப்பட்டுள்ள காரியங்களில் பங்கெடுக்கலாம்?

a. தலைவர் மட்டுமே.

b. எல்லா உறுப்பினர்களும்.

---

எல்லா உறுப்பினர்களும்

10. ஒரு வேதாகம ஆய்வை நடத்துவதற்கு மறைமுகச் செயல்முறை பயன்படுத்தப்படும்போது பங்கெடுப்பது யார்?____________________ .

---

எல்லா உறுப்பினர்களும்

11. **குழு உறுப்பினர்களுக்காக கோடிட்ட இடங்களை நிரப்பும் கேள்விகளையும் பதில் களையும் கொண்ட ஒரு புத்தகத்தையோ அல்லது வாசிப்பதற்குரிய பிற புத்தகங் களையோ கொடுங்கள்**. இது ஆசிரியர் குழுவினருக்கு வழிகாட்டுதலைக் கொடுக்க உதவியாக இருக்கும்.

இவை உறுப்பினர்கள் பங்கெடுக்கும்படி அவர்களை ஊக்குவிக்கின்றன. ஆசிரியர் குழுவினருக்கு ____________________ கொடுக்க ஒரு பயிற்சிப் புத்தகம் உதவியாக இருக்கும். இது உறுப்பினர்கள் ____________________ ஊக்குவிக்கிறது.

---

வழிகாட்டுதல் பங்கெடுத்தல்

12. தலைவர் தெரிந்தெடுத்துள்ள பாடங்களைப் பின்பற்றுவது அவர் குழுவுக்கு வழிநடத்துதலைக் கொடுக்க உதவியாக இருக்கும். கூட்டத்தில் கலந்துகொள்ளும் யேகோவாவுக்குச் சாட்சிகள் குழுவைச் சேர்ந்த ஒருவர் அவருடைய பத்திரிக்கையை வாசிக்கத் துவங்குகிறார். இது தலைவர் குழுவினருக்குச் சரியான ____________________ கொடுக்கவில்லை என்றே அர்த்தமாகும்.

---

வழிநடத்துதலை

13. கோடிட்ட இடங்களை நிரப்பும் ஒரு ____________________ புத்தகத்தைக் குழுவினர் பின்பற்றும்போது, அவர்கள் தலைவரால் வழிநடத்தப்படுவது மட்டுமின்றி, பயிற்சி ____________________ வழிகாட்டப்படுகிறார்கள்.

---

பயிற்சி புத்தகம்

14. சிலர் கூச்சசுபாவமுள்ளவர்களாக இருக்கிறார்கள். வேறு சிலர் தாங்கள் எதைப் பேசுகிறோம் என்று அறியாவிட்டாலும் பேசிக்கொண்டேயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட இருவகை மக்களுக்கும் பங்கெடுப்பதில் பிரச்சினை இருக்கிறது. ஒரு கோடிட்ட இடங்களை நிரப்பும் பயிற்சிப் புத்தகத்தைப் பயன்படுத்துவது அல்லது வேறு நல்ல உபகரணத்தைப் பயன்படுத்துவது இந்த ____________________ பிரச்சினையைச் சரிசெய்வதற்கு உதவியாக இருக்கிறது.

---

பங்கெடுத்தல்

15. தலைவர் உறுப்பினர்களுக்கு வழிகாட்டி, அவர்கள் பங்கெடுப்பதை ஊக்குவிப்பது முக்கியமானதாகும். தலைவர் ஒரு ____________________கொடுக்கும்போதோ அல்லது வேறு நல்ல உபகரணத்தைக் கொடுக்கும்போதோ இதைச் செய்ய முடியும்.

---

பயிற்சிப் புத்தகம்

16. **அவிசுவாசிகளுக்கான ஒரு வேதாகம ஆய்வை நடத்தும்போது, தலைவருக்குப் பொறுமை தேவைப்படுகிறது**. மறைமுகச் செயல்முறையைப் பின்பற்றும்போது குறிப்பாகப் பொறுமை தேவைப்படுகிறது. குழுவில் சில உறுப்பினர்கள் அதிகமாகப் பங்கெடுக்க விரும்புவார்கள். சிலர் பங்கெடுக்காமல் ஒதுங்கியிருப்பார்கள். எப்போதுமே ____________________ இருக்க வேண்டும் என்பது தலைவர் பின்பற்ற வேண்டிய விதியாகும்.

---

பொறுமையாக

17. தலைவர் ஒரு கேள்வியைக் கேட்கும்போது, அதற்குப் பதிலளிக்க உறுப்பினர்கள் தாமதிக்கலாம். உறுப்பினர்கள் கேள்வியைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கும் வேளையில் தலைவர் பதிலளிக்கும்படி அவர்களை அவசரப்படுத்த நினைக்கலாம். ஆனால் தலைவர் ____________________ இருக்க வேண்டும்.

---

பொறுமையாக

18. குழுவிலுள்ள ஒரு உறுப்பினர் வேதாமகத்திலுள்ள ஒரு அதிகாரத்தையோ அல்லது வசனத்தையோ எப்படிக் கண்டுபிடிப்பது என்று அறியாதிருந்தால், ஒருவர் ____________________ செயல்முறையைப் பின்பற்றி வெற்றிகரமான தலைவராக விரும்பினால், பொறுமையோடிருப்பது அவசியமாகும்.

---

மறைமுகமாயிருத்தல்

19. மக்கள் பெரும்பாலும் மெதுவாகப் பங்கெடுக்கிறபடியால் தலைவர் ____________________ இருக்க வேண்டும்.

---

பொறுமையாக

20. நாம் மூன்று விதிகளை அல்லது கொள்கைகளைக் கற்றிருக்கிறோம். அவையாவன:

    a. எல்லா உறுப்பினர்களும் பங்கெடுக்கும்படி தலைவர் ஊக்குவிக்க வேண்டும்.

    b. அவர் உறுப்பினர்களுக்குஒரு பயிற்சிப் புத்தகத்தை அல்லது வேறு உபகரணத்தைக் கொடுக்க வேண்டும்.

    c. தலைவர் பொறுமையோடு செயல்பட வேண்டும்.

    தலைவர் ____________________ தலைமைத்துவத்தைப்பின்பற்றும்போது இந்த விதிகள் அவசியமாகும்.

---

மறைமுக

21. **ஒரு வேதாகம ஆய்வுக் குழுவுக்கு வழிகாட்டும்போது, தலைவர் பெருக்கமடையும் தலைமைத்துவத்தைச் செயல்படுத்த வேண்டும்**. பெருக்கமடையும் தலைமைத்துவம் என்பது ஒரு வகைப்பட்ட தலைமைத்தவமாகும். நீங்கள் செய்துகொண்டிருக்கும் காரியத்தைக் குழுவிலுள்ள உறுப்பினர்களும் விரைவிலேயே செய்யக்கூடியவர்களாக இருக்க வேண்டும்.

குழுவின் உறுப்பினர்களால் தனது தலைமைத்துவம்____________________ கூடிய அளவுக்குத் தலைவர் நடந்துகொள்ள வேண்டும்.

---

பெருக்கமடைதல்

22. ஒரு ஞானமுள்ள தலைவர் தனது தலைமைத்துவப் பொறுப்புக்களை மற்றவர்களுக்குக் கொடுப்பதைக் குறித்துச் சிந்திப்பார். எனவே தான் எப்படி வழிநடத்துகிறோம் என்பதைக் குறித்து அவர் எப்போதுமே கவனமாக இருக்க வேண்டும். ஏனென்றால் அவர் வருங்கால ____________________ முன்மாதிரியாக இருக்கிறார்.

---

தலைவர்களுக்கு

23. கூடுமான வரையில் குழுவினருக்கு முன்னால் தான் இருக்க வேண்டுமென்று நினைக்கும் ஒரு தலைவர் தனது இடத்தை எடுத்துக்கொள்ளும் தலைவர்களை உருவாக்குவதில் ஆர்வம் காட்டவில்லை. அவர் ____________________ தலைமைத்துவத்தைச் செயல்படுத்துவதில் ஆர்வம்கொண்டிருக்கவில்லை.

---

பெருக்கமடையும்

24. பெருக்கமடையும் தலைமைத்துவம் இப்படியிருக்க வேண்டும் (சரியான பதிலுக்கு ✓ குறியிடுங்கள்):

a. கிளர்ச்சியளிக்கக் கூடியது
b. ஒரு நல்ல ஒலியமைப்பைச் சார்ந்திருக்கிறது
c. எளிமையானதாகவும் தெளிவாகவும் இருக்கிறது
d. விவரமான விதிகளோடு அமைப்புச் சார்ந்ததாக இருக்கிறது
e. குழுவின் உறுப்பினர்களுக்கு இயல்பான மட்டத்தில் இருக்கிறது

---

எளிமையானதாகவும் தெளிவாகவும் இருக்கிறது, குழுவின் உறுப்பினர்களுக்கு இயல்பான மட்டத்தில் இருக்கிறது.

25. வருங்காலத் தலைவர்களால் ____________________ செய்யும் அளவுக்கு ஒரு நல்ல தலைவர் தனது தலைமைத்துவத்தைச் செயல்படுத்துவார்.

---

பெருக்கமடைய

26. மறைமுகத் தலைமைத்துவத்தில் குழு உறுப்பினர்கள் பங்கெடுக்க வேண்டுமென்று நாம் கற்றிருக்கிறோம். குழுவானது அதன் வெற்றிக்காகப் பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருக்க வேண்டும். **பரிசுத்த ஆவியானவரால் மட்டுமே உணர்த்துதலையும், மனமாற்றத்தையும் கொண்டுவர முடியும்.**

பரிசுத்த ஆவியானவரின் பணிகள் ____________________ மற்றும் ____________________.

---

உணர்த்துதல் மனமாற்றம்

27. ஒரு வலுவான தலைவரால் சில வேளைகளில் ஒருவர் தன்னுடைய மதத்தை மாற்றும்படி செய்ய முடியும். ஆனால் ____________________. உதவியில்லாமல் மனமாற்றம் உண்டாகாது.

---

பரிசுத்த ஆவியானவர்

28. குழுத் தலைவர்களால் யோவான் சுவிசேஷ வேதாகம ஆய்வின் வித்துக்களை விதைக்க முடியும். பரிசுத்த ஆவியானவரே அந்த வித்துக்கள் பயன்தரும்படி செய்கிறார். எனவே குழுத் தலைவர்கள் ____________________. சார்ந்திருக்க வேண்டும்.

---

பரிசுத்த ஆவியானவர்

29. பாவத்தைக் குறித்த உண்மையான உணர்வையும், மனமாற்றத்தையும் கொண்டுவரக் கூடியவர் யார்?

____________________.

---

பரிசுத்த ஆவியானவர்

30. தலைமைத்துவத்தின் மறைமுகச் செயல்முறையைப் பயன்படுத்தும்போது பின்பற்ற வேண்டிய ஐந்து விதிகள் அல்லது கொள்கைகளைக் குறித்து நாம் பார்த்தோம். அவைகளைப் பட்டியலிடுக:

a. தலைவர் ____________________ பங்கெடுக்கும்படி ஊக்குவிக்க வேண்டும்.
b. உறுப்பினர்களுக்கு ஒரு ____________________ அல்லது வாசிக்கும் நூல்களைக் கொடுக்க வேண்டும்
c. தலைவர் எப்போதுமே ____________________ இருக்க வேண்டும்.
d. தலைவர் ____________________ தலைமைத்துவத்தைச் செயல்படுத்த வேண்டும்.
e. ____________________ மட்டுமே மெய்யான உணர்த்துதலையும், மனமாற்றத்தையும் கொண்டுவர முடியும்.

---

a. எல்லா உறுப்பினர்களும்
d. பெருக்கமடையும்
b. பயிற்சிப் புத்தகம்
e. பரிசுத்த ஆவியானவர்
c. பொறுமை

31. மறைமுகத் தலைமைத்துவத்தில் ஒரு தலைவர் பின்பற்ற வேண்டிய ஐந்து காரியங்களைப் பற்றி இதுவரை பார்த்தோம். இப்போது ஒரு தலைவர் ஒரு வேதாகம ஆய்வுக் குழுவை வழிநடத்தும்போது ஒருபோதும் செய்யக்கூடாத மூன்று காரியங்களைப் பற்றிப் பார்ப்போம்.

32. பெரும்பாலும் ஒரு வேதாகம ஆய்வுக் குழுவின் தலைவர் குழு உறுப்பினர்களைவிடத்தானே அந்த வேதாகம ஆய்வைக் குறித்து அதிகமாக அறிந்திருக்கலாம். சில வேளைகளில் தலைவர் இந்தச் சிலாக்கியத்தைக் குறித்துப் பெருமைப்படலாம். **அப்போது விவாதிக்கப்படும் ஒவ்வொரு காரியத்தைக் குறித்தும் தான் அறிந்திருக்கும் ஒவ்வொரு காரியத்தையும் தான் சொல்ல வேண்டும் என்று நினைக்கலாம்**. இந்த மனோபாவம் ____________________ .

a. விரும்பத்தகுந்தது.
b. மறைமுகத் தலைமைத்துவத்துக்கு விரும்பத்தகாததாகும்.

---

விரும்பத்தகாதது

33. தேவனை அறியும் அறிவிலும், அவரோடுள்ள உறவிலும் பாதுகாப்பாக இருக்கும் ஒரு தலைவர் தான் அதைக் குறித்து ____________________ ____________________ நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை என்பதை உணர்கிறார்.

---

அறிந்ததை எல்லாம்

34. தலைவர் மௌனமாகக் கவனித்துக்கொண்டிருப்பது அறியாமையைக் குறிக்கவில்லை. ஒரு தலைவர் அமைதியாக இருக்கிறபடியால் அவர் ஒன்றையும் ____________________ என்று அர்த்தமாகாது.

---

அறியவில்லை

35. ஒவ்வொரு தலைப்பிலும் தான் ____________________ வேண்டும் என்று தலைவர் நினைக்கக்கூடாது.

a. தெரிந்த எல்லாவற்றையும் சொல்ல
b. அதிகாரபூர்வமாக இருக்க
c. செவிகொடுக்க

---

தெரிந்த எல்லாவற்றையும் சொல்ல அதிகாரபூர்வமாக இருக்க

36. ஒரு வேதாகம ஆய்வுக் குழுவில், யாராவது ஒருவர் தனது அறிவைக் காட்டும்படி முன்வருவார். இந்த நபரை நாம் "தத்துவஞானி" என்று அழைக்கிறோம். **இப்படிப்பட்டவர்களோடு விவாதிப்பது நேரத்தை வீணாக்குவதாகும்**. இந்த "தத்துவஞானிகள்" பொதுவாக ____________________ ஆக இருக்கிறார்கள் (ஒன்றுக்கு மேலானதைத் தெரிந்துகொள்ளவும்)

a. மெய்யாகவே சத்தியத்தைத் தேடுகிறவர்கள்
b. தங்கள்மீது கவனத்தைத் திருப்ப விரும்புகிறார்கள்
c. பேச விரும்புகிறார்கள்

---

தங்கள்மீது கவனத்தைத் திருப்ப விரும்புகிறார்கள்

பேச விரும்புகிறார்கள்

37. ஒருபோதும் மெய்யான இரட்சிப்பை அனுபவித்திராத ஒரு "தத்துவஞானியால்" ஆவிக்குரிய காரியங்களை அனுபவிக்க முடியாது. ஒரு தலைவர் இவர்களோடு இந்த இரண்டு காரியங்களில் எதைக் குறித்துப் பேச வேண்டும்:

a. இரட்சிக்கப்படுவது எப்படி
b. திரித்துவம்

---

இரட்சிக்கப்படுவது எப்படி

38. ஒரு "தத்துவஞானி" மிக விரைவாகப் பேசும் தலைப்பை மாற்றிக்கொள்ளுவார். அப்போது அந்தக் கணத்தில் அவர் ஆய்வின் தலைவராகிறார். இந்த விவாதம் குழுவின் மற்ற உறுப்பினர்களுக்கு __________________ கொண்டுவரும்.

a. குழப்பத்தை
b. தெளிவை

---

குழப்பத்தை

39. தத்துவஞானிகளோடு __________________ உண்டாகுமானால் வேதாகம ஆய்வுக் குழுவினர் குழப்பமடைவார்கள்.

---

விவாதம்

40. மறைமுகத் தலைமைத்துவம் என்றால் குழுவில் அநேக உறுப்பினர்கள் பங்கெடுக்க வேண்டும் என்று அர்த்தமாகும். **ஒருவரே விவாதத்தில் மேலாதிக்கம் செய்யாதபடி தலைவர் கவனித்துக் கொள்ள வேண்டும்**. ஒருவரே முழு நேரத்தையும் எடுத்துக்கொண்டால் தலைவர் நல்லதொரு __________________ தலைமைத்துவத்தைப் பின்பற்றவில்லை என்று அர்த்தமாகும்.

---

மறைமுகமாக

41. ஒருவரே நேரம் முழுவதையும் எடுத்துக்கொள்ளும்போது குழுவின் பல உறுப்பினர்களுக்கு __________________ முடியாமல் போய்விடுகிறது.

---

பங்கெடுக்க

42. நல்லதொரு மறைமுகத் தலைமைத்துவம் செயல்படுத்தப்படுமானால், குழு உறுப்பினர்கள் எல்லோரும் முழுமையாகப் பங்கெடுப்பதை உறுதிப்படுத்துவது __________________ பொறுப்பாகும்.

---

தலைவரின்

43. மறைமுகத் தலைமைத்துவமானது ______________ அல்லது ______________ விவாதத்தில் மேலாதிக்கம் செய்வதை அனுமதிப்பதில்லை .

a. ஒருவர்
b. இருவர்
c. எல்லா உறுப்பினர்களும்

---

ஒருவர் இருவர்

44. ஒரு தலைவர் ஒருபோதும் செய்யக்கூடாத மூன்று காரியங்களைக் குறித்து நாம் படித்தோம். அந்த மூன்று காரியங்கள்:

a. தலைவர் விவாதிக்கப்படும் தலைப்பைப் பொருத்தவரையில் தான் ______________ ______________ சொல்ல வேண்டுமென்று நினைக்கக் கூடாது.
b. தலைவர் தத்துவஞானிகளோடு ______________ கூடாது.
c. முழு ஆய்வையும் ______________ மேலாதிக்கம் செய்யத் தலைவர் அனுமதிக்கக் கூடாது.

---

a. அறிந்த எல்லாவற்றையும்
b. விவாதிக்க
c. ஒருவர்

45. இப்போது, புதிய சபைகளைத் துவக்குவதற்கு தலைமைத்துவத்தின் மறைமுகச் செயல்முறை ஏன் நல்ல செயல்முறையாக இருக்கிறது என்பதற்கான இரண்டு காரணங்களைப் பார்ப்போம்.

46. நாம் மறைமுகச் செயல்முறையைப் பின்பற்றும்போது, **தலைமைத்துவத்தின் பொறுப்புக்களை குழுவின் மற்ற உறுப்பினர்களுக்கு மாற்றுவது எளிதாக இருக்கிறது**. இது பிறகு சபையாக உருவாகப்போகிற வேதாகம ஆய்வுக் குழுவுக்குத் தலைமையைக் கொடுப்பதற்கு எளியதொரு பதிலாகும். தலைமைத்துவத்தை ______________ ஒரு ஞானமுள்ள தலைவரின் முக்கிய பண்புகளில் ஒன்றாகும்.

---

மாற்றுவது

47. மற்றொரு குழுவின் (சபை) போதகராக இருக்கும் தலைவரால் தான் துவங்கயிருக்கும் குழுவோடு சந்திப்பைத் தொடருவது இயலாத காரியமாகும். இதன் காரணமாக இந்தக் குழுவுக்கு ஒரு புதிய தலைவரைக் கண்டுபிடிப்பது அவசியமாகும். தலைவர் ______________ வருவது இயல்பான காரியமாகும்.

---

குழுவிலிருந்தே

48. ஒரு ஞானமுள்ள தலைவர் குழுக்கூட்டங்களில் முதலிலிருந்தே மறைமுகச் செயல்முறையைப் பின்பற்றுகிறபடியால், வளர்ந்துவரும் குழுவில் உறுப்பினர்கள் பங்கெடுப்பது இயல்பானதாகும். சில உறுப்பினர்கள் தலைவர்களாக ஆவதும் ______________ இருக்கிறது.

---

இயல்பானதாக

49. வேதாகமஆய்வின்துவக்கத்திலிருந்தேஎல்லாஉறுப்பினர்களும்பங்கெடுக்கும்படிஊக்குவிக்கப் படுகிறபடியால், உறுப்பினர்கள் தொடர்ந்து ______________ இயல்பான காரியமாகும். பிறகு ஓரிரு உறுப்பினர்கள் ______________ ஆவார்கள்.

---

பங்கெடுப்பது தலைவர்களாக

50. ஒரு தலைவரால் ஒரு குறிப்பிட்ட வேதாகம ஆய்வுக் குழுவுக்கு எப்போதுமே தலைவராகத் தொடர முடியாது அல்லது தொடர மாட்டார் என்கிறபடியால், வருங்காலத்துக்காக அவர் எப்படித் திட்டமிட வேண்டும்?

அவர் குழுவின் உறுப்பினர்களுக்குத் தலைமைத்துவத்தை ______________ வேண்டும்.

---

மாற்ற

51. இந்தப் பாடத்தில் நாம் படித்த மறைமுகச் செயல்முறையை நீங்கள் பயன்படுத்தும்போது, **ஒரு அனுபவம் வாய்ந்த தலைவராலோ, பயிற்சியினாலோ அல்லது பணத்தினாலோ கட்டுப்படுத்தப் படாத புதிய குழுக்களைத் துவங்கி வழிநடத்த முடியும்**.

அதாவது பல மக்களால் புதிய குழுக்களை ______________ முடியும்.

---

வழிநடத்த

52. புதிய கிறிஸ்தவனாக இருக்கும் தலைவர் அவர் அதிகமான ______________ பெறாவிட்டாலும் அவரால் ஒரு வேதாகம ஆய்வுக் குழுவுக்கு வழிகாட்ட முடியும்.

---

அனுபவம்

53. கோடிட்ட இடத்தில் "சரி" அல்லது "தவறு" என்று எழுதுங்கள்:

a. ______________ விரிவான இறையியல் பயிற்சி பெற்றுள்ள ஒருவரால் ஒரு வீட்டு வேதாகம ஆய்வுக் குழுவை நடத்த முடியும்.

b. ______________ அதிகமாகப் பயிற்சி பெறாத ஒரு விவசாயியால் ஒரு வீட்டு வேதாகம ஆய்வுக் குழுவை நடத்த முடியும்.

---

இரண்டு பதில்களும் சரியானவையாகும்

54. யாரிடம் ஒரு வீட்டு வேதாகம ஆய்வுக் குழுவைத் துவங்குவதற்குப் போதுமான பணம் இருக்கிறது? (ஓரிரு பதில்களைத் தெரிந்துகொள்ளலாம்).

a. ஒரு வழக்கறிஞர்

b. ஒரு தச்சர்

c. ஒரு டாக்டர்

d. ஒரு ஆசிரியர்

e. ஒரு தொழிற்சாலைப் பணியாளர்

---

வழக்கறிஞர்/ தச்சர் / டாக்டர் / ஆசிரியர் / தொழிற்சாலைப் பணியாளர்

55. நாம் இதுவரை கற்றுக்கொண்டபடி, ஒரு வீட்டு வேதாகம ஆய்வுக் குழுவைத் துவங்குவதற்கு மறைமுகத் தலைமைத்துவமே மிகச் சிறந்த தலைமைத்துவமாகும். அதன் மூலம் சபைகளைத் துவங்க முடியும். இவைகளின் காரணமாக இது சிறந்த செயல்முறையாக இருக்கிறது:

a. தலைமைப் பொறுப்பைக் குழுவின் மற்றொரு உறுப்பினருக்கு ________________ எளிதாக இருக்கிறது.

b. ஒருவருக்கு அதிகமான ________________ ________________ ________________ தேவைப்படாதபடியால் பலரால் இந்தக் குழுக்களைத் துவங்க முடியும்.

---

a. மாற்ற

b. அனுபவம், பயிற்சி, பணம்

56. **நாம் கற்றுக்கொண்டவைகளை மறுஆய்வு செய்வோம்:**

I. மறைமுகத் தலைமைத்துவம் இரண்டு காரியங்களை உள்ளடக்கியிருக்கிறது:

1. தலைவரின் ______________________

2. உறுப்பினர்களின் ______________________

II. ஒரு வேதாகம ஆய்வுக் குழுவை வழிநடத்தும்போது ஐந்து காரியங்களை நினைவில் வைத்திருக்க வேண்டும்:

1. தலைவர் எல்லா ______________________ ______________________ ஊக்குவிக்க வேண்டும்.
2. ஒரு ______________________ புத்தகத்தை அல்லது ______________________ வேறு நல்ல உபகரணங்களைக் கொடுக்க வேண்டும்.
3. தலைவர் ______________________ இருக்க வேண்டும்.
4. தலைவர் ______________________ தலைமைத்துவத்தைச் செயல்படுத்த வேண்டும்.
5. ______________________ மட்டுமே பாவத்தைக் குறித்த உணர்வையும், மெய்யான மனமாற்றத்தையும் கொடுக்க முடியும்.

III. புதிய சபைகளைத் துவங்குவதற்கு தலைமைத்துவத்தின் மறைமுகச் செயல்முறையே சிறப்பானது என்பதற்கான இரண்டு காரணங்களைக் கொடுக்கவும்:

1. ______________________________________________

______________________________________________

2. ______________________________________________

______________________________________________

மறு ஆய்வுக்கான பதில்கள்:

I.

1. வழிகாட்டுதல்
2. பங்கெடுத்தல்

II.

1. உறுப்பினர்களின் பங்கெடுப்பை
2. பயிற்சி வாசிப்பதற்கு
3. பொறுமையோடு
4. பெருக்கமடையும்
5. பரிசுத்த ஆவியானவர்.

III.

1. தலைவரால் குழு உறுப்பினர்களுக்குத் தலைமைத்துவத்தை எளிதாகவும், விரைவாகவும் மாற்ற முடியும்.
2. ஒரு தலைவருக்கு அதிகமான அனுபவமோ, பயிற்சியோ அல்லது பணமோ இல்லாவிட்டாலும் அவரால் ஒரு புதிய வீட்டு வேதாகம ஆய்வைத் துவங்க முடியும்.

## முன்னோடி சுவிசேஷ ஊழியர் மற்றும் வேதாகம ஆய்வு உபகரணங்கள் இல்லாமல் ஒரு வீட்டு வேதாகம ஆய்வை வழிநடத்துவது எப்படி?

**தாமஸ் வேட் அகின்ஸ்**

பரிசுத்த ஆவியானவரே தேவனுடைய வார்த்தையை ஆய்வுசெய்வதற்குத் திறவுகோலாக இருக்கிறார். யோவான் 16:13-14 வசனங்களில் இயேசு "**சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்**" என்று சொல்லியிருக்கிறார். இயேசுவே சத்தியமாக இருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் உங்கள் இருதயத்தில் சத்தியத்தை வெளிப்படுத்துகிறார்.

வேதாகமத்தை நீங்கள் வாசிக்கும்போது, ஏதேனும் ஒரு வார்த்தை திடீரென்று தெளிவாகி, பரிசுத்த ஆவியானவர் ஒரு சத்தியத்தை உங்களுக்குச் சொல்லியிருக்கிறாரா? நான் பல முறை இதை அனுபவித்திருக்கிறேன். ஒருமுறை நான் கடினமான அனுபவத்தைக் கடந்துசெல்ல வேண்டியிருந்தது. கிட்டத்தட்ட இருண்டுபோன ஒரு குழியில் கிடப்பதுபோல நான் உணர்ந்தேன். என்றாலும், அந்தக் குழியின் அடிவாரத்தில் வெளிச்சம் - இயேசுவின் வெளிச்சம் இருந்தது. தேவனிடமிருந்து ஒரு வார்த்தையைப் பெறும்படியாக நான் வேதாகமத்தை வாசிக்கத் துவங்கினேன். ஏசாயாவின் புத்தகத்தை நான் வாசிக்கத் துவங்கினேன். 43ஆம் அதிகாரத்தை நான் வாசித்துக்கொண்டிருந்தபோது, பரிசுத்த ஆவியானவர் சட்டென்று என்னுடைய ஆத்துமாவின் ஆழத்தில் இரண்டாம் வசனத்தைத் தெளிவுபடுத்தினார்: "**நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை; நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய்; அக்கினிஜீவாலை உன்பேரில் பற்றாது.**" தேவன் இந்தச் சத்தியத்தை என் இருதயத்தில் பேசியபோது, என் ஆத்துமாவில் சமாதானம் பாய்ந்துவந்தது. நான் இன்னும் பல நாட்கள் அக்கினியின் சோதனையைக் கடந்து நடக்க வேண்டியிருந்தது. ஆனால் தேவன் தனிப்பட்ட முறையில் தமது சத்தியத்தை எனக்குச் சொல்லியிருந்தபடியால் அக்கினி என்னைப் பற்றாது என்பதை நான் அறிந்திருந்தேன்.

தான் வேதாகமப் பாடங்களைப் **போதிக்கவில்லை**, அவைகளை வழிநடத்துகிறோம் என்பதைத் தலைவர் நினைவில் வைத்திருக்க வேண்டும். பங்கெடுப்பவர்கள் பங்கெடுக்கக் கூடிய வகையில் அவர் வழிகாட்டுகிறார். அவர் வசனத்தை வாசிப்பதில்லை, குழுவிலுள்ள ஒருவர் அதை வாசிக்கும்படி செய்கிறார். அந்த வசனத்தில் என்னென்ன சத்தியங்கள் இருக்கின்றன என்று அவர் சொல்லுவதில்லை, ஆனால் குழுவினர் இந்தச் சத்தியங்களைக் கண்டுபிடிக்கும்படி கேள்விகளைக் கேட்கிறார். வேதாகமத்தைத் தனிமையில் படிக்கும்போதுதான், தேவன் தமது சத்தியங்களை உங்களுக்குக் கூறுகிறார், அவைகளை நீங்கள் குழுவினரோடு பகிர்ந்துகொள்ள வேண்டுமென்று அவர் விரும்புகிறார். வேதாகமத்தை எப்படி வாசிப்பது என்பது குறித்துக் கூடுதலான விளக்கத்தைப் பெற ``தேவனுடைய வார்த்தைக்குச் செவிகொடுத்தல்" என்ற பகுதியை வாசியுங்கள் (பக்கம் ).

பின்பற்ற வேண்டிய சில படிகளை நான் கீழே கொடுத்திருக்கிறேன்:

**படி 1**: குழுத் தலைவர் ஆய்வுசெய்வதற்காக ஒரு பகுதியைத் தெரிந்துகொள்ளுவார். அவர் ஒரு புத்தகத்தின் முதல் வசனத்திலிருந்து துவங்கி ஒவ்வொரு அதிகாரத்திலுமுள்ள ஒவ்வொரு வசனத்தையும் ஆய்வுசெய்யலாம். எடுத்துக்காட்டாக, நீங்கள் யோவான் சுவிசேஷத்தின், முதல் அதிகாரம், முதல் வசனத்திலிருந்து துவங்கலாம்.

**படி 2**: குழுவிலுள்ள யாராவது முதல் வசனத்தை வாசிக்கும்படி தலைவர் கேட்டுக்கொள்ளுவார்.

**படி 3**: தலைவர் எளிய, நவீன மொழியைப் பயன்படுத்தி அந்த வசனத்தை மறுபடியுமாக வாசிப்பார். அதாவது அவர் அந்த வசனத்தின் விளக்கத்தைக் கொடுப்பார். அவர் எளிய வடிவத்தில் வசனத்தைத் திருப்பிக் கூறுவார்.

**படி 4**: வசனத்தை வாசித்த பிறகு, அந்த வசனத்தில் ஏதேனும் ஆவிக்குரிய சத்தியம் இருக்கிறதா என்று கண்டுபிடிக்கும்படி தலைவர் கேள்விகளைக் கேட்பார். இப்படிப்பட்ட கேள்விகளைக் கேளுங்கள்: யார், எப்படி, என்ன, எப்போது, எங்கே, ஏன், எப்படி?

இப்படிப்பட்ட கேள்விகளைக் கேளுங்கள்:

1. இந்த வசனம் தேவனைப்பற்றி என்ன சொல்லுகிறது?
2. இந்த வசனம் இயேசுவைப்பற்றி என்ன சொல்லுகிறது?
3. இந்த வசனம் பாவத்தைப்பற்றி என்ன சொல்லுகிறது?
4. இந்த வசனம் கீழ்ப்படிதலைப்பற்றி என்ன சொல்லுகிறது?
5. இந்த வசனம் என்னைக் குறித்து என்ன சொல்லுகிறது?
6. இந்த வசனத்தில் எந்த ஆவிக்குரிய சத்தியம் அல்லது சத்தியங்கள் இருக்கின்றன?

**படி 5**: பிறகு தலைவர் அந்த வசனத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஆவிக்குரிய சத்தியத்துக்குப் பொருத்தமான வசனங்கள் வேதாகமத்தின் பிற பகுதிகளில் இருக்கின்றனவா என்பதைக் குழுவுக்குக் காட்ட வேண்டும். அதாவது, அந்த வசனத்தின் சத்தியத்தை எடுத்துக்காட்டி, இன்னும் தெளிவாக்கும் வேறு வசனங்கள் வேதாகமத்தில் உண்டா என்று காட்ட வேண்டும்.

**படி 6**: பிறகு தலைவர் அந்த வசனத்தைச் செயல்படுத்திக் காட்ட வேண்டும். அந்த வசனத்தில் உங்கள் பெயரையும், பிரதிப் பெயர்ச்சொற்களையும் இட்டு அதை உங்களுக்குச் சொந்தமாக்கிக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு சத்தியத்தையும் தனிப்பட்ட முறையில் விவாதித்து, குழுவிலுள்ள ஒவ்வொருவருக்கும் அதைப் பொருத்திக் காட்டுங்கள். ஒவ்வொருவரிடமும் இந்தக் கேள்வியைக் கேளுங்கள்: இந்த வசனத்தின் சத்தியம் உங்களுக்கு எப்படிப் பொருந்திவருகிறது? இந்த வசனம் தனிப்பட்ட முறையில் உங்களுக்குக் கூறுவது என்ன? உங்கள் குழுவிலுள்ள ஒவ்வொருவரும் பதிலளிக்க அனுமதியுங்கள்.

**படி 7**: முதலாம் வசனத்தை இப்படி ஆராய்ந்து முடித்த பிறகு, இரண்டாம் வசனத்துக்குச் செல்லுங்கள். இப்படியே முழுப் புத்தகத்திலுள்ள ஒவ்வொரு வசனத்தையும் ஆராய்ந்து பாருங்கள்.

**படி 8**: ஆய்வின் முடிவில் குழுவினரை ஜெபத்தில் வழிநடத்துங்கள். ஆய்வுசெய்யப்பட்ட பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட ஆவிக்குரிய சத்தியங்களைக் குறித்து ஜெபியுங்கள்.

### எடுத்துக்காட்டு

**படி 1**: ஒரு புத்தகத்தை அல்லது பகுதியைத் தெரிந்துகொள்ளுங்கள். நாம் யோவான் சுவிசேஷத்தைத் தெரிந்துகொள்ளுவோம்.

**படி 2**: குழுவிலுள்ள எவராவது முதல் வசனத்தை வாசிக்கும்படி கேட்டுக்கொள்ளுங்கள். யோவான் 1:1, "**ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது.**"

**படி 3**: இந்த வசனத்தை எளிமைப்படுத்திக் கூறுங்கள். ஆதியில் ஒரு சிருஷ்டிகர் இருந்தார் என்றும் அவர் தேவனாகவும், தேவனோடும் இருந்தார் என்று இந்த வசனம் சொல்லுகிறது.

**படி 4**: கேள்விகள்:

1. இந்த வசனம் தேவனைப்பற்றிச் சொல்லுவது என்ன? அவர் துவக்கத்திலிருந்து இருக்கிறார். அவரே துவக்கமாக இருக்கிறார். அவர் வார்த்தையாக இருக்கிறார்.
2. இந்த வசனம் இயேசுவைப்பற்றிச் சொல்லுவது என்ன? நீங்கள் 14ஆம் வசனத்தை வாசித்தால், இந்த வார்த்தை இயேசுவே என்று கண்டுகொள்ளுவீர்கள். எனவே இயேசு கிறிஸ்து தேவனாக இருக்கிறார்.

**படி 5**: தொடர்புள்ள மற்ற வசனங்களை வாசியுங்கள்: யோவான் 1:14 வசனம் இப்படிச் சொல்லுகிறது: **"அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது."**

கூடுமானவரையில் அதிகமான கேள்விகளைக் கேட்டு, குழுவினர் - தலைவர் அல்ல - பதிலளிக்கும்படி செய்யுங்கள்:

1. மாம்சமாகியது யார்? இயேசு
2. நமக்குள்ளே வாசம்பண்ணியது யார்? இயேசு
3. அவருடைய மகிமையைக் கண்டது யார்? யோவான், இந்தப் புத்தகத்தை எழுதியவர்
4. யோவான் இயேசுவில் கண்டது என்ன? அவருடைய மகிமை
5. "அவருடைய மகிமை" என்பதின் அர்த்தம் என்ன? அவர் உயர்த்தப்பட்டு, மகிமைப்படுத்தப் பட்டிருக்கிறார் என்பது இதற்கு அர்த்தமாகும்.
6. யோவான் இயேசுவில் வேறு எதைக் கண்டார்? அவர் பிதாவிடமிருந்து வந்தார்.
7. யோவான் இயேசுவில் வேறு எதைக் கண்டார்? அவர் கிருபை நிறைந்தவராக இருந்தார்.
8. கிருபை என்றால் என்ன? நமக்குத் தகுதியில்லாத காரியங்களைத் தேவன் நமக்காகச் செய்வதே கிருபையாகும். இயேசு கிருபையாக இருக்கிறார்.
9. சத்தியம் என்றால் என்ன? சத்தியம் பொய்க்கு எதிர்ப்பதமாகும். இயேசு தாம் யாரென்பதிலும், தாம் சொல்லிய எல்லாவற்றிலும் சத்தியம் நிறைந்தவராக இருக்கிறார்.

**படி 6**: இந்த வசனத்தைச் செயல்படுத்துங்கள். இந்த வசனம் நமக்குப் போதிப்பது என்ன? இந்த வசனத்தில் காணப்படும் **ஆவிக்குரிய சத்தியங்கள்** யாவை? அவைகளைத் தனிப்பட்டதாக்கிக் கொள்ளுங்கள். குழுவினர் பதிலளிக்கத் தலைவர் அனுமதிக்க வேண்டும்.

இந்த வசனத்திலுள்ள சில சத்தியங்கள்:

1. தேவன் ஆதி முதல் இருக்கிறார்.
2. அவருக்குத் துவக்கமோ முடிவோ கிடையாது.
3. அவர் நித்தியராக இருக்கிறார்.
4. இயேசு தேவனாக இருக்கிறார்.
5. இயேசு இந்த உலகத்தின் சிருஷ்டிகர்.
6. இயேசு என்னைச் சிருஷ்டித்தார் (தனிப்பட்டதாக்குதல்).
7. இயேசு கிருபையும் சத்தியமும் நிறைந்தவராக இருந்தார். எனக்குத் தகுதியில்லாததை இயேசு எனக்குக் கொடுத்தார். உண்மையானதை இயேசு எனக்குப் போதிக்கிறார். (நான், என்னுடைய போன்ற பிரதிப் பெயர்ச் சொற்களைப் பயன்படுத்துங்கள்).

**படி 7**: அடுத்த வசனத்தை வாசித்து, இதே செயல்முறையைப் பின்பற்றுங்கள். ஒவ்வொரு வாரமும் இதைத் தொடர்ந்து முழுப் புத்தகத்தையும் ஆய்வுசெய்யுங்கள். யோவான் சுவிசேஷத்தை முடித்த பிறகு மற்றொரு புத்தகத்தை எடுத்து, இப்படியே செய்யுங்கள்.

**படி 8**: ஜெபத்தோடு முடியுங்கள். தேவன் ஆய்வுசெய்யப்பட்ட பகுதியின்மூலம் உங்களுக்கும் குழுவினருக்கும் வெளிப்படுத்திய ஆவிக்குரிய சத்தியங்களைக் குறித்து ஜெபியுங்கள்.

ஒரு வேதாகம ஆய்வை வழிநடத்துவதற்கு உதவியாகப் பல நல்ல உபகரணங்கள் இருக்கின்றன. ஆனால் வேதாகமத்தை மட்டுமே பயன்படுத்தி, இங்கே குறிப்பிடப்பட்டுள்ளபடி கேள்விகளையும், பரிசுத்த ஆவியானவர் உங்கள் இருதயத்தில் உணர்த்தும் கேள்விகளையும் கேட்பது நலமாகும். போதுமான உபகரணங்கள் இல்லை என்ற சொல்லி வேதாகம ஆய்வை நடத்தத் தவறிவிடாதீர்கள். பரிசுத்த ஆவியானவர் தமது சத்தியங்களின் மூலமாக இருதயத்தில் தூண்டுதலையும், தெளிவையும் அளிக்க அனுமதிக்கும் சந்தோஷத்தைக் கண்டுகொள்ளுங்கள்.